கல்கி

KALKI 9.6.91 ரூ. 2.50



அச்வினி:

சீரான ஓட்டம் சினிமாவில் நாட்டம்

அழகிலும் முதல் ஆட்டத்திலும் முதல்!



இந்த ஆண்டு பாரிஸில் நடைபெறும் பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் மகளிர் போட்டியில் கலந்து கொண்டு, சாதனை படைக்க வேண்டும் என்று துடிதுடித்துக் கொண்டு இருக்கிறார், இருபதே வயதைத் தாண்டிய ஆர்ஜென்டீனா ஆட்டக்காரி கேப்ரியலா சபாடினி.

ஆறு வருடங்களுக்கு முன், டென்னிஸ் ஆட்டத்தில் தம்மால் எதுவும் சாதிக்க முடியுமா என்று மனம் புழுங்கிக் கொண்டிருந்தவர் சபாடினி. ''மனதில் உறுதி வேண்டும்!'' என்று தைரியம் சொன்னார் ஜிம் லோர். ஜிம் விளையாட்டுத் துறை உளவியல். நிபுணர். ''உன்னால் முடியும் தங்கச்சி!'' என்று உசுப்பி விட்டார். சபாடினியின் முன்-கை வீச்சு, பின்-கைவீச்சு, வீச்சு அடி எல்லாவற்றையும் வீடியோ படமாக எடுத்து, அவருக்குப் பிடித்தமான பின்னணி இசை சேர்த்து, ''உனக்கு எப்போதெல்லாம் இந்த வீ டி யோ ஆட்டத்தைப் பார்க்கத் தோன்றுகிறதோ, அப்போதெல்லாம் பார்!'' என்று சொன்னார்.

இதற்கெல்லாம் பலன் கிடைத்தது. 1990 யு. எஸ். ஓபன் டென்னிஸ் போட்டியில் உணர்ச்சி பொங்க ஆடி ஸ்டெஃபி கிராபைத் தோற்கடித்தார். உலகின் மூன்றாவது இடத்தில் இருந்தவர், சமீபத்தில் ரோமில் நடந்த போட்டியில், முதலாவது இடத்திலிருக்கும் மோனிகா செலஸை வெற்றி கொண்டார்.

தன்னம்பிக்கை; உறுதி; வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்ற தீர்மானம் எல்லாம் கொண்ட சபாடினி, ஜெர்மன் ஓபன் டென்னிஸிலும் வென்றார்.

இப்போது மு க் கி ய ம ா ன கட்டம்: பிரெஞ்சு ஓபன் டென்னிஸ். ஏற்கெனவே நாலு மிலியன் டாலர்களைப் பரிசாகக் குவித்திருக்கும் சபாடினி, இதில் வெற்றி பெற்றால் அப்புறம் முதல் நிலையை எட்டி விடுவார்! ''இந்த ஆண்டு முழுக்க கேப்ரியலா நன்றாக ஆடி வருகிறாள்!'' என்று ஸ்டெஃபி கிராபே பாராட்டியிருக்கிறார்.


பாரிஸில், ரோலண்ட் காரோஸ் செம் மண் விளையாட்டுக் களத்தில், சபாடினி சக்கைப்போடு போடுவார் என்று அவரது ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். சபாடினியின் தன்னம்பிக்கையை இன்னும் வளர்த்து விட்டிருக்கிறார் அவரது புதிய கோச், கர்லோஸ் கிர்மயர்.

அப்பா ஆஸ்வால்டோ, அம்மா பீட்ரிஸ், சகோதரர் ஜூனியர் ஆஸ்வால்டோ எல்லோருமே சபாடினியின் ஆட்டத்தில் அக்கறை கொண்டவர்கள். சபாடினிக்குக் குடும்பப் பாசம் அதிகம்.

ஆங்கிலம் தெரியுமென்றாலும், ஸ்பானிஷில்தான் வெளுத்து வாங்குவார் சபாடினி. சீட்டு விளையாட்டிலும் கெட்டிக் காரி.

முன்பு பத்திரிகையாளர் கூட்டத்தில் எல்லாம், மிரண்டு போன பார்வையுடன் பதில் சொல்லத் தயங்கிக் கொண்டிருந்த சபாடினிக்கு, ஆட்டத்தில் மட்டுமல்ல, கேள்விகளையும் சுலபமாகச் சமாளிக்கும் சக்தி வந்து விட்டது இப்போது! கூடவே, அசர வைக்கும் அழகு!

- சித்தார்த்



அழகிய முகம் எங்கே? அறிவொளிக் கண்கள் எங்கே?

ராஜீவ் காந்தியின் கோர மரணத்தைப் பற்றிக் கேட்டவுடன், செய்தி உண்மையாக இருக்குமா? அல்லது தேர்தல் சமயத்தில் உலவும் பல வதந்திகளில் இதுவும் ஒன்றா? என்றுதான் முதலில் தில்லி மக்கள் சந்தேகப்பட்டார்கள். செய்தி உண்மைதான் என்றறிந்ததும் 1984 ஆம் ஆண்டு கலவரங்களை, இன்னமும் மறக்காத தில்லிவாசிகளிடையே, இந்தச் செய்தி, துயரத்தையும், ஆத்திரத்தையும் மட்டுமல்லாமல் ஒருவித பீதியையும் உண்டாக்கியது.

இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்த தேர்தலின் காரணமாக, கொடிகளும், தோரணங்களுமாக விழாக் கோலம் பூண்டிருந்த தில்லி, திடீரென்று சூன்யம் பிடித்தது போல் ஆகிவிட்டது. வீதிகள் வெறிச்சோடிப் போயின; எங்கும் ஒரு மயான அமைதியும் பீதியும் நிலவியது. மக்களுக்குத் தைரியம் அளிக்கும் விதத்தில், திலக் விஹார், கோவிந்புரி, சவுத் எக்ஸ்டன்ஷன், கிழக்கு தில்லியின் சில பகுதிகள் ஆகியவற்றில் ராணுவம் அணிவகுத்துச் சென்றது. சென்னையைப் போல் அல்லாமல் ஓரிரு சிறு சம்பவங்களைத் தவிர்த்து, தில்லி பெரும்பாலும் அமைதியாகவே இருந்தது.

நேரு குடும்பத்தைச் சேர்ந்த ராஜீவ் காந்திக்கு, இப்படியொரு முடிவு தமிழ்



நாட்டில் ஏற்பட்டதில் தில்லித் தமிழர்களுக்குத் தாங்க முடியாத வருத்தம். தமிழக அரசு தக்க பாதுகாப்பளிக்காமல் போய் விட்டதே என்ற குற்ற உணர்வில், பல தமிழர்கள் வெட்கித் தலைகுனிந்தார்கள். சக்கர்பூர், கல்யாண்புரி, ஸன்லைட் காலனி போன்ற சேரிகளில் வாழும் தமிழ் வேலைக்காரர்கள், 1984 ஆம் ஆண்டு கலவரத்தில் சீக்கியர்கள் தாக்கப்பட்டது போல், ஆத்திரமடைந்த மக்கள் இப்போது தங்களைத் தாக்க வருவார்களோ என்று பயந்தார்கள். ஆனால் இவர்களுடைய பீதி அநாவசியமானது என்று அவர்களுக்குப் புரிய அதிக நேரமாகவில்லை. அந்த அளவுக்குத் தில்லி மக்கள் அமைதி காத்தார்கள். மேலும், இப்படிப்பட்ட ''ஸென்ஸிடிவ்'' பகுதிகளில், அரசு முன்னெச்சரிக்கையாகக் காவல் படையினரையும் நிறுத்தி வைத்திருந்ததைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

நவம்பர் 84 கலவரங்களின் பொழுது குடிதண்ணீரில் விஷம் கலந்து விட்டார்கள் போன்ற வதந்திகள் உலவின. இப்பொழுதும் மக்கள் பலவிதமான வதந்திகளைத் தாராளமாகப் பரவ விட்டனர். 23 ஆம் தேதியன்று, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜகதீஷ் டய்ட்லர், பி. ஜே. பி. கட்சியின் வேட்பாளர் தாராசந்த் கண்டேல்வால், ஜனதா தள முன்னாள் அமைச்சர் பாஸ்வான் போன்றவர்களின் பெயர்களும் வதந்திகளில் இடம்பெற ஆரம்பித்தன.அது மட்டுமல்ல, கரோல் பாக்கில் வீடுகளில் புகுந்து கொள்ளை, மத்திய தில்லியில் கலாட்டா என்பன போன்ற வதந்திகளுக்குக் குறைவேயில்லை!

சிறு வயதில் தாத்தா நேருவுடன் ஓடியாடி விளையாடிய அந்த பிரம்மாண்டமான தீன்மூர்த்தி மாளிகையில் மீளாத நித்திரையில் ஆழ்ந்திருந்த, தங்கள் அன்புத் தலைவரைத் தரிசிக்கப் படைபதைக்கும் வெயிலையும் பாராட்டாமல் மக்கள் கூடினார்கள். வசீகரப் புன்னகையுடன் கூடிய தங்கள் தலைவரின் அழகிய முகம், பார்க்க முடியாத அளவுக்குச் சேதமடைந்து, வெறும் புகைப்படத்தை மட்டுமே தரிசிக்க முடிந்த கொடுமையை எண்ணி எண்ணி அழுதார்கள். ராஜீவ் காந்தி என்றவுடன் அந்த அழகிய முகமும், வசீகரப் புன்னகையும்தான் நம் கண்களின் முன்னே தோன்றும். சில எதிர்க் கட்சித் தலைவர்கள் கூட, தேர்தல் பிரசாரத்தின் பொழுது கிண்டலாக, 'ராஜீவின் அழகிய முகத்தை மட்டும் பார்த்து, பிரதம மந்திரியாக மக்கள் தேர்ந்தெடுத்து விட மாட்டார்கள்' என்று குறிப்பிட்டதை நினைவுகூர்ந்த மக்களுக்கு மேலும் வருத்தமானது. அழகிய முகத்துடன், அழகிய உள்ளமும், அறிவாற்றலும் பெற்ற ராஜீவுக்கு உலகத் தலைவர்கள் நேரில் வந்து அஞ்சலி செலுத்துவதைக் கண்டு மக்கள் நெக்குருகிப் போனார்கள்.



ராஜீவ் காந்தி தமது கடைசி காலத்தில் வாழ்ந்த ஜன்பத் வீதியின் பத்தாம் எண் பங்களா, ராசியில்லாத வீடு என்பது பலருடைய அபிப்பிராயம். 89 தேர்தலுக்குப் பிறகு, ராஜீவ் காந்திக்கு இந்த வீட்டை அரசாங்கம் ஒதுக்கியவுடனேயே இதைப் பற்றிச் சர்ச்சை கிளம்பியது. ஆனால் 'பாதுகாப்பு'க் கோணத்திலிருந்து பார்க்கும்பொழுது இந்த வீடே உகந்தது என்று தீர்மானம் செய்து, வேண்டிய மாற்றங்கள் செய்து, ராஜீவ் காந்தி குடும்பத்துடன் குடியேறினார். இந்த வீட்டில் குடியிருந்தவர்கள் எல்லோருமே அநேகமாக துக்கமான சூழ்நிலையிலேதான், இந்த பங்களாவை விட்டு வெளியேற வேண்டியிருந்தது என்பதைத் தில்லிவாசிகள் அசைபோட ஆரம்பித்தார்கள்.

இந்தியாவின் இரண்டாவது பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி, 66 ஆம் ஆண்டு மாஸ்கோவில் இறக்கும் சமயத்தில், இந்த 10 ஆம் எண் பங்களாவில்தான் குடியிருந்தார். ராஜீவ் காந்திக்கு முன்பு இங்கு

குடியிருந்த கே. கே. திவாரி, 89 தேர்தலில் பக்ஸர் தொகுதியில் படுதோல்வியடைந் தார். அதற்கு முன்பு இங்கு குடி யிருந்த, எல். கே. ஜா, (பொருளாதார நிபுணர்) இந்த வீட்டில்தான் மரணமடைந்தார்!

ஸ்ரீபெரும்புதூர் குண்டு விபத்தில் இறந்தவர்களில், ராஜீவ் காந்தியின் மெய்க் காவலர் பிரதீப் குப்தாவும் ஒருவர். திரு மணமாகி மூன்று ஆண்டுகளே ஆகின்றன. சில நாட்களுக்கு முன்புதான் தம்முடைய திருமண தினத்தைக் கொண்டாடினார் அவர். 27 வயது நிரம்பிய அவர் மனைவி யையும், ஒன்றரை வயதுக் குழந்தையையும் பார்த்தவர்களுக்கு அளவில்லாத் துக்கம் உண்டாகியது. அ வ ர து குடும்பத்தினர் கடைசியாக அவரைப் பார்த்தது, 20 ஆம் தேதி அன்றுதான். தேர்தல் அன்று ராஜீவ், சோனியாவுடன் வாக்குச்சாவடிக்குச் சென்ற குப்தா, அங்கிருந்தே நேராக ராஜீவுடன் பய ணம் புறப்பட்டு விட்டார். விபத்து நடந்த அன்று மாலை ஏழு மணிக்கு மனைவியுடன் தொலைபேசியில் பேசினாராம். அவர் வரவை மறுநாள் ஆவலுடன் எதிர்பார்த்த குடும்பத்தினர், கடைசியில் விமானத்தில் வந்திறங்கிய பிரதீப் குப்தாவின் உயிரற்ற உடலைத்தான் கண்டார்கள்.

ராஜீவின் உடலைக் கவனிக்கும் கலாட் டாவினால், AIIMS மருத்துவமனையில் பிரதீப் குப்தாவின் உடல் போஸ்ட் மார்ட்டம் செய்யப்படாமல், நான்கு மணி நேரத்திற்குக் கேட்பாரற்றுக் கிடந்தது என்று அவரது சகோதரர் மிகவும் வருத்தத்துடன் குறிப்பிட்டார். பிறகு, தகுந்த போலீஸ் மரி யாதையுடன் பிரதீப் குப்தாவின் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. காங்கிரஸ் கட்சி யின் Grievance Cell ஐச் சேர்ந்த திருமதி மோகினி கிரி, அவர் குடும்பத் தினரை மறுநாள் சந்தித்து ஆறுதல் தெரி வித்தார். உள்துறை அமைச்சர் சுபோத்கான் சகாய் பிரதீப் குப்தாவின் குடும்பத்தின ருக்கு ஒரு லட்ச ரூபாய் நஷ்டஈடும், அவர் மனைவிக்கு அரசாங்க வேலையும் வழங்கு வதாக உறுதியளித்தார்.

– ரமாமணி சுந்தர்

படங்கள் : செந்தில் ஆர். கணேஷ்

சோனியாவுக்கு ராஜீவ் அளித்த முதல் பரிசு!

கேள்வி: ராஜீவும், நீங்களும் முதன் முத லில் எங்கு சந்தித்துக் கொண்டீர்கள்?

சோனியா: லண்டன் கேம் பிரிட்ஜ் பல் கலைக் கழகத்தில் முதன் முதலில் சந்தித்தோம். அங்கே ராஜீவ் படித்துக் கொண்டிருந்த போது, நானும் ஆங்கிலம், ஸ்பா னிஷ், பிரெஞ்சு மொழிகள் படித்தேன். மொழிபெயர்ப்பாளராக விரும்பியே நான் லண்டனில் பயின்றேன்.

கேள்வி: நீங்கள் பயின்றது பிரெஞ்சு, ஜெர்மன். ஆனால் ராஜீவ் படித்தது இஞ்சி னியரிங். உங்களுக்கிடையே தொடர்பு ஏற் பட்டது எப்படி?

சோனியா: கல்லூரி விழாக்களில் அனை வருமே கலந்து கொள்ளுவோம். எனக்கு நிறைய நண்பர்கள் உண்டு. அவர்களுள் ஜெர்மன் நண்பர் ஒருவர், ராஜீவுக்கு நண்பர். அவர் மூலம்தான் அறிமுகம் கிடைத் தது. நாங்கள் அனைவரும், ஓட்டல், சினிமா, கலைநிகழ்ச்சி களுக்கு ஒன்றாகப் போவோம். அப்போது ராஜீவ் என்னைக் கவர்ந்தார். நட்பு, காதலானது.

கேள்வி: உங்கள் இருவரில் காதலை முதலில் வெளியிட்டது யார்?

சோனியா: இரண்டு பேருமேதான். திரு மணம் செய்து கொள்ள இருவருமே விரும் பினோம். உடனே ராஜீவ், எங்கள் காதல் பற்றி யும், திருமணம் செய்து கொள்ள விரும்புவது பற்றியும் குறிப்பிட்டுத் தம் அன்னை இந்திராவுக்குக் கடிதம் எழுதினார். அப்போது இந்திராகாந்தி மத்திய செய்தி - ஒலிபரப்புத் துறை மந்திரி. நேரு பற்றிய ஒரு புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைப்பதற்காக லண்டன் வந்தார். அதற்கு முன்பாகவே, 'நீ விரும்பும் பெண்ணை அழைத்துக் கொண்டு வா' என்று ராஜீவுக்கு எழுதியிருந்தார். அன்னை லண்டன் வந்ததும், ராஜீவ் என்னை அவரிடம் அழைத்துக் கொண்டு போனார். என்னுடன் சிறிது நேரம் பேசிய பின், ''நானும் வேற்று மதத்தவரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவள்தான். நான் உங்கள் காதலுக்குக் குறுக்கே நிற்க மாட்டேன்'' என்று இந்திராகாந்தி கூறிய போது எனக்கு அளவில்லா மகிழ்ச்சி ஏற்பட்டது.

கேள்வி: ராஜீவ் உங்களுக்கு அளித்த முதல் பரிசு என்ன?

சோனியா: ஒ ரு மு றை விடுமுறையில், இந்தியா வந்து விட்டு, லண்டன் திரும்பிய போது, நேவி புளூ கலரில் ஜரிகை வேலைப் பாடுகள் கொண்ட ஒரு பனாரஸ் பட்டுப் புடைவை வாங்கி வந்தார். எனக்கு மிகவும் பிடித்த கலர் நேவி புளூதான்!

நன்றி : 'தர்ம யுக்' - இந்தி இதழ்

தகவல் : ஜூலி





● 'ஓட்டப் பந்தயம் அளவுக்கு நடிப்பும் கஷ்டம்தான் போலிருக்கே!'

சீரான ஓட்டம் சினிமாவில் நாட்டம்

தங்கப் பெண் பி. டி. உஷாவையே தோற்கடித்து விளையாட்டு ரசிகர்களை ஆச்சரியத்தில் மூழ்கடித்தவர் கர்நாடகா வைச் சேர்ந்த அச்வினி நாச்சப்பா. அண் மையில் கல்கத்தாவில் நடந்து முடிந்த தேசிய ஓப்பன் சாம்பியன்ஷிப் போட்டி களில் அச்வினி பெற்ற வெற்றிகள் பாராட்டுக்குரியன. நூறு மீட்டர், இருநூறு மீட்டர், நானூறு மீட்டர், ரிலே என நான் கிலும் தங்கம் பெற்றார். பி.டி. உஷா, ஓட்டப்பந்தய டிராக்கிற்கு டாடா காட்டி விட்டு, திருமண டிராக்கிற்குப் போய் விட்ட நிலையில் இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமாய்க் கருதப்படுபவர் அச்வினி.

பன்னிரண்டு வயது முதலே தேசிய அள விலான பந்தயங்களில் பங்கேற்று வரும் அச்வினி, அத்தகைய போட்டிகள் ஒவ் வொன்றிலும் தங்கம் பெற்று வருகிறார். ஒரு முறை ஒலிம்பிக் விளையாட்டிலும், இரண்டு தடவை ஏஷியாடிலும், மூன்று முறை ஆசிய தடகள விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொண்டிருக்கி றார். ஒலிம்பிக்ஸ் தவிர, மற்றவற்றில் குறிப் பிடும்படி ஓடியிருக்கிறார்.

''என் அப்பா வுக்கு அப்போது கல்கத்தாவில் உத்தி யோகம். அம்மா மட் டும் என்னையும், என் சகோதரி புஷ்பா வையும் வைத்துக் கொண்டு பெங்களூ ரில் தங்கியிருந்தார். எனக்கு வயது ஆறு. புஷ்பாவுக்கு எட்டு. அப்பாவின் ஃபாக்ட ரியில் லாக் அவுட். சம்பளம் வராத நாட் களில் நாங்கள் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமில்லை. எங் கள் வீட்டுக்கு எதிரே இருந்த ஸ்டேடியம் தான் எங்களின் ஒரே பொழுதுபோக்கிடம். தினமும் எங்க ளுடைய தாய், எங்களை அழைத்துக் கொண்டு மாலை வேளைகளில் ஸ்டேடி யத்துக்குப் போவார். அங்கே ஓடிக் கொண் டிருந்தவர்களைப் பார்த்துத்தான் எங்களுக் கும் ஓட்டத்தில் ஆர்வம் ஏற்பட்டது'' என்கி றார் அச்வினி. சகோதரி புஷ்பா, ஸ்போர்ட்ஸ் ஸ்காலர்ஷிப் பெற்ற 'அத் லெட்'. (தற்போது அமெரிக்காவில் எம்.பி.ஏ. படிக்கிறார்.)

சுனில் ஆபிரஹாம் பயிற்சியாளரான பின்பு அச்வினியின் சீரான ஓட்டத்தில் மேலும் முன்னேற்றம் காணப்படுகிறது. ''என் திறமையைச் சரியாய்க் கணித்து, திட்டமிட்டுப் பயிற்சி அளிக்கிறார் சுனில். விளையாட்டுத் துறையில் எனக்குப் பெருதவியாய் இருக்கும் இன்னொருவர் டாக்டர் ரூபன் தாஸ். ஸ்போர்ட்ஸ் சைக்காலஜியில் இவர் வல்லுனர். இவர் எனக்கு அளித்த மனோதத்துவப் பயிற்சி, எனக்கு மிகவும் உபயோகமாய் இருக் கிறது'' என்கிறார் அச்வினி. சுனில் ஆபிர காமின் மனைவியான ரீத் ஆபிரகாமும் ஒரு 'அதலெட்'தான். இத் தம்பதி பெங்களூரில் இளம் திறமைசாலிகளைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி தரும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.



✱ வெற்றிச் சிரிப்பு!

இவ் விஷயத்தில் அச்வினி நாச்சப்பாவும் இவர்களுக்கு உதவுகிறார்.

அச்வினியின் திறமையைப் பாராட்டி, பாரத அரசு அவருக்கு அர்ஜுனா விருது வழங்கிக் கௌரவித்தது. அந்த அனுபவம் பற்றிக் கூறுகிறார் அச்வினி: ''ஸ்போர்ட்ஸ் அதாரிடி அதிகாரிகள் சொல்லித்தான் எனக்கு விஷயமே தெரியவந்தது. அதற்குச் சில நாட்கள் முன்பு வரை, சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவரிடம் விசாரித்த பொழுது, என் விண்ணப்பமே அவர்கள் கைக்கு வந்து சேரவில்லை என்று கூறினார். எனக்கு அதிர்ச்சியாய் இருந்தது. விருது கிடைக்காது என்று நினைத்துக் கொண்டிருந்த போது கிடைத்தது! ஆனால் தனிப்பட்ட முறையில் என் கருத்து இதுதான்: விளையாட்டு வீரர்களை, விருதுகள் கொடுத்து அரசு கௌரவிக்க வேண்டியது அவசியம் தான். ஆனால் வீரர்களின் சாதனைகளைக் கவனித்து, அரசாங்கம் தானாகவே விருது அளித்துக் கௌரவிக்க வேண்டும். அதற்கு, வீரர்களே விண்ணப்பம் செய்து, அரசாங்கம் அவற்றைப் பரிசீலித்து முடிவெடுக்கிற முறை தவறு.''

''உங்கள் இலட்சியம் என்ன?''

''ஆசிய விளையாட்டுகளிலும், காமன் வெல்த் கேம்ஸிலும் தங்கப் பதக்கம் பெறுவது'' என்று கூறும் அச்வினியிடம், ''ஏன்... ஒலிம்பிக்ஸில்?'' என்று கேட்டால், அவரது பதில்: ''என் லிமிட் எனக்குத் தெரியும்.''

''வரும் செப்டம்பரில் தொடங்கி, வரிசையாய், டோக்கியோவில் உலக சாம்பியன்ஷிப், ஆசிய தடகளப் போட்டிகள் (மலேசியா), சார்க் விளையாட்டுப் போட்டிகள் (ஸ்ரீலங்கா) என்று இருக்கின்றன. இவையனைத்திலுமே நான் பங்கேற்க விரும்புகிறேன். ஆனால், இவற்றில் எத்தனைக்கு நம் அரசாங்கம் என்னை அனுப்புமோ தெரியவில்லை'' என்று ஆதங்கத்துடன் குறிப்பிடுகிறார் அச்வினி.



அச்வினி பெங்களூரில் விஜயா வங்கியில் ஆபீஸராய்ப் பணிபுரிகிறார். காலை ஒன்பதரை முதல் ஒரு மணி வரை ஆபீஸில் வேலை. தினமும் கண்டீவாரா ஸ்டேடியத்தில் காலை ஆறு மணி முதல் எட்டு வரையிலும் பயிற்சி. மறுபடி மாலையில் நாலரை முதல் ஆறரை வரை. உணவு விஷயத்தில் ரொம்பக் கட்டுப்பாடு. குளிர்ப் பானங்கள் அருந்துவதில்லை. ஸ்வீட் சாப்பிடுவதில்லை. இவை எடையைக் கூட்டி விடுமே! இரவு வெகுநேரம் வரை கண் விழித்திருப்பதில்லை. காலையில் நேரத்தோடு எழுந்து, பயிற்சிக்குப் போவது தடைப்படும் என்பதால்தான்!

பி.டி. உஷா விட்டுச் சென்ற இடத்தை அச்வினி நாச்சப்பா நிரப்புவாரா? இந்தக்

கேள்வியை 'இந்து'வின் விளையாட்டு நிருபர் ஆனந்திடம் கேட்ட போது, அவர் கூறினார்: ''பி. டி. உஷாவின் இடத்தை நிரப்ப வேறு எவராலும் முடியாது. அவர் ஆசியாவின் தலைசிறந்த வீராங்கனை. அச்வினி நம்மிடம், இப்போதுள்ளவர்களில் சிறந்தவர் என்று கூறலாம். ஆனால் அவர் ஓர் அழகான அதலெட் என்கிற காரணத்தால், பத்திரிகைகளின் கவனத்தை அதிகமாய்க் கவர்ந்திருக்கிறார். அவர் 'Media's darling'. இதை அச்வினி பெருமையாகவே கருதுகிறார். தற்போது சினிமாவில் வேறு நடிக்கிறார். இவை அச்வினி என்ற 'அதலெட்'டின் கவனத்தைச் சிதறடிக்கும் விஷயங்கள். தேசிய அளவிலான போட்டிகளில் தங்கமாய் வாங்கிக் குவிப்பது மட்டுமே போதாது. சர்வதேசப் போட்டிகளிலும் முன்னணியில் நிற்க வேண்டும். இதை உணர்ந்து, தீவிரமாய்க் கவனம் செலுத்தி, முயன்றால் அச்வினியின் எதிர்காலம் சிறப்பாய் இருக்கும்.''

'அஸ்வினி' திரைப்படம், கடந்த மே மாதம் முதல் தேதி ஆந்திரா முழுவதும் ரிலீஸ் ஆகி, வெற்றிகரமாய் ஓடிக் கொண்டிருக்கிறது. பிரபல பத்திரிகையாளர் ராமோஜி ராவ் தயாரித்துள்ள இப்படத்தின் இயக்குனர் மௌலி. விரைவில் தமிழிலும், இந்தியிலும் டப் செய்யப்பட்டு வெளிவரவிருக்கிறது.

''அச்வினி நாச்சப்பாவை உங்கள் படத்துக்கு எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள்?'' என்று மௌலியிடம் கேட்ட போது கூறினார்: ''ஒரு பெண் அதலெட்டின் வாழ்க்கையைச் சினிமாவாகத் தயாரிக்கலாம் என முடிவெடுத்த போது ஒரு புதுமுக நடிகைக்கு ஓட்டப்பந்தயப் பயிற்சி தருவதை விட, ஒரு ஓட்டப்பந்தய வீராங்கனைக்கு நடிப்புச் சொல்லிக் கொடுப்பது எளிதான காரியம் என்றுபட்டது. ஒரு பெண் அதலெட்டையே நடிக்க வைப்பது என்று தீர்மானித்தோம்.

''டெல்லி ஜவகர்லால் நேரு ஸ்டேடியத்துக்குப் போய்ப் பல அதலெட்களையும் பார்த்த போது, சினிமாவுக்குத் தேவையான முகவெட்டுடன் இருந்தவர் அச்வினி நாச்சப்பா. அவரை அணுகிய போது, முதலில் மறுத்தாலும், படத்தின் கதை ஒரு பெண் அதலெட்டைப் பற்றினது என்று கூறி, கதையைச் சொன்னதும் உடனே சம்மதித்து விட்டார்.''

சினிமாவில் நடிக்கச் சம்மதித்து விட்டாலும் தமக்கு ஓட்டப்பந்தயப் போட்டிகள் எதுவும் இல்லாத நவம்பர், டிசம்பர் மாதங்களில்தான் ஷூட்டிங்கிற்குக் கால் ஷீட் தந்தாராம், அச்வினி. ஷூட்டிங் தினங்களில் கூட, காலையும் மாலையும் தமது பயிற்சிகளைச் செய்யத் தவறவில்லையாம்.

'அஸ்வினி' திரைக்கதையில், அச்வினி நாச்சப்பாவின் வாழ்க்கையில் நடந்த சில சம்பவங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. அச்வினி நாச்சப்பா, பி. டி. உஷாவைத் தோற்கடித்த ஓட்டப் பந்தயக் காட்சிகள், குடியரசுத் தலைவரிடம் அச்வினி, அர்ஜுனா விருது பெறும் காட்சி இவையும் படத்தில் இடம்பெறும் வகையில் திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது.

''அடுத்த இரண்டு மூன்று வருடங்கள் அச்வினியின் அதலெடிக் வாழ்க்கையில் மிக முக்கியமான கட்டமாயிற்றே! இந்தச் சமயத்தில் அவரைச் சினிமாவில் நடிக்க வைத்துக் கவனத்தைத் திசை திருப்பி, நாளைக்கு அவர் புரியவிருக்கும் சாதனைகளுக்குத் தடையாக அமைந்து விட்டீர்களே!'' என்ற குற்றச்சாட்டுக்கு இயக்குனர் மௌலியின் பதில்: ''நோ... ஒரு அதலெட் பற்றின படம் என்பதால் நடிக்க ஒப்புக் கொண்டார். இத்துடன் நடிப்புக்கு 'குட்-பை' சொல்லி விடுவார்!''

- எஸ். சந்திரமௌலி

அட்டை வண்ணப்படம் : ரமணன்



அடுத்த இதழில்...

- முத்துப்பல் வரிசையை எப்படிப் பெறுவது?
  - டாக்டர் விளக்குகிறார்
- அழிக்கப்பட்டு வரும் வனச் செல்வங்கள்.....

உலகின் மிகச் சிறந்த திரைப்பட
இயக்குனர்களில் ஒருவராக
மதிக்கப்படும் சத்யஜித் ரேயின்
எழுபதாவது பிறந்த நாளை ஒட்டி,
கல்கத்தாவில் மிகப் பெரிய விழா
நடத்தப்படவிருக்கிறது. உலகின்
பல பாகங்களிலிருந்தும்,
புகழ் பெற்ற திரைப்பட இயக்குனர்கள்
இந்தப் பாராட்டு விழாவில்
பங்கு கொள்ளுகிறார்கள்...



சத்யஜித்ரே-70

சத்யஜித் ரேயின் சமீபத்திய திரைப் படம் 'ஷாகா - ப்ரோஷாகா' (மரமும் கிளை களும்) டி.வி.யில் ஒளிபரப்பப் பட்டது. ''என்னுடைய படம், வாழ்க்கையின் சில உயர் லட்சியங்களைப் பற்றிப் பேசி, நம்பிக்கை ஊட்டினாலும், மறுபுறம் ஊழல் நம் வாழ்க்கையின் ஓர் அங்கமாகப் போய் விட்டதே என்ற வருத்தத்தையும் அளிக்கிறது!'' என்கிறார் ரே.


ஆனந்த்பூரில் ஒரு முக்கிய பிரமுகர் ஆனந்த்மோகன் மஜூம்தார். மிகச் சிறிய வேலையில் சேர்ந்து, ஓரியன்ட் மைக்கா ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஜெனரல் மானேஜர் பதவியை எட்டுகிறார். தமது குடும்பத்தில், தமது மகன்கள் யாரும் ஊழலுடன் சம்பந் தப்பட்டிருக்க மாட்டார்கள் என்று நம்பு கிறார். ஹார்ட் அட்டாக் வந்து வீட்டில் படுத்திருக்கும் அவரைக் காண அவரது மகன்கள் - மருமகள்கள், பேரன் எல்லோரும் வருகிறார்கள்.

மூத்த மகன் பிரபோத்தும் மூன்றாவது மகன் பிரபீரும் ஒரு நாள் டைனிங் டேபிளில் உணவருந்தும் போது, ஒருவரை ஒருவர் ஊழல் பற்றியும், கறுப்புப் பணம் சேர்த்து வைத்துச் செலவழிப்பது பற்றியும் குற்றம்சாட்டிப் பேசிக் கொள்ளுகின்றனர். பேரன் டிங்கோ தாத்தாவிடம் சென்று, தனக்குக் கறுப்புப் பணம், பச்சைப் பணம் எல்லாம் பற்றி நன்கு தெரியும் என்றும், தனது அப்பாவும் பெரியப்பாவும் விவாதித்துக் கொண்டதையும் குழந்தைக்கே உரிய அப்பாவித்தனத்தோடு தெரிவிக்கும் போது, கிழவர் அதிர்ந்து போகிறார். சற்றே சரியான உடல்நிலை மோசமடைகிறது. புத்தி சுவாதீனமற்ற இரண்டாவது மகன் பிரசாந்த் உள்ளே வருகையில், அவன் கையை இறுகப் பற்றிக் கொள்ளுகிறார். லண்டனில் ஒரு விபத்தில் சிக்கிப் பிழைத்தவன் பிரசாந்த். குறைந்த பட்சம் இவனாவது இந்தத் தீமைகளில் இறங்காமல் தப்பித்தானே என்ற நிம்மதியில் கண்ணை மூடுகிறார்.

ரேயின் படங்களைத் தொடர்ந்து பார்த்து வருபவர்கள் ஓர் அம்சத்தைக் கண்டிருப் பார்கள். 'கணசத்ரு' (மக்களின் எதிரி) படத் திலும் சரி, 'ஷாகா - ப்ரோஷாகா'விலும் சரி, தமது வழக்கத்துக்கு மாறாக உரையாடல்களை நிறையவே அமைத்திருக் கிறார் ரே.

''தேசிய அளவில் பரிசு வாங்கிய பல படங்களை விட என் ஷாகா - ப்ரோஷாகா 'சிறந்ததுதான். ஆனால் நான் இதைப் போட்டிக்கு அனுப்பவில்லை. அனுப்பியிருந்தால் நிச்சயம் பரிசு பெற்றிருக்கும் என்று நான் சொல்லவரவில்லை. கேன்ஸ், வெனிஸ் விழாக்களுக்குக் கூட நான் இப் போதெல்லாம் என் படங்களை அனுப்புவதில்லை. ஏராளமாக அவார்டுகள் வாங்கிக் குவித்தாயிற்று. இனி எனக்குப் பரிசுகள் தேவையில்லை; பாராட்டுக்கள் போதும்!'' என்கிறார் ரே.

- சாருகேசி


அத்வானி
நிலையான ஆட்சிக்கு...
நிலையான ஆட்சிக்கு...
தேர்தல்ல ஜெயிச்சிட்டா பதவி, புகழ் எல்லாம் உங்களுக்கு... தோத்துட்டா, பழி பூரா உங்களுக்கு! எங்களுக்குக் கொஞ்சம் கூட வேணாம்!
உண்ணாவிரதம்
இவங்க உண்ணாவிரதத்துக்கு விடுதலைப் புலிகள்தான் காரணம்... இவங்க சொத்துக்களை விடுதலைப்புலிகள் அழிச்சதுக்கு இவங்கதான் காரணம்... எல்லாமே கூட்டுச்சதி! இப்படி ரீல் விடறதுக்கு நானேதான் காரணம்!



கல்கி
1991 ஜூன் 9
மலர் : 49 இதழ் : 45
பிரஜோத்பத்தி வைகாசி 26



வதந்தி பரப்பும் வாழப்பாடியார்!

"வதந்திகளைப் பரப்பாதீர்கள்!" என்கிறார் தமிழக ஆளுனர். நாற்சந்திகளிலெல்லாம் பெரிய பெரிய பானர்களில் ஆளுனரின் வேண்டுகோளைக் கொட்டை எழுத்துக்களில் பொறித்துள்ளது தமிழக அரசு. இந்த எச்சரிக்கை யாருக்கு? உங்களுக்கும் எனக்கும்தான். பெருந்தலைகளுக்கு அல்ல! வாழப்பாடியாருக்கு நிச்சயமாக அல்ல! நாளொரு வதந்தியும் பொழுதொரு கற்பனையுமாக வெளுத்து வாங்குகிறார் வாழப்பாடியார்!

'ராஜீவின் மரணத்துக்குக் காரணம் ஈழப் புலிகளும் தி. மு. க. வும் சேர்ந்து செய்த கூட்டுச் சதி' என்பதாக ஒரு புரளியை முதலில் கிளப்பினார் வாழப்பாடியார். பயங்கரமான இந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் என்ன என்று அவர் கூறவில்லை. ஆதாரமில்லாமல் குற்றம் சாட்டுவது வதந்திக்கு மறுபெயர் என்பதை அவர் உணரக் காணோம். இதன் விளைவு என்ன? ராஜீவ் கொலையுண்ட பிறகு, மக்களுக்கு இயல்பாக ஏற்பட்ட கோபம், ஒரு நாளில் அடங்கிப் போயிருக்கும். வன்முறை அராஜகமும் அத்துடன் முடிந்து போயிருக்கும். ஆனால், வாழப்பாடியாரின் வதந்தி உபயத்தால் அது மேலும் இரண்டு மூன்று நாட்களுக்கு நீடித்தது.

இதைப் பற்றி வாழப்பாடியாருக்குக் கவலையில்லை. ராஜீவின் மரணம் காரணமாகத் தலைவனில்லாத ஓட்டைப் படகாகக் காங்கிரஸ் தத்தளிப்பதை அவர் உணர்ந்திருக்கிறார். இத்தகைய கட்சிக்கு மக்கள் வோட்டளிக்க மாட்டார்கள். அவர்கள் கவனத்தையும் வோட்டையும் ஈர்க்க தி. மு. க. மீது வீண் பழி சுமத்துவதே ஒரே வழி! எனவேதான் தொடர்ந்து 'ரீல்' விடுகிறார்.

'இலங்கை அகதிகள் எல்லாரையும் ஒட்டுமொத்தமாகத் திருப்பி அனுப்பி விட வேண்டும்' என்கிறார் வாழப்பாடியார். அவருடைய அளப்பரிய மனிதாபிமானத்தைக் கண்டு தமிழகம் மெய்சிலிர்த்துப் போகிறது! 'அகதிகளுக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையில் வித்தியாசம் பாராமல் பேசும் வாழப்பாடியாரின் சமதர்ம நோக்கு வேறு யாருக்கு வரும்?' என்று தமிழன் வியப்பில் ஆழ்ந்து போகிறான்!

'சட்ட ஒழுங்கு சரியில்லை; விடுதலைப் புலிகளை அடக்கத் தெரியவில்லை' என்று காரணம் காட்டித் தி. மு. க. அரசைப் பதவி நீக்கம் செய்ததில் வாழப்பாடியாருக்கு முக்கிய பங்கு உண்டு. இன்று அவர் விருப்பப்படியேதான் இங்கு ஆளுனர் ஆட்சி நடக்கிறது. அந்த ஆட்சியில்தான் அவர் தமது தலைவனைப் பறிகொடுத்து விட்டுத் தவிக்கிறார். இந்தக் குற்ற உணர்வை மறைக்கவே, அவர் தி. மு. க. மீது பழிசுமத்துகிறார். போதாக்குறைக்கு, "விடுதலைப் புலிகளின் ஹிட் லிஸ்ட்டில் ஜெயலலிதா இருக்கிறார், ஆர். வி. இருக்கிறார், நானும் இருக்கிறேன்" என்கிறார். ஏதோ விடுதலைப் புலிகள் ஹிட் லிஸ்ட் தயாரித்த போது, தாம் உடனிருந்து பார்த்தது போல் பேசுகிறார்! இவையெல்லாம் பீதியைக் கிளப்பக்கூடிய வதந்திகள் என்பது வாழப்பாடியாருக்குத் தெரியாவிட்டாலும் ஆளுனருக்கும் ஆலோசகர்களுக்கும் கூடவா தெரியாது? "தி. மு. க. வும், புலிகளும் சேர்ந்து கொண்டு, தமிழக காவல் துறையையும் கையில் போட்டுக் கொண்டு, ராஜீவ் கொலை தொடர்பாக எல்லோரது கவனத்தையும் திசைதிருப்புகின்றனர்!" - இது வாழப்பாடியாரின் வதந்தித் தொழிலகத்தின் மற்றொரு புதுமைத் தயாரிப்பு.

தி. மு. க. தன் பங்குக்கு மரகதம் சந்திரசேகரை இழுத்து, ஏதோ வதந்தி தயாரிக்கப் பார்த்துத் தோல்வி கண்டு அடங்கி விட்டது. அதனால் வாழப்பாடியாரின் பிரும்மாண்ட, அதிவேக வதந்திப் பரப்புத் தொழிலகத்துடன் போட்டி போட முடியவில்லை! பற்றாக்குறைக்கு வானொலி வேறு 'ஜோதிபாசுவுக்கு மாரடைப்பு' என்று கூறி, பின்னர் பரிதாபமாக வாபஸ் பெற்றுக் கொண்டது.

உண்மைக் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். யாரானாலும் சரி, தண்டனை பெற வேண்டும். மறு கருத்துக் கிடையாது. ஆனால் ஒன்று, ஈழப் புலிகள் என்று இருக்கும் வரைதான் தமிழன் தப்ப முடியும். ஒரு தமிழனுக்குச் சதியில் தொடர்பு என்று ஏற்பட்டு விட்டால், பிறகு தி. மு. க., காங்கிரஸ், அ. தி. மு. க. என்று யாரும் பார்க்க மாட்டார்கள். தமிழன் மீது ஒட்டுமொத்தமான வெறுப்பு அனைத்திந்தியாவிலும் வளரும். வதந்தி பரப்பும் வாழப்பாடியார் சிந்திக்கட்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

டி.வி.நாடகங்கள் எப்படி?

கல்லூரி மாணவர்
கட்டுரைப் போட்டி

ரூ. 50 முதல் பரிசு
பெறும் கட்டுரை

டி. வி. யில் ஒளிபரப்பாகும் நாடகங்கள் தமிழோ, ஹிந்தியோ அனைத்தும் மோசமானவை என்றோ, எல்லாமே நன்றாக இருக்கிறது என்றோ சொல்ல முடியாது. சில நல்ல நாடகங்கள் இருந்தாலும், சில பொறுமையைச் சோதிக்கும்படியாக அமைந்து விடுகின்றன.

ராமாயணம், மகாபாரதம் போன்ற பிரம்மாண்டமான நாடகங்கள் போல் இனி அமைவது அரிது. மொழி வேறுபாடின்றிக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் கவர்ந்த நாடகங்கள் இவை. இதுவரை தமிழில் இவ்வாறு பிரம்மாண்டமான தயாரிப்பு ஏதுமில்லை. மனோகரின் சாணக்கிய சபதம், ஹெரான் ராமசாமியின் அசுவத்தாமன் போன்ற சரித்திர நாடகங்கள் தமிழில் ஓரளவு சிறந்த நாடகங்களாக இருந்தன.

ஹிந்தியில் சமூக நாடகங்களான புனியாத், வாஹ்லே கா துனியா, டாக்டர் சாகேப், ரத சக்கரா போன்றவையும், துப்பறியும் நாடகங்களான கரம்சந்த், அதாலத் போன்ற நாடகங்களும் மக்களை மிகவும் கவர்ந்தன. தமிழிலும் சித்திரப் பாவை, வடிவேலு வாத்தியார், வாழ்வின் வாசல், நீலா - மாலா போன்றவை நல்ல நாடகங்களே.

ஹிந்தி, தமிழ் இரு மொழி நாடகங்களையும் ஒப்புநோக்கும் போது, தமிழில் சில குறைபாடுகள் உள்ளன. நடிப்பைப் பொறுத்தவரையில் இரு மொழியிலும் குறை சொல்வதற்கில்லை. அரங்க அமைப்பில்தான் குறை. ஹிந்தியில் எவ்வளவு சிறிய நாடகமாக இருந்தாலும் அட்டை செட் அதிகமாகப் போடுவதில்லை. சம்பவம் நடக்கும் பூங்காவோ, பஸ் ஸ்டாப்போ, பங்களாவோ உண்மையான இடத்தையே - செட் போடாமல் - இயற்கையிலேயே படம்பிடித்துக் காட்டுகிறார்கள். அதனால் பார்ப்பவர்களுக்கு நாடகம் என்ற எண்ணம் தோன்றாமல் கதையோடு ஒன்றிப் போய் விட முடிகிறது.



• சித்திரப்பாவையில்...

தமிழ் நாடகங்களில் வெளிப்புறப் படப்பிடிப்பே மிகக் குறைவு. அட்டையில் ஒரு பஸ் ஸ்டாப் கம்பை நிறுத்தி விட்டால் அது தான் பஸ் ஸ்டாப். இரண்டு மரம் மாதிரி அட்டை வைத்து விட்டால் அதுதான் பூங்கா. இரண்டு சோபா செட், ஒரு மாடிப் படி மேலே ஒரு அறை, ஒரு சிறிய பால்கனி இதுதான் வீட்டின் உள்புறத் தோற்றம். ஒவ்வொரு நாடகத்திலும் அதே சோபா தான். அதே அறைதான்! இப்படிப்பட்ட அரங்க அமைப்பைப் பார்த்துப் பார்த்து அலுத்து விடுகிறது. ஏதோ பள்ளிக்கூட நாடகம் போல்தான் இருக்கிறது. நாடகத்தின் இயற்கைத் தன்மையே கெட்டுவிடுகிறது. நாடகத்தோடு ஒன்ற முடியவில்லை. அதே போல்தான் ஒப்பனையும். ஹிந்தியில் அந்தந்தக் கதாபாத்திரத்திற்கு ஏற்றபடிதான் ஒப்பனை இருக்கும். ஏழை என்றால் கிழிந்த உடையும், ஓலைக் குடிசையும் உண்மையாகவே காட்டுகிறார்கள். தமிழில் அட்டைக் குடிசையும், தேவையற்ற, கூடுதலான ஒப்பனையும் அருவருப்பு அளிக்கின்றன.

துப்பறியும் கதைகளில் ஹிந்தியில் கடைசி வரை சஸ்பென்ஸாக எடுத்துச் சென்று முடிவில் விளக்கமாகப் புதிரை விடுவிப்பார்கள். அதனால்தான் கரம்சந்த், அதாலத் போன்றவை இரவு 10.30 ஆனாலும் விழித்திருந்து பார்க்கத் தூண்டின. தமிழில் துப்பறியும் கதைகள் எடுக்கும் போது, அவர்கள் கதையைக் கொண்டு போகும் முறையிலிருந்தே முடிவு நமக்கு தெரிந்து விடுகிறது. அதனால் நாடகம் 'த்ரில்' இல்லாமல் போய் விடுகிறது. உதாரணமாக இன்ஸ்பெக்டர் வாசு நாடகத்தைச் சொல்லலாம். தமிழில் ஒருசில குறிப்பிட்ட நடிகர்களே நடிக்கின்றனர். புதுமுகங்களுக்கு வாய்ப்பளிக்கலாம்.

ஹிந்தியில் வெறும் குடும்பக் கதைகளை மட்டுமல்லாது டாக்டர்கள் வாழ்க்கையைச் சித்தரிக்கும் லைப் லைன், போலீஸ் வாழ்க்கையைக் காட்டும் உடான், ரயில்வே சம்பந்தப்பட்ட இன்த்தசார் போன்று ஒவ்வொரு துறை சம்பந்தப்பட்ட கஷ்ட, நஷ்டங்களை தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறார்கள். தமிழிலும் அவ்வாறு வித்தியாசமான புதுப்புது நாடகங்களை ஒளிபரப்பினால் நாடகங்கள் நன்றாக இருக்கும். விளம்பரதாரர்கள் கொடுக்கும் பணமும் வீணாகாமல் மக்களின் மனத்தைக் கவரும் படி அமையும்.

- வ. செந்தில் குமார்,
இரண்டாம் ஆண்டு,
மதுரை மருத்துவக் கல்லூரி,
மதுரை.



♦ 'ரயில் சிநேகத்'தில்...

அறுவை அல்ல; அருமை!

அறுவை என்று ஒரு காலகட்டம் வரை அனைவராலும் வசை பாடப்பட்ட டீ. வி. விளம்பரதாரர் நிகழ்ச்சி, கே. பாலசந்தரின் இரயில் சிநேகத்திலிருந்து அருமை, அருமை எனப் பாராட்டத்தகும் வகையில் ஒரு திருப்பத்தைக் கண்டது. இந்தப் புத்திசாலி இயக்குநர் குட்டித் திரையிலும் தனது கெட்டிக்காரத்தனத்தைத் தொட்டுக் காட்டியதின் விளைவு, பெண், வானவீதி முதல் சமீபத்தில் முடிவடைந்த நீலா - மாலா வரை பெரும்பாலான விளம்பரதாரர் நிகழ்ச்சிகள் மிகவும் சுவையானதாகவே அமைந்தன.

ஹிந்தி விளம்பரதாரர் நிகழ்ச்சிகள் இந்தியா முழுவதும் ஒளிபரப்பப்படுகின்றன. ஆகையால் அதிகப் பொருட்செலவில் தயாரிக்கப்படும் அந்த நிகழ்ச்சி சுவை கூடுதலாயிருப்பதில் வியப்பில்லை. இருப்பினும் மொழி புரியாத நம் மக்கள் எத்தனை பேர் அதனை ரசித்துப் பார்ப்பார்கள் எனக் கூற இயலாது.

திரைப்படத் துறையினர் பங்கேற்க முன்வருவதால் விளம்பரதாரர் கொடுக்கும் பணம் வீணாகாத அளவிற்குச் சுவையான நிகழ்ச்சிகள் அமைகின்றன. பெண்களின் பிரச்னைகளைச் சுவைபட எடுத்துக் கூறிய 'பெண்' நடிக, நடிகையர்களின் அற்புதமான நடிப்பினால் சிறப்புப் பெற்றது. நல்ல குறிக்கோளுடன் கூடிய ''வாழ்வின் வாசல்'' ஸ்ரீவித்யா, பூர்ணம் இருவரின் நடிப்பிலும், கதை சொல்லப்பட்ட முறையிலும் சுவைபெற்றது. 'ரிஷிமூலம்', 'வான வீதி' இரண்டும் பார்க்கப் பார்க்கத் திகட்

டாததாக அமைந்தன. சில திருஷ்டி பரிகாரங்களை ஒதுக்கி விட்டால் அனேகமாக அனைத்துத் தொடர்களும் சுவை மிகுந்ததாகவே அமைகின்றன.

எதிர்காலத்தில் மேலும் சுவையான விதத்தில் விளம்பரதாரர் நிகழ்ச்சி தயாரிக்கப்படும் என்பதற்கு இன்றைய பல நல்ல நிகழ்ச்சிகளே சான்று.

- டி. எஸ். கிருஷ்ணன்,
இரண்டாமாண்டு பொறியியல்
(மெக்கானிகல்),
நாஷனல் பொறியியல் கல்லூரி,
நாலாட்டின்புத்தூர் – 627 716.
கோவில்பட்டி தாலுக்கா.

ஜவ்வு மிட்டாய்

நிலைய நாடகங்களில் வசனத்துக்கு ஏற்ப நடிகர்களின் முகபாவங்கள் மாறுவதில்லை. குரல் கூட வசீகரமாய் அமைவதில்லை. சொற்களைத் தெளிவாக உச்சரிக்கவும் அவர்களுக்குத் தெரியவில்லை. நாடக அமைப்பிலும் பல தவறுகள் வெளிப்படையாகவே தெரிகின்றன. தேவையான இடத்தில் சுருக்கமாகவும், தேவையற்ற இடத்தில் விரிவாகவும் வசனங்களும், காட்சிகளும் அமைகின்றன.

நிலைய நாடகங்களை விட விளம்பரதாரர்களது நாடகங்களைக் கொஞ்சம் ரசிக்க முடிகிறது. சிரிப்பு நாடகங்களில் அவர்கள் சிரிக்கிறார்களே ஒழிய, நம்மைச் சிரிக்க வைக்க முயற்சி கூடச் செய்வதில்லை. தொடர் நாடகங்கள் சில ஜவ்வு மிட்டாய் போன்று விஷயமே இல்லாமல் வளர்ந்து வந்து திடீரென முற்றுப் பெறுகின்றன. பின்னணி இசையிலும், ஒலிப்பதிவிலும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியுள்ளது. நாடகத்தின் முடிவே அந் நாடகத்தினைச் சிறப்பாய் அமைக்கும். இதனை உணராமல் செயல்படுகின்றனர். நாடக முடிவு மக்கள் மனத்தில் எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை.

தமிழோடு ஒப்பிடுகையில் இந்தி நாடகங்கள் சிறப்பாகவே இருக்கின்றன.

- மு. வெற்றிவேலு,
முதுகலை – இரண்டாம் பருவம்,
தமிழ்த் துறை,
பட்டமேற்படிப்பு மையம்,
இலாசுப்பேட்டை அஞ்சல்,
புதுச்சேரி – 605 008.

அடக்குமுறைகளுக்கு எதிராக ஓர் அமைப்பு!

அந்த நான்கு இளைஞர்களும் மதுக் கோப்பைகளை நீட்டிக் கொண்டே 'சியர்ஸ்'க்கு பதிலாக 'விடுதலையே வருவாய்' என்று உற்சாகமாக முழங்கினர். அரசாங்கத்தின் காதுகளாகச் செயல்பட்ட ஒற்றர்களுக்கு இத் தகவல் எட்டியது. விளைவு? நான்கு பேரும், அரசாங்கத்தை எதிர்த்துப் போராடியதாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கொட்டடிக்குள் அடைக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் நடந்தது போர்ச்சுக்கல் நாட்டில். சர்வாதிகாரி சலாசார், அப்போது ஆண்டு கொண்டிருந்தார்.

அந்த அப்பாவி இளைஞர்கள் நான்கு பேரும் சிறையில் அடைக்கப்பட்டதைக் கேள்விப்பட்ட லண்டன் வழக்கறிஞர் பீட்டர் பெனான்ஸன், 'இந்த அநியாயத்தை தட்டிக் கேட்க ஆளில்லையா?' என்று 'அப்சர்வர்' பத்திரிகையில் கட்டுரை எழுதினார். பாதிக்கப்பட்ட இந்த இளைஞர்கள் பற்றிக் குறிப்பிட்டது மட்டுமின்றி, உலகின் பல்வேறு பகுதிகளிலும் அடக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து, அது காரணமாக வெஞ்சிறையில் வாடும் அனைவரின் சார்பாகவும் குரல் கொடுத்தார். 'இது போன்று வாடும் மக்களுக்கு உதவ முன்வருபவர்கள் வரலாம்' என்று அழைப்பு விடுத்தார். பல நாடுகளைச் சேர்ந்த ஆயிரம் பேர் பெனான்ஸனுக்கு ஆதரவாகக் கைகோத்தனர். இப்படித்தான் 1961 ஆம் ஆண்டு பிறந்தது 'அமனஸ்டி இண்டர் நேஷனல்' எனப்படும் சர்வதேசப் பொது மன்னிப்பு இயக்கம்.

இன்று உலகில், எந்த மூலையில் அப்பாவி மக்கள் ஆட்சியாளர்களால் கொடுமைப்படுத்தப்பட்டாலும் இந்த இயக்கத்திடமிருந்து எதிர்ப்புக் குரல் ஒலிக்கிறது. மனித உரிமை மீறல்களையும் ஜெயிலில் நடக்கும் மர்ம மரணங்களையும் எதிர்த்துத் தனது குரலை வலிமையாக வெளிப்படுத்துகிறது இந்த இயக்கம். இது மட்டுமல்ல; பாதிக்கப்பட்ட மக்களை, அவர்கள் ஜெயிலில் இருந்தாலும், அடிக் கடி சென்று பார்த்துப் பேட்டி காண்கிறது, இயக்கத்தின் தூதுக் குழு. சித்திரவதை செய்யப்பட்ட



வர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறது. சி ல ரி ன் விடுதலைக்குப் பின்னர் புனர்வாழ்வுக்கும் இயக்கம் உதவு கிறது. இவற்றோடு தூக்குத் தண்டனையே கூடாது என்பதை இயக்கத்தின் முக்கிய கோரிக்கையாக வைத்திருக்கிறது.

போலீஸ்காரர்கள் பழிவாங்குவதற் கென்றே போலியாக மோதல்களை உரு வாக்கி விடுவார்கள். அதாவது, 'தாக்க வந்தான்; அதனால் சுடும்படி நேர்ந்தது' என்று ஒரு 'செட்டப்'! வேறு சில அரசுகள் விசாரணை இன்றிச் சிலரைக் கைது செய்து உள்ளே தள்ளி விடும். சில சமயம் ஆட்சியில் இருப்பவருக்குப் பிடிக்காமல் போகும் நபர் திடீரென்று காணாமலே போய் விடுவார்! இதற்கெல்லாம் எதிராகக் குரல் கொடுப்பதில் முன்னணியில் நிற்பது அம்னஸ்டி இண்டர்நேஷனல்.

ஆந்திராவில் பால கோபால் என்ற வழக் கறிஞரைப் போலீஸ் பிடித்துக் கொண்டு போனது. பிறகு அவர் என்ன ஆனார் என்றே தெரியவில்லை. இந்த விஷயம் லண்டனில் உள்ள அம்னஸ்டியின் தலை மையகத்துக்குத் தெரிவிக்கப்பட்டது. 'பால கோபாலைப் பொது மக்கள் முன் உடனே ஆஜர்படுத்தச் சொல்லி உலகப் பொது மக்களை இந்திய அரசுக்குத் தந்தி யடிக்கச் சொன்னது, அம்னஸ்டி. உலகின் பல பாகங்களிலிருந்தும் லட்சோப லட்சம் தந்திகள் இந்தியத் தலைநகரில் குவிந்தன. இந்திய அரசும், ஆந்திர மாநில அரசும் திகைத்துப் போயின. அடுத்த சில தினங்களில் பாலகோபால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்! இது போல் இன்னும் எத்தனையெத்தனையோ!

இன்று உலகெங்கிலும் பத்து லட்சம் பேர் அம்னஸ்டியில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். ல ண்ட னி ல் உள்ள தலைமை நிலையத்தில் 250 முழு நேரப் பணியாளர்கள், உலகெங்கிலுமிருந்து வரும் மனித உரிமை மீறல், அடக்குமுறைச் செய்திகளைத் தொகுத்து அதனதன் அவச ரத்தைப் பொறுத்து, நடவடிக்கை எடுக்கி றார்கள். பல ஐரோப்பிய நாடுகளில் மந்திரிகள், பிரதமர்கள் ஆகியோரும் அம்னஸ்டியின் உறுப்பினர்களாக இருக்கி றார்கள்.

நமது நாட்டைப் பொறுத்தவரை, பஞ்சாப், காஷ்மீர் மாநிலங்களில், 'தீவிர வாதிகளை ஒடுக்குகிறோம்' என்ற பெயரில் அப்பாவிகள் பலர் பாதிக்கப் பட்டுள்ளனர். இது பற்றி ஆராய, அம் னஸ்டி தூதுக்குழு அந்த மாநிலங்களுக்குச் செல்ல விருப்பப் படுகிறது. ஆனால் நமது இந்திய அரசு அனுமதி கொடுக்க மறுக் கிறது. அதிலும் வெளியுறவுத் துறை பச்சைக் கொடி காட்டி விட்டது. ஆனால் உள்துறை 'நோ' சொல்கிறது. ''அரசு ஏன் பயப்படுகிறது என்று புரியவில்லை'' என்று சொன்ன, இந்த இயக்கத்தின் இந்தியத் துணைத் தலைவர் நெடுஞ்செழியன் (நாவலர் அல்ல) இன்னொரு சம்பவத்தையும் குறிப்பிட்டார்:

சமீபத்தில் அம்னஸ்டி தனது புத்தக வெளியீடுகளைச் சென்னையில் உள்ள ஒரு பிரபல புத்தகக் கடையில் விற்பனைக்காக வைத்திருந்தது. ஒரே நாளில் அத்தனையும் விற்றுப் போயிற்று. ஆச்சரியத்தோடு அந்தப் புத்தகக் கடை உரிமையாளரை விசா ரித்த போது, அவர் சொன்னார்: ''எல்லாப் புத்தகங்களையும், சிறைச் சாலை ஐ. ஜி. வாங்கிக் கொண்டு போய் விட்டார்!''

- ப்ரியன்

50

வாசகர் யோசனை :
நெல்லை குரலோன்,
பொட்டல்புதூர்.

இன்றைய இசை – இந்திய இசை



◆ பாலமுரளிகிருஷ்ணா



◆ மல்லிகார்ஜுன் மன்சூர்

'இந்தியா டுடே' வெளியிடுபவர்கள், பல மொழிகளில் தங்கள் பத்திரிகையைக் கொண்டு வருவதில் முதலில் வெற்றி கண்டார்கள். இவர்கள் கவனம் இப்போது இசையின் பக்கம் திரும்பியிருக்கிறது.

காசெட்டுகள் ஏராளமாக விற்பனை ஆகி, வீடெங்கும், தெருவெங்கும் முழங்கு வதைச் சரியாகக் கவனித்து, எந்த இசைக் கலைஞருடைய காசெட்டை வெளியிட லாம் என்று துல்லியமாகக் கணித்து, பதி னேழு காசெட்டுகளை வெளியிட்டிருக் கிறார்கள். இவற்றில் நான்கு கர்நாடக இசை; பதின்மூன்று இந்துஸ்தானி இசை. எல்லாமே ஒரு மணி நேர காசெட்டுகள். இவற்றுக்கு Maestro's Choice என்பது பொதுப் பெயர்.

மகாராஜபுரம் சந்தானத்தின் காசெட், ஒரு குட்டிக் கச்சேரி. மோகனம், சாவேரி, சுத்த தன்யாசி, காம்போதி, புன்னாக வராளி, சிந்துபைரவி என்று மனசைச் கண்டியிழுக்கும் ராகங்களில், கரகரப்பும் இனிமையும் நிறைந்த குரலில் மெய் மறக்கச் செய்திருக்கிறார் மகாராஜபுரம். பக்தவத்சலத்தின் தனி ஒரிரு நிமிஷம்தான் என்றாலும் அதன் ஒவ்வொரு வினாடியும் ஜிலுஜிலுப்பு.

பாலமுரளி என்றால் சொந்த சாகித்தியம் இல்லாமலா! 'பூர்விகல்யாணி'யில் நீ தய ராதா இருக்கவே இருக்கிறது. அவருடைய ஃபேவரிட், கானடா ராக பிருகதீசுவர மகா தேவ, பெஹாக் ராக தில்லானா எல்லாமே அவரது ரசிகர்களைத் திருப்திப்படுத்தும்.

மைசூர் துரைசாமி அய்யங்காரின் காசெட்டில் அ மை ம தி யா ன வீணை இசையை ரசிக்கலாம். நேர்த்தியான இசைக்கு, வேலூர் ராமபத்ரனின் மிருது வான மிருதங்கம், இறகால் வருடுவது போல் அமைந்திருக்கிறது.

டி. என். கிருஷ்ணனின் வயலின், இசை யை அமுதமாய்ப் பொழிகிறது.



◆ மகாராஜபுரம்



◆ ரவிசங்கர்

◆ கிஷோரி அமோன்கர்

◆ கங்குபாய் ஹங்கல்





இந்துஸ்தானி இசைப் பிரியர்களுக்கு, ஹரிபிரசாத் சௌராசியாவின் புல்லாங் குழல்; ரவிசங்கரின் சிதார்; பிஸ்மில்லா கானின் ஷெனாய்; ராம்நாராயணனின் சாரங்கி; அசாத் அலிகானின் ருத்ர வீணை, சிவ்குமார் சர்மாவின் சந்தூர்; அல்லாராக்கா - ஜாகிர் உசேன் இரு - தபலா என்று வாத்திய இசையோடு, மல்லிகார்ஜுன் மன்சூர், பண்டிட் ஜஸ்ராஜ், பீம்சேன் ஜோஷி, கிஷோரி அமோங்கர், கங்குபாய் ஹங்கல், தாகர் சகோதரர்கள் என்று, புகழ் பெற்ற கலைஞர்களின் வரிசையை வழங்கி யிருக்கிறார்கள். ஆமாம், சரோட் வாத்தி யத்தை மட்டும் ஏன் விட்டுவிட்டார்கள்?

சிவகுமார் சர்மாவின் சந்தூர், இதில் தனித்தன்மையுடன், மிகச் சிறந்த இசையின் சிகரத்தில் நி ற் கி ற து. பூவாணம், பூஞ்சிதறல், வாண வேடிக்கை என்று சந்தூ ரில் ஒரு வாத்திய ஜாலத்தையே நிகழ்த்தி யிருக்கிறார். இதில் கேட்கிற ஷஃபாத் அகமத்கானின் தபலாவைப் போல், வேறு எந்த காசெட்டிலுமே துல்லியமாகக் கேட்க முடியவில்லை. ஒலிப்பதிவு இதில் அவ்வ ளவு கூர்மை.

ஒவ்வொரு காசெட்டின் விலை 48 ரூபாய். சற்று அதிகம்தான். சற்று என்ன, அதிகமேதான். 'கலைக்கு என்ன விலை கொடுத்தால்தான் என்ன?' என்று கேட்க லாம். ஆனால் அதிக வசதி இல்லாத வர்களையும் சிறந்த கலை சென்றடைய வேண்டாமா? மறு பதிப்பிலேனும் விலை யைக் குறைக்க முடியுமா பார்க்கலாம்.

– ரசிகன்



அமரர் கல்கி நினைவாக— பொன்விழா சிறுகதை; நாடகம்; கவிதைப் போட்டிகள்

சிறுகதைகள்:

முதல் பரிசு	ரூ. 2,000
இரண்டாம் பரிசு	ரூ. 1,000
மூன்றாம் பரிசு	ரூ. 500

நாடகங்கள்:

முதல் பரிசு	ரூ. 1,000
இரண்டாம் பரிசு	ரூ. 500

கவிதைகள்:

முதல் பரிசு	
(புதுக் கவிதைக்கு)	ரூ. 250
(மரபுக் கவிதைக்கு)	ரூ. 250
இரண்டாம் பரிசு	
(புதுக் கவிதைக்கு)	ரூ. 150
(மரபுக் கவிதைக்கு)	ரூ. 150

ஆக மொத்தம் ரூ. 5,800 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு சிறுகதையும் ரூ. 150 சன்மானம் பெறும்; ஒவ்வொரு நாடகமும் ரூ. 125 ம் ஒவ்வொரு கவிதையும் ரூ. 75 ம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

- படைப்பு எதுவாயினும் அது உங்கள் சொந்தக் கற்பனை என்றும் இதற்கு முன் வேறெங்கும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் வேறெதிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தர வேண்டும்.
- கதைகள்; நாடகங்கள்; கவிதைகளைத் தனித்தனியே அவற்றுக்குரிய நடுவர் குழு பரிசீலித்துப் பரிசுக்குரியனவற்றைத் தேர்ந்தெடுக்கும்.

○ **கதைகள், கவிதைகள், நாடகங்கள் ஆகியவற்றை அனுப்பக் கடைசித் தேதி: ஜூன் 15.**

- உறையின் மேல் பொன் விழா சிறுகதை நாடகம்/கவிதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாதவற்றைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டப்பெற்ற சுயவிலாசமிட்ட உறையைக் கதை அல்லது நாடகம் அல்லது கவிதையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகளும் நாடகங்களும் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாமல் இருப்பது நலம். கவிதை ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாய் அமைதல் வேண்டும். ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட சிறு கதைகளையோ, நாடகங்களையோ, கவிதைகளையோ அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

○ **போட்டி முடிவும் முதல் பரிசுச் சிறுகதையும் கல்கி ஆகஸ்டு 4வது ஆண்டு மலரில் பிரசுரமாகும். மற்றவை அடுத்து வரும் இதழ்களில்.**

○ **பரிசுகள் பொன் விழா மேடையில் ஆகஸ்டு 3 ஆம் தேதி நடக்கவிருக்கும் தொடக்க தின நிகழ்ச்சியில் வழங்கப் பெறும்.**

○ **எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.**

ஆசிரியர், கல்கி, சென்னை — 600 032.

இத்தனை வருடங்களாக இருந்த வீடு தான். ஆனாலும் மீராவுக்கு அன்னியமான இடம் போலத் தோன்றியது.

பழகின மனிதர்களே புதியவர்களாகக் காணப்பட்டார்கள்.

வீட்டில் அதிகம் பேச்சே இல்லை. அவரவர் தங்களது வேலைகளில் பம்பர மாய்ச் சுழன்றார்களே தவிர, மௌனம்தான் ஆட்சி செய்தது.

இத்தனைக்கும் அந்த வீட்டில் நாலே பேர்தான். என்றாலும் முன்பெல்லாம் சப்தமும், சிரிப்புமாய் வீடு அமர்க் களப்படும்.

அப்பாவுக்கு, அம்மாவை ஏதாவது சீண்டாவிட்டால் சாப்பாடே இறங்காது.

காலையில் வாசலில் தண்ணீர் லாரி வந்து நிற்கும். அப்பா கையில் ஒரு வாளி யும், தோளில் ஒரு குடமுமாய்த் 'திபு திபு'வென ஓடி ஓடித் தண்ணீர் பிடிப்பார்.

அண்டை அசலில் அவருடன் ஒரே

தலைக்குத் தலை கிண்டல்... கூச்சல்... வயது வித்தியாசம் பாராமல் பளிச்சென வந்து விழும் விமர்சனங்கள்..

இத்தனையும் மீரா, அவள் தாய் - இன் னும் மற்ற குடும்பத்து மனைவி, மக்கள் சேர்ந்திருக்கும் சமயத்தில்தான்.

மீரா கையைக் கொட்டிச் சிரிப்பாள். அம்மாவுக்கும் சிரிப்பு வரும். ஆனாலும் பொய்யாய் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வாள்.

இப்பொழுதெல்லாம் தண்ணீர் லாரி வந்தால் அப்பா, குடத்தையும் வாளியை யும் எடுத்துக் கொண்டு வாசற்பக்கம் ஓடு வதே இல்லை.

அக்கம் பக்கத்தினரே தலைக்கு நாலைந்து குடம் தண்ணீரைப் பிடித்துக் கொண்டு வந்து கொட்டி விட்டுப் போகின் றனர்.

''போதுமா சார்?''

''போதும்பா. தாங்க்ஸ்..''

அம்மா வெளியே வருவதே அபூர்வம்.

நேற்று வரை நந்தவனம்

அலுவலகத்தில் வேலை பார்க்கும் சிநேகிதர்கள்.

காலையில் தண்ணீர் பிடிப்பதில் ஆரம் பித்து, இரவு தூக்கம் வரும் வரையில், யார் வீட்டு போர்டிகோவிலாவது உட்கார்ந்து அரட்டை அடித்து விட்டு வந்தால்தான் நிம்மதி..

''என்ன சார்... மூணு பேர்தான் இருக் கீங்க... முப்பது வாளிக்குக் குறையாம தண்ணி பிடிக்கறீங்க... எப்படி ஸ்டோர் பண்ணி வைக்கறீங்க?''

''அதை ஏன் கேட்கறேடா... ஒரு நாளைக்குக் குறைஞ்சது முப்பது வாளி தண்ணி பிடிச்சாத்தான் என் ஒய்ஃப் ராத்திரி என்கூட முகம் கொடுத்துப் பேசுவா...''

'ஹோ, ஹோ'வெனக் கும்பல் சிரிப்பில் அலைமோதும்.

''ஏன் சார், இத்தனை வயசுக்கு அப்புற மாக் கூடவா - பெண்டாட்டி முகம் கொடுத் துப் பேசலைங்கறதுக்காக வருத்தப் படறீங்க...''

அனுராதா ரமணன்

அனேகமாய், சமைத்த நேரம் போக, மீதி நேரமெல்லாம் படுக்கைதான்... வெறுந் தரையில், சுவரைப் பார்க்க ஒருக்களித்து...

சிறுவன் மணி கூட - சப்தமில்லாமல் வந்து சாப்பிட்டு விட்டு வெளியே ஓடி விடு வான்.

ஒரு நாள் டெலிவிஷனில் ஒலியும் - ஒளியும் பார்க்க அவன் உட்கார, அம்மா வெறிபிடித்தவள் போலக் கத்தினாள்:

''முதல்லே அந்தச் சனியனை நிறுத் துடா...''

''ஏம்மா... நல்ல பாட்டும்மா...''

''எந்தப் பாட்டும் வேண்டாம். இப்ப நீ நிறுத்தப் போறியா... இல்லே., எழுந்து வந்து முதுகுல நாலு வைக்கட்டுமா?''

அன்றிரவு -

மீரா தூங்கி விட்டாள் என்கிற நினைப்பில் அப்பா, கூடத்தில் வைத்து அம்மாவிடம் கொஞ்சம் அதட்டினாற் போலச் சொன்னார்.

''அவன் பாட்டுக்கு ஏதோ பார்த்துட்டுப் போறான். அநாவசியமா அவனை எதுக் காக விரட்டினே.. அவனும் ஒண்ணும் சின்னக் குழந்தையில்லே... என்னடா,

இந்த வீட்டுல இருக்கறதை விட வெளியில சுத்தறதே மேல்னு நினைச்சுட்டா என்ன பண்ணுவே?''

''சுத்தட்டும். நான் கையப் பிடிச்சுத் தடுக்கறதுனால ஏதாவது நின்னுடப் போறதா.. மலையாட்டம் புருஷனைப் பறிகொடுத்துட்டு அந்தக் குழந்தை மலங்க மலங்க முழிச்சிண்டு உட்கார்ந்திருக்கு. இவனுக்கென்ன ஒலியும் - ஒளியும் கேட்கறதுன்னோன்.. ஹீரோவும், ஹீரோயினும் கொஞ்சறதும், கட்டிண்டு உருள்றதும்... பார்க்கச் சகிக்கலை. என் குழந்தைக்கு வாழ்க்கையில கிடைக்காத சுகம் அது.. அதைப் பார்க்கறச்சே என் வயிறு கொதிக்கறதே... கொதிக்கறதே...''

''ஷ்.. சப்தம் போட்டு அவளை எழுப்பிடாதே. நீ சொல்றதெல்லாம் சரி தான். அதுக்காக எத்தனை நாளைக்குத்தான் அவளை - பெட்ரூமுக்குள்ளேயே வச்சிருக்க முடியும்... வெளியே வரட்டும்... டீ.வி.யில நாலு விஷயம், பத்திரிகைகளிலே ரெண்டு துணுக்கு.. இப்படி படிச்சு மனசை மாத்திக்கட்டும். நீயே இப்படியிருந்தா...''

அம்மா நீளமாய்க் கேவினாள்.

''என் குழந்தையோட சிரிப்பெல்லாத்தையும் அநியாயமாப் பிடுங்கிண்டு, அவளை அலங்கோலப்படுத்திட்டானே அந்தக் கடங்காரன்.''

யாரை அவள் கடன்காரன் என்று திட்டுகிறாள் என்பது மீராவுக்குப் புரியவில்லை.

யாரை?

தாலி கட்டிய கீர்த்தியையா?

கொண்டு சென்ற எமனையா?


இல்லை. இத்தனைக்கும் காரணமான, அந்த விபத்துக்குக் காரண கர்த்தாவாக இருந்தவனையா?

அன்றைக்கு அப்பா சொன்னார் அம்மாவிடம்.

''அவ கொஞ்சம் உடம்பு தேறி, பழையபடி நடமாடட்டும்... நல்ல மாப்பிள்ளையாப் பார்த்து, நானே முடிக்கறேன்.. கல்யாணச் சத்திரம், சம்பந்தி உபசாரம், பந்தி பந்தியாச் சாப்பாடு... எதுவும் வேண்டாம். கோவில்லே வச்சுக் கூட தாலி கட்டச் சொல்ல மாட்டேன்... நேரே ரிஜிஸ்தரார் ஆபீசுக்கு இழுத்துண்டு போய்த் தாலி கட்டச் சொல்றேன்.''

''சொல்றோமே தவிர - ரெண்டாம் கல்யாணம்னு போறப்ப - எத்தனை கேள்வி வரும்... முதல்லே கல்யாணமான பத்து நாள்லேயே புருஷனைப் பறிகொடுத்தவளைத் துரதிர்ஷ்டக்காரின்னு பேச மாட்டாளா...?''

''நான் சொல்றேன். அவ ஒன்னும் அதிருஷ்டக் கட்டையில்லே... என்



குவிஸ் டைம்

தேர்தல் முடிந்து புதுப் பிரதமர் பதவி ஏற்கப் போகும் சூழ்நிலையில் 'பிரதமர்கள்' பற்றிய குவிஸ் இது.

1. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் நேரு என்பது தெரியும். அதற்கு முன் ஆட்சி மாற்றத்தின் போது நம் சுதந்திர தினம் வரையிலான இடைக்கால அரசில் பிரதமராய் இருந்தது யார்?

2. இரண்டு முறை 'ஆக்டிங்' பிரதமராய் இருந்தவர் யார்?

3. மிகக் குறைந்த காலம் பதவியிலிருந்த பிரதமர் யார்?

4. மிகக் குறைந்த வயதில் பிரதமரானவர் ராஜீவ். அவர் தம் எத்தனையாவது வயதில் பிரதமரானார்?

5. பாராளுமன்றத்தின் வரலாற்றிலேயே ஒரு பிரதமரின் பேச்சு, அவைக் குறிப்பிலிருந்து, சபாநாயகரால் நீக்கப்பட்டது. அது யாருடைய பேச்சு?

6. தேர்தலில் தோல்வியடைந்த பிரதமர் யார்?

7. பதவியிலிருக்கும் போது இறந்து போனவர் யார், யார்?

விடைகள் 50 - ம் பக்கம்...



''காப்பி ரொம்பப் பிரமாதமா இருக்கே. காப்பித் தூள் எங்கே வாங்கறீங்க?''

''பக்கத்து வீட்லதான் என் மனைவி கைமாத்து வாங்குவா!''

- எஸ். முகம்மது யூசுப்.

பொண்ணோட வாழ அவனுக்குக் கொடுத்து வைக்கலைடி. கல்யாணப் பந்தல்லே - புடைவை கட்டின குத்து விளக்கு மாதிரி வந்து நின்னாளே.. இப்பேர்ப்பட்ட அழகைக் கண்டு, அவன் பயந்து போய் ஓடிட்டான்டி...''

''மெதுவா... என்னைச் சொல்லிட்டு நீங்க இப்படி சப்தம் போடலாமா?''

இப்போது அம்மா, அவரை அடக்குகிறாள்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு, படுக்கப் பிடிக்காதவளாய் மீரா - அறையை ஒட்டி உள்ள போர்டிகோ சுவரின் மீது வந்து உட்கார்ந்தாள்.

பகலில் இப்படி உட்கார முடிவதில்லை. பழகின முகங்கள். இவளைப் பார்த்தவுடனேயே சிரிப்பைக் கழற்றி வைத்து விட்டுத் துக்க முகமூடியை எடுத்து மாட்டிக் கொள்கின்றன.

இரவில்தான் வெளிக் காற்றைச் சுவாசிக்க முடிகிறது. இருட்டோடு கலந்த கீர்த்தியிடம் மானசீகமாய்ப் பேச முடிகிறது.

'நீங்க பார்த்துட்டே இருங்கோ... இதுக்கெல்லாம் காரணம் யார்னு கண்டுபிடிக்காம விடப் போறதில்லே...'

இதற்குள் அம்மாவும் அப்பாவும் இவளைக் காணாமல் பதறிக் கொண்டு, தேடி வந்துவிட்டார்கள்.

''மீரா... இங்கே என்னம்மா பண்றே?''

''சும்மாத்தான்... தூக்கம் வரல்லே...''

''கால் வலிக்கிறதோ...!''

''ஊம்ஹூம்...''

''உள்ளே வா... ரொம்பவும் தூக்கம் வராமப் போனா ஒரு ஸெடடிவ் மாத்திரை எடுத்துக்கலாம்னு டாக்டர் சொல்லியிருக்கார். தர்றேன். சாப்பிட் டுட்டுத் தூங்கு...''

''இல்லேம்மா...கொஞ்சம்யோசிச்சுட்டே இருந்தாத் தேவலை போல இருக்கு.''

''வேண்டாம்மா... ஏற்கெனவே ஹெட் இன்ஜுரி.. காயம் ஆறிட்டு வர்றதே பெரிசு... அநாவசியமா மூளையப் போட்டுக் குழப்-''

அவளால் அதற்கு மேல் தாங்க முடியவில்லை. வெறி பிடித்தவள் போலக் கத்தினாள்.

''என்னை எதுக்காகப் பிழைக்க வச்சீங்க? மண்டை பொளந்து, கால் கருகி... இத்தனைக்கு அப்புறம் என்னை எதுக்காக.. இனமும் நீங்க கொடுக்கற தூக்க மாத்திரையத் தின்னுட்டு, கட்டில்லே கட்டையாக் கிடக்கவா... பிழைச்சிருக்கேன்னா அதுக்கு ஏதாவது காரணம் வேண்டாமா...? நான் அப்படித்தான் யோசிப்

பேன்.. என் மண்டைக்குள்ள புழு குடையற மாதிரி, ஆயிரம் கோடி சந்தேகம் இருக்கு...''

அப்பா, மீராவின் அருகில் வந்து தோளைத் தடவினார்.

''நீ நிறைய யோசி... ஆனா - உன்னை நீயே சித்திரவதை செஞ்சுக் காதே... இப்ப என்ன செய்ய ணும்.... சொல்லு..''

''போலீஸ் டிபார்ட் மெண்ட்டுக்கு ஒரு லெட்டர்... கவர் னருக்கு ஒரு லெட் டர்... எழுதணும்...''

அப்பா, புருவத்தை உயர்த்த, அம்மாவோ - மகளுக்கு உண்மையி லேயே மூளை கலங்கி விட்டதோ என்று கை யைப் பிசைய...

''என்னன்னு எழுத ணும்?''

''அந்த விபத்து நடந்து மூணு மாசமா யிடுத்து. இன்னும் அது சம்பந்தமா ஒரு ஈ எறும் பைக் கூட போலீஸ் அரெஸ்ட் பண் ணலை. இதுதான் போலீஸ் டிபார்ட் மெண்ட்டோட லட்ச ணமான்னு நாக்கைப் பிடுங்கிக்கற மாதிரி கேட்டு எழுதணும்...''

''........''

''இல்லே, இது விஷ யமா ஏதாவது தகவல் கிடைச்சும், பணம் வாங்கிட்டு, கேஸைத் தூக்கிப் பரண்லே போட்டுட் டாங்களான்னு தெரிய ணும்னு கவர்னருக்கு எழுதணும்..''

அப்பா, மகளைப் பார்த்து ஆதரவாய்ப் புன்னகை செய்தார்.

''சரி... இதுக்கெல்லாம் பதிலா - அவங்க, இன்னும் சரியான துப்புக் கிடைக் கலை; கிடைச்சதும் உங்களுக்குத் தெரி யப்படுத்தறோம்னு எழுதிட்டாங்கன்னு வச் சுப்போம்... என்ன செய்யப் போறோம்?''

''நீங்க ஒண்ணும் செய்ய வேண்டாம். என்னை மறுபடியும் தஞ்சாவூருக்கே ரயி லேத்தி விட்டுடுங்கோ!''

''அசடு.. சரியான அசடு... அங்கே போய் சம்பந்தமே இல்லாம - கீர்த்தி வீட்டுல போய் என்ன செய்யப் போறே... நாகு மாமா வேற அப்படிச் சொல்லியிருக் கார்...''

''நான் திருச்சி போறேன்னுதான் சொன் னேனே தவிர - அவர் வீட்டுக்குப் போறதாச் சொன்னேனா... நான் போறது. இந்தப் போலீஸ்லாலே கண்டுபிடிக்க முடியாத - அப்படியே கண்டுபிடிச்சிருந்தாலும் வெளி



விடத் தயங்கற - குற்றவாளியை வெளிச் சத்துக்குக் கொண்டு வரத்தான்...''

அப்போதைக்கு அவளைத் தூங்க வைப்பதற்காக அவர்கள் மௌன விரதம் அனுஷ்டிக்க வேண்டியிருந்தது...

ஆனால் உடல்நிலை தேறத் தேற - மீரா வின் மூச்சே - தஞ்சாவூர்ப் பயணம்தான் என்றாகி விட்டபோதோ...

பெற்றவர்கள் திணறிப் போனார்கள்.

(தொடரும்)

ஊர் வாய்

கா.சு.வேலாயுதன்

“எனக்கென்னவோ அங்கே வர்றதுக்குக் காலே வர மாட்டேங்குது சுசிலா...!”

“உண்மைதான் அருக்காணி... பட்டுப் போகிற வயசா இந்த ரஞ்சிதாவுக்கு...? மல்லிகைப் பூ மாதிரி சுபாவம்... எல்லாரையும் கலபத்துல அட்டையா ஒட்ட வைக்கற அளவுக்கு அவளோட பேச்சு.. இப்ப அது எல்லாமே போயிருக்கும்ன்னு நினைச்சா மனசு தாங்கலைதான்...!”

“பாவம் அவ.. அந்தக் குடிகாரப் புருஷனுக்கு வாழ்க்கைப்பட்ட இந்த ஆறேழு வருஷத்துல அப்படி என்ன சுகத்தைக் கண்டா..? ரெண்டு பிள்ளைகளைக் கொடுத்தது போக, அவ அவன்கிட்டே வாங்கினதெல்லாம் அடியும், உதையும் வசவு வார்த்தைகளும்தானே...? அவ்வளவு கஷ்டத்துலயும் அவளை வீட்டுக்கு வெளியே ஒரு நிமிஷம் முகஞ்சோர்ந்து நாமதான் பார்த்திருப்போமா...? பார்த்திருக்கத்தான் முடியுமா...?”

“எல்லாம் அவ அப்பன் செஞ்ச தப்பு... பட்டணம் போய்ப் படிச்சிட்டிருந்த பொண்ணு, யாரையோ வேத்து சாதிப் பையனை மனசார விரும்பினாங்கற பாவத்துக்காகப் படிப்பையும் பாதியில பிடுங்கியெறிஞ்சுட்டு, இங்கே தறுதலையாத் திரிஞ்சுகிட்டிருந்த அவ தாய் மாமனுக்குப் போய்க் கட்டி வச்சான், அந்தப் பிடிவாதக்காரன்...! இப்ப என்னாச்சு.. சதா அடியும் உதையும் வாங்கி வாங்கிக் குற்றுயிராக் கிடந்தவ இப்ப 'தாலிய அறுத்துக்கிட்டு' நிக்கிறா...! உண்மையிலேயே கடவுள் அவளை ரொம்பவும்தான் சோதிக்கிறான் போ....!”

“எனக்கென்னவோ அப்படித் தோணலை சுசிலா... தனக்குப் பிடிக்காத, அதுவும் ஒரு கொடுமைக்காரக் குடிகாரனுக்கு வாழ்க்கைப்பட்டு, அவ அப்படி நித்தம் நித்தம் அடிமைப்பட்டு - அடிபட்டுச் சாகறதை விட, இப்படி அவன் அல்பாயுசில 'அறுத்துட்டுப்' போனதே தேவலைன்னு எனக்குப் படுது!”

“அந்தப் பால் வடியற முகத்துல பூவையும், பொட்டையும் பறிச்சிருப்பாங்களே... எப்பவும் கலகலப்பா இருக்கிற அவ கை வளையல்களையெல்லாம் உடைச்சு தூளியாக்கியிருப்பாங்களே... அந்தக் கோலத்தோட அவளை நினைச்சுப் பார்த்தாலே நெஞ்சு கலங்குது... எப்படி நேரடியா அவளைப் பார்த்துத் துக்கம் கேட்பேனோ...!”

- நெஞ்சம் விம்மத் தணிந்த குரலில் சொன்ன அருக்காணியை சுசிலா ஒரு கணம் நின்று இமைகள் சுருங்கப் பார்த்து விட்டு, “அப்ப, இன்னேரம் அவ பூவையும் பொட்டையும் பறிச்சிருப்பாங்களா...? கருமாதிச் சடங்குகளெல்லாம் முடிஞ்சிருக்கும்ன்னு நினைக்கிறியா..?”

- சந்தேகமாய்க் கேட்டாள்.

“பின்னே இன்னுமுமா விட்டு வச்சிருப்பாங்க... வேற்று சாதிப் பையனை விரும்பின ஒரே காரணத்துக்காகத் தன் பொண்ணைப் பாழும் கிணத்துல தள்ளின அவ அப்பன், இன்னுமுமா அவளை அதே கோலத்துல விட்டு வச்சிருப்பான்...?”

“அடப் பாவமே...! அவன்தான் போனவன் போயிட்டான்... அதுவும் அவன் நல்லவனா இருந்தாலும் பரவாயில்லை... பரம அயோக்கியப் பயல்... அவன் கையால கட்டின அந்தத் 'தாலிக் கயித்தை' வேணும்னா அறுத்திட்டு போகட்டுமே... இவகிட்டேயிருந்து, நிரந்தரமான பூவையும் பொட்டையும் பறிக்கிறது எந்த விதத்துல நியாயம்..? அது அவகிட்ட நிரந்தரமாக் குடியிருக்கிற பூஞ்சிரிப்பையே பறிச்சிடுமே...!”

“பறிச்சிடுமே என்ன... பறிச்சிடும் தான்...! அவ சந்தோஷத்தை மட்டுமல்ல... அவளைப் பார்க்கிறவங்க ஒவ்வொருத்தரோட மனசுலயும் வலுக்கட்டாயமா சோகத்தை உண்டாக்குகிற சங்கதி தான்றதுல கொஞ்சமும் சந்தேகமே வேண்டாம், அது இந்த ஊராருக்குத்தான் புரியலை... அவளைப் பெத்த அப்பனுக்குப் புரிய வேண்டாமா...?”

“இப்படிப்பட்ட அப்பன்களையெல்லாம் முதல் வேலையாக் கழுவுல ஏத்த

ணும். அப்பத்தான் நம்ப மாதிரி பொம்ப ளைங்களுக்கெல்லாம் ஒரு விடிவெள்ளி முளைக்கும்...!''


இவர்கள் பேசிக் கொண்டே ரஞ்சிதா வீட்டை அடையும் போது, அவளின் பெரிய வீட்டின் முன்னே சின்னதாகத் துக்கம் விசாரிக்க வந்தவர்களின் கூட்டம்...!

குழுமியிருந்த கூட்டத்தை நெருங்கின தும் இவர்கள் இருவருமே நாவடக்கிக் கொண்டு அமைதியாயினர். அப்போது தான் நினைவு வந்தவர்கள் போல், சேலைத் தலைப்பைத் தலைக்கு முக்காடாக இழுத்து விட்டுக் கொண்டவர்கள், நெஞ்சிலடித்துக் கொண்டு ஊரையே தூக்கும் விதமாய் ஏதோ ஒரு ஒப்பாரி பாடிக் கொண்டு உள்ளே நுழைய -

''ஏம்மா.. ஏம்மா.. வீணாச் சப்தம் போட்டு ஊரைத் தூக்கறீங்க...? துக்கம் விசாரிக்கிறதுன்னா உள்ளே போய் உட் கார்ந்து, அமைதியா ஆற அமர விசாரி யுங்க... ஒப்பாரி வச்சு அழுதா மட்டும் போனவன் திரும்பி வரவா போறான்...?''

- நுழை வாசலிலேயே ஒருவர் இவர் களை வழிமறித்துக் கொண்டு கனிவாகக் கூறினார். அதைக் கேட்டதுதான் தாமதம்... இவர்களின் மனசுக்குள் சுருக்கென்று எதுவோ தைத்தது போலிருந்தது. முகம் கூம்பிப் போக, தலையாட்டி விட்டு ஒரு வரையொருவர் ஏதோ ஒருவித அர்த்தத் துடன் பார்த்துக் கொண்டவர்கள், சிறிது தயக்கத்துடனேதான் இழவு வீட்டுக்குள் நுழைந்தனர்.

உள்ளே....



மூலைக்கொருவராய் ஆங்காங்கே சில பெண்கள்! கண்ணீரும் கம்பலையுமாய்... அவர்களுக்கெல்லாம் நடுநாயகமாய் ஒரு மூலையில் ரஞ்சிதாவின் அம்மா... அழுதழுது சிவந்த கண்கள்... கன்னங்களும் சிவந்து வீங்கின நிலையில்...!

அவளைப் பார்த்ததுமே இவ்விருவருக்கும் துக்கம் கரை புரண்டது. அடக்கி வைத்திருந்த ஒப்பாரியையெல்லாம் மிஞ்சும் விதமாய் ஓவெனப் புலம்பி அழுதனர்.

பதிலுக்கு ரஞ்சிதாவின் அம்மாவும் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

எல்லாம் சிறிது நேரம்தான்....

தங்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டு நிமிர்ந்தனர் இருவரும்.

''ஆனாலும்... இந்த வயசுல ரஞ்சிதாவுக்கு இந்தக் கதி வந்திருக்கப்படாது... பூத்துக் குலுங்க வேண்டிய வயசுல பட்டுப் போய் நிற்கிறாளே...!''

- மூக்கைச் சிந்தினாள் அருக்காணி.

''பாவம்... வாழ்க்கையில் இந்தச் சின்னப் பொண்ணு இப்பவே இவ்வளவு கஷ்டப்படணும்ன்னு எழுதியிருக்கே...!''

- கமலாவும் தன் பங்குக்கு மூக்கைச் சிந்துவதில் சளைக்கவில்லை.

''ம்... மனுஷன் இருந்த வரைக்கும்தான் நிம்மதியக் கொடுக்கலை... போகும் போது கூட அவ பூவையும் பொட்டையும் பறிச்சிட்டுப் போயிட்டானே...!''

- அடுத்தவள் மறுபடி ஆரம்பிப்பதற்குள்ளாகவே,

''ரஞ்சிதா...!''

ரஞ்சிதாவினுடைய அப்பாவின் கட்டைக் குரல் கேட்டு, புலம்பி அழுவதை நிறுத்தி விட்டுத் திரும்பினர்.

மனிதன் ரொம்பவும்தான் ஆடிப் போய் விட்டார் என்பதைக் கறுத்து மெலிந்து போன அவரின் தேகத் தோற்றமே பறைசாற்றியது. துண்டைக் கையிலேந்தி, தலை கவிழ்ந்து சிறிது நேரம் நின்றவர், ஏதோ யோசித்தவராய் உள்புற அறைக்குச் சென்று, தம் மகளை அழைத்து வந்து, இவர்கள் முன் நிறுத்தி விட்டு லேசாய்த் தொண்டை விம்மச் செருமினார்.

ஆற அமர ரஞ்சிதாவை நிமிர்ந்து பார்த்த இருவருக்கும் ஒரே சமயத்தில் தூக்கி வாரிப் போட்டது. அவள் தோற்றத்தைக் கண்டு திகைத்துப் போய், தாங்கள் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டே எழுந்து விட்டனர்.

புத்தம் புது பட்டுச் சேலை உடுத்தி, தலைநிறைய மல்லிகையும் கனகாம்பரமும் சூடி, நெற்றி நிறையக் குங்குமம் வைத்து, கழுத்தில் டாலர் செயின், கண்கள் மட்டுமே அழுது சிவந்து வீங்கின நிலையில்...

'பழைய ரஞ்சிதாவா இவள்...? இல்லை... இல்லை... அதைவிட ஒரு படி மேலாய்... எப்படிப்பட்ட சிரிப்புக்கும் பின்னே ஓடும் அந்த ஒரு துளிச் சோகம் கூட மறைந்து அமைதியே வடிவாய்...' இவர்களால் தங்கள் கண்களையே நம்ப முடியவில்லை. கண்களை ஒன்றுக்கு இரண்டு முறை கசக்கி விட்டுக் கொண்டனர்.

''படுபாவிப் பய.. .ம்... அவன்தான்



நிருபர்: ''போன வாரம் வரை கூட்டமே இல்லாம இருந்த உங்க படம், இந்த வாரம் ஹவுஸ்புல்லா ஓடுதே... எப்படி?''

டைரக்டர்: ''என்னோட படம் வெற்றி அடைகிற வரைக்கும் தொடர்ந்து டைரக்ட் செய்வேன்னு அறிக்கை விட்டேன்!''

- செங்குன்றம் ரமேஷ்ராம்

''என்னைப் பெண் பார்க்க வந்த அன்னிக்கு நான் பாடின பாட்டைக் கேட்டுத்தான் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதாச் சொன்னீங்களாமே...?''

''ஆமா: இனி யாருமே உன் பாட்டைக் கேட்டு அவஸ்தைப்படக் கூடாதுங்கிற நல்லெண்ணத்துல தான்...''

- வி. கி. குமார்



பித்ருக்களுக்கு சிராத்தம் ஏன்? அவசியம் செய்ய வேண்டும்



சிராத்தம் போன்ற சடங்குகள் உண்மையில் பிராண ஜீவனுக்காகவே செய்யப்படுகின்றன. ஜீவனுடைய பிராண அதிர்வுகள் அதைப் பிராண லோகங்களுடன் அல்லது பூலோகத்துடன் தளைப்படுத்துகின்றன. அந்த அதிர்வுகளை நீக்குவதற்கு இந்த சடங்குகள் ஜீவனுக்கு உதவுகின்றன. இதனால் ஜீவன் சைத்திய சாந்தத்தில் ஓய்வெடுக்க விரைவாகச் செல்வது இயலும்.

— ஆதாரம் வைகறை 1991-92



இத்துடன் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோர்களுக்கு விநியோகம் செய்யவும.

<u>திருமண வைபவங்களுக்கு:</u>

சீர் முறுக்கு, சீர் அதிரசம், திரட்டுப் பால், முள்ளு தேன்குழல், பருப்புத் தேங்காய், அப்பம் வகைகள் முதலியவைச் செய்துத் தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

நெ. 24, 2வது மெயின் ரோடு
காந்தி நகர்
அடையாறு
சென்னை-20.
போன்: 412557

குடிச்சுக் குடிச்சுத் தானும் நிம்மதியில்லாம, இவளையும் நிம்மதியா இருக்க விடாமப் போய்ச் சேர்ந்துட்டான்... ம்... மக ஆசைப் பட்ட வாழ்க்கையத்தான் இந்தப் பாவிக்கு அமைச்சுக் கொடுக்க வக்கில்லே...! மக வாழ்க்கையையே நிர்மூலமாக்கின கை யோட அவ பூவையும் பொட்டையும் பறிச்சு, இன்னுமுமா நிம்மதியக் கெடுக்க ணும்...? அது... அதுதான்... நான் இந்தச் சடங்கு சம்பிரதாயங்களையெல்லாம் தூக்கியெறிஞ்சுட்டு...!''

- நாத் தழுதழுக்கக் கூறிய ரஞ்சிதாவின் அப்பா அதற்கு மேல் ஏதும் சொல்ல முடி யாது குலுங்கிக் குலுங்கி அழுதது இவர் களின் காதுகளில் ஏதோ ஒரு அசரீரி போல் கேட்டது.

சேலைத் தலைப்பை இழுத்து இடுப்பில் இறுக்கிச் செருகிக் கொண்டு வந்த வழியே திரும்பி நடந்து கொண டிருந்தனர் அந்தப் பெண்கள் இருவரும்...!

''புள்ளையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டற கதையாவுல்ல இருக்கு... இவனோட செயல்...?''

''ஆனாலும் ரொம்பவும்தான் அநியாயம் அருக்காணி... புருஷன் பொட்டுனு போன மறு நிமிஷமே பொண்ணு தலை நிறையப் பூவையும் பொட்டையும் சூட்டிக் காட்சிப் பொருளா வச்சிருக்கானே படுபாவி... புருஷனைத் தின்னவ அவ மனசு என்ன பாடுபடும்னு கொஞ்சமாவது நினைச்சுப் பார்த்தானா...?''

''இன்னைக்கு மக வாழ்க்கையப் பாழாக் கிட்டேனேன்னு முண்டச்சிக்குப் போய் பூவும் பொட்டும் வச்சுப் பார்ப்பான். நாளைக்கி இதையே காரணம் காட்டி, அவ பழைய காதலனுக்கே கட்டிக் கொடுத் தாலும் கொடுப்பான்...! யார் கண்டா...?''

''அப்ப அவ குழந்தைக...?''

''குழந்தைகளாவது மண்ணாங்கட்டி யாவது... எங்காவது ஒரு 'காப்பகத்துல' விட்டுட்டாப் போச்சு... இல்லே, செஞ்ச பாவத்துக்குப் பரிகாரமா அவ அப்பனே வளர்த்துட்டாப் போச்சு...!''

''அடப் பாவமே... இப்படியும் நடக் குமா..?''

''இவன் இஷ்டப்படி எல்லாம் செய் திட்டான். பார்த்துட்டிருக்கிற பஞ்சாயத்துக் காரங்க எப்படித்தான் பொறுத்திட்டிருக் காங்களோ... நாளைக்குத் தெய்வக் குத்தம் வந்தா எல்லாமே எரிஞ்சுடும். ஊரே சுடுகாடாயிடும்...!''

- பேசிக் கொண்டே நடந்த அவர்களின் உரையாடலில் நிறைந்த ஏமாற்றமே தொனித்தது!

திருமணத்திற்கு முன்பு ரத்தப் பரிசோதனை எதற்கு?

டாக்டர் பதில்கள்:

✱ ஆர். கே. நாயகி, தூத்துக்குடி - 2.

திருமணத்துக்கு முன்பு, ஆண் - பெண் இருவரும் மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ளுவது நல்லது என்கிறார்களே, என்னென்ன பரிசோதனைகள்? அதன் பலன்கள் என்ன?

✱✱ டாக்டர் சந்திரசேகர சாண்டில்யா, சென்னை - 28.

திருமணத்துக்கு முன், ஆண் பெண் இருவரும் தமது ரத்தப் பிரிவுகள் - பிளட் குரூப், ஆர். எச். குரூப் - ஆகியவற்றைப் பரிசோதித்தால், ஆர். எச். நெகடிவ் வகை ரத்தமுள்ள பெண்கள், ஆர். எச். பாசிடிவ் வகை ஆண்களைத் திருமணம் செய்யாம லிருக்கலாம். அதே போல, பால்வினை நோய்களில் முக்கியமான சிபிலிஸ் இருந் தால், கண்டுகொள்ளலாம். மேலும் எய்ட்ஸ் எனும் தே க த் தை உருக்கும் நோயைக் கூடக் கண்டுகொள்ளலாம். குரோமோசோம் குணமாற்றங்களையும் கண்டுபிடிப்பதன் மூலம், பரம்பரையாக வரும் ப்ளீடிங் டயாதிஸிஸ், ஹேமோ குளோபினோபதீஸ் போன்ற நோய்களைக் கண்டு கொண்டு தவிர்க்கலாம்.


✱ பத்மா சுந்தரம், சென்னை - 92.

அமெரிக்காவில் Plant Science Research நிறுவனத்தில், சோளத்தின் தரத்தை உயர்த்துவதற்காகச் சோளத்தின் ஜீன்களில் மாற்றம் செய்வதாகவும், இதன் மூலம் அதன் அடிப்படையையே மாற்ற முடியு மென்றும் படித்தேன். அது போலவே, மனித ஜீன்களில் மாற்றம் செய்வதன் மூலம், உயர்ந்த குணங்களை உடைய குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமா?

✱✱ டாக்டர் ஜெயஸ்ரீ சங்கர், சென்னை - 28.

சோள ஆராய்ச்சியில் நீங்கள் குறிப்பிட்டுள்ள தீவிர முன்னேற்றம், மனித ஜீன்களுக்கு உபயோகிக்கும் நிலையை எட்ட இன்னும் பல ஆண்டுகள் ஆகும். கூடு மானவரை விளக்குகிறேன், புரிகிறதா பாருங்கள்: முதலில் வயிற்றிலிருக்கும் கரு வின் தொப்புள் கொடியிலிருந்து ரத்தத்தை எடுத்து, gene splicing என்ற முறையினால், குரோமோசோம்களிலிருந்து ஒருசில ஜீன் களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இவற்றை Vectors எனப்படும் பாக்டீரியா ஃபேஜஸ், பிளாஸ் மிட்ஸ், வைரஸ் ஆகியவைகளில் வளர வைத்து, polymerised Chain Reaction (PCR) எனும் முறையில் பல லட்சம் மடங்கு இந்த ஜீன்களைப் பெருக்க வேண்டும். பின்பு இதை ரத்தத்தில் செலுத்தினால், எலும்பின் மேரோ (marrow)க்களில் புது குரோமோ சோம்கள் சேரும். அப்போதும் நல்ல குணங்களுக்கு ஏற்ற ஜீன்கள், கெட்ட குணங்களுக்கான ஜீன்கள் என்று வித்தி யாசம் கண்டுகொள்ள முடியாது. ஆனால் ஒரு சில பரம்பரை வியாதிகள் - ஹேமோ குளோபினோபதீஸ், பீடாகுளோபின் ஸால் பீனியா போன்ற நோய்கள் குழந்தைகளுக்கு வராமல், இந்த முறைப்படி தடுக்கலாம். இதுவே பெரிய விஷயமல்லவா!

தொகுப்பு : எஸ். வி. என் .



சிவகாமியின் சபதம்

முப்பத்தைந்தாம் அத்தியாயம்

''கள்வரோ நீர்?''

மறுநாள் மாலை நேரத்தில் மண்டபப்பட்டுக் கிராமத்துச் சிவன் கோயில் கண்கொள்ளாக் காட்சி அளித்துக் கொண்டிருந்தது. கோயிலின் முன் கோபுர வாசலைப் பசுமையான வாழை மரங்களும், மகர தோரணங்களும், திரைச் சீலைகளும் அலங்கரித்தன.

உள்ளே அர்த்த மண்டபத்தையும் வெளிக் கோபுரத்தையும் சேர்த்துப் பிராகாரத்தில் விஸ்தாரமான பந்தல் போட்டிருந்தார்கள். பந்தல் முனைகளில் வரிசை வரிசையாகத் தந்த வர்ணமுள்ள இளந்தென்னங் குருத்துத் தோரணங்களும் அவற்றின் இடையிடையே செந்தாமரை மொட்டுக்களும் தொங்கிக் கொண்டிருந்தன.

அந்த நாளில் தமிழ்நாட்டில் நீர்வளமுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் தாமரைக் குளம் உண்டு. குளத்திலே தண்ணீர் இருப்பதே தெரியாதவண்ணம் தாமரை இலைகளும் மலர்களும் மொட்டுக்களும் நிறைந்திருக்கும். எனவே, கோயில் விக்கிரகங்களுக்கு வேறு அபூர்வ புஷ்பங்களைச் சாத்திவிட்டுத் தாமரை மொட்டுக்களையும் மலர்களையும் கோயிலின் அலங்காரத்துக்கு உபயோகப்படுத்துவார்கள்.

இவ்விதம் அமோகமாக அலங்கரிக்கப்பட்டிருந்த கோயிலில், அஸ்தமிப்பதற்கு முன்னால் ஊர் ஜனங்கள் எல்லாரும் வந்து கூடி விட்டார்கள். ஸ்திரீகள், குழந்தைகள் ஒருவரும் மிச்சமில்லாமல் வந்து அவரவர்களும் போட்டியிட்டு முன்னால் இடம் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தார்கள்.

சூரியன் அஸ்தமித்ததும் நூற்றுக்கணக்கான அகல் விளக்குகள் ஏற்பட்டு, ஆலயம் ஒளிமயமாக விளங்கிற்று. அதே சமயத்தில் சிவகாமி தேவியின் திவ்ய நடனத்தைப் பார்ப்பதற்காகவே விஜயம் செய்கிறவனைப் போல் பூரண சந்திரனும் உதயமானான்.

ஆயனரும் சிவகாமியும் கோயிலின் கோபுர வாசலுக்குள்ளே பிரவேசித்ததும் கூட்டத்தில் கலகலப்பு உண்டாயிற்று.

பந்தலுக்குத் தென்புறத்தில் அமைந்திருந்த அரங்க மேடையிலே வந்து, சிவகாமி நின்றதும் கூட்டத்தில் நிசப்தம். ஸ்திரீகளும் பேச்சை நிறுத்தினார்கள். அழுத குழந்தைகளும் வாய் மூடின.

அந்த மண்டபப்பட்டுக் கிராமத்து ஜனங்கள் அதுவரையில் அம்மாதிரி கண் கூசும்படியான திவ்ய சௌந்தரியத்தைக் கண்டதில்லை.

சிவகாமியின் நடன அலங்காரமும் அணிகலன்களும் அவளுடைய முகத்தில் அப்போது பிரகாசித்த தெய்வீகக் களையும் கிளர்ச்சியும் பார்த்தவர்களைத் திகைக்கச் செய்தன.

ஆரம்பத் திகைப்பு ஒருவாறு மாறியதும் ஒருவருக்கொருவர் தங்களுடைய வியப்பைத் தெரிவித்துக் கொள்ள ஆரம்பித்

தார்கள்.

''தேவலோகத்து நடன மாதர்களான அரம்பை, ஊர்வசி முதலியவர்கள் இப்படித்தான் இருந்திருக்க வேண்டும்!'' என்றார் ஒருவர்.

''ஒருநாளும் இல்லை. அவர்கள் இவ்வளவு அழகாக ஒரு நாளும் இருந்திருக்க முடியாது!'' என்றார் இன்னொருவர்.

''இந்தப் பெண்ணுடனே அந்தத் தேவலோக கணிகையரை ஒப்பிடுவது பிசகு. தில்லையம்பலத்தில் நடராஜப் பெருமானுக்குப் போட்டியாக நடனமாடிய சிவகாமி தேவியேதான் இப்படி அவதாரம் எடுத்து வந்திருக்கிறாள்!'' என்று ஒரு பக்தர் கூறினார்.

''இல்லாமலா, நாவுக்கரசர் பெருமான் அவ்வளவு பாராட்டினார்!'' என்று இன்னொரு பக்தர் பரவசமாகச் சொன்னார்.

பளிச்சென்று சொல்லிவைத்தாற்போல் சபையிலே மறு படியும் பரிபூரண நிசப்தம் ஏற்பட்டது.

சிவகாமி நடனமாட ஆரம்பித்து விட்டாள்!

ஆயனரின் கரதாளத்துக்கும் அவர் பாடிய ஸ்வரஜதிகளுக்கும் இணங்கச் சிவகாமி ஆடினாள்!

உள்ளூர் மத்தள வித்வான் ஒருவர் வாணாளில் என்றுமறியாத உற்சாகத்துடன் மத்தளம் வாசித்தார்.

'கும் கும்' என்னும் மத்தளச் சப்தத்தோடு கலந்து, பாதச் சதங்கை ஒலி 'கல் கல்' என்று சப்திக்கச் சிவகாமி நிருத்தம் ஆடினாள்.

அந்த நிருத்தத்தில் மின்னலின் விரைவு காணப்பட்டது. மான் குட்டியின் துள்ளல் தோன்றியது; கான மயிலின் சாயல் விளங்கியது.

சில சமயம் சிவகாமி பூமியிலே நின்று ஆடினாள்; சில சமயம் வானமண்டலத்துக்குச் சென்று வெண்மதியின் கிரணங்களில் ஆடினாள். சில சமயம் நட்சத்திர மண்டலத்துக்கே சென்று விண்மீன்களின் மத்தியில் பம்பரம் போலச் சுழன்று ஆடினாள்.

சிவகாமி அவ்விதம் சுழன்றாடிய போது பார்த்துக் கொண்டிருந்தவர்களின் கண்கள் சுழன்றன; அரங்க மேடையும் அகல் விளக்குகளும் சுழன்றன. கோயில் சுழன்றது; கோபுரங்கள் சுழன்றன; தூங்கானை மாடத்துத் தங்க ஸ்தூபி சுழன்றது; வானமும் பூமியும் கீழ் மேலாகச் சுழன்றன; சந்திரனும் நட்சத்திர மண்டலங்களும் சுழன்று சுழன்று வந்தன.

இவ்விதம் வெவ்வேறு காலப் பிரமாணங்களில், வெவ்வேறு ஜதிகளில் விதவிதமான நிருத்த வகைகளை ஆடிச் சபையோரைக் கிறுகிறுக்க அடித்த பிறகு, சிவகாமி சிறிது நேரம் சிரம பரிகாரம் செய்து கொள்வதற்காக மேடைக்குப் பின்புறம் சென்றாள். அப்போது சபையில் பிரமாதமான ஆரவாரம் எழுந்தது.

ஆயனரின் அரண்ய வீட்டில் எட்டு மாதம் இருந்தும் சிவகாமியின் நடனத்தைப் பார்த்தறியாதவனான குண்டோதரனும் மற்றச் சபையினரைப் போலவே பரவசமடைந்து போயிருந்தான். நடனம் நின்ற பிறகும் அவன் தன்னை மறந்த நிலையிலேயே இருந்தபடியால், பக்கத்திலிருந்த மாமல்லரைப் பார்த்து, ''பிரபு...'' என்று ஆரம்பித்தான். மாமல்லரும் சிவகாமியின் நடனத்தில் பூரணமாய் ஈடுபட்டிருந்தாராயினும், அவர் தம்மையும் தமது சுற்றுப்புறத்தையும் மறந்து விடவில்லை. எனவே, குண்டோதரன் 'பிரபு' என்றதும் அவர் அவனை ஒரு குலுக்குக் குலுக்கினார். அதற்குள் பக்கத்திலிருந்த ஐந்தாறு பேரின் கவனமும் குண்டோதரனின் மேல் விழுந்திருந்தது. மாமல்லரின் குலுக்கலினால் தனது நினைவு அடைந்த குண்டோதரன் சுவாமி சந்நிதியை நோக்கி, ''பிரபு!.... இந்தத் தெய்வீக நடனம் உனக்குத்தான் பிரீதி!'' என்று பக்திப் பரவசம் ததும்பிய குரலில் கூறி முடித்தான். ''சந்தேகம் என்ன? இறைவனுக்குத்தான் பிரீதி!'' என்று பக்கத்திலிருந்தவர்களும் ஆமோதித்தார்கள்.

சிவகாமி மீண்டும் அரங்க மேடைக்கு வந்து அபிநயம் பிடிக்கத் தொடங்கினாள். திருநாவுக்கரசர் பெருமானின்,

''வடிவேறு திரிசூலம்
தோன்றும் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியம்
தோன்றும் தோன்றும்''

என்னும் பாடலுக்குச் சிவகாமி அபிநயம் பிடித்த போது, சபையோர் சாக்ஷாத் சிவபெருமானையே நேருக்கு நேர் தரிசித்தவர்களைப் போல் ஆனந்த வாரிதியில் முழுகினார்கள். பின்னர், ''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்'' என்னும் திருப்பாடலுக்குச் சிவகாமி அபிநயம் பிடிப்பாள் என்று எல்லாரும் எதிர்பார்த்ததற்கு

மாறாகச் சிவகாமி பின்வரும் பாடலைப் பாடி அபிநயம் பிடிக்கத் தொடங்கினாள்:

வெள்ளநீர்ச் சடையனார் தாம்
வினவுவார் போலவந்தென்
உள்ளமே புகுந்து நின்றார்க்கு
உறங்குநான் புடைகள்போந்து
கள்ளரோ புகுந்தீர் என்னக்
கலந்துதான் நோக்கிநக்கு
வெள்ளரோம் என்று நின்றார்
விளங்கிளம் பிறையனாரே!

ஓர் அறியாப் பெண்ணின் உள்ளமாகிய இல்லத்தினுள்ளே வெள்ள நீர்ச்சடையனாராகிய சிவபெருமான், ஏதோ விசாரிக்க வருகிறவர் போல வந்து பிரவேசிக்கிறார். தூங்கிக் கொண்டிருந்த பெண் திடுக்கிட்டு எழுந்திருக்கிறாள். கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்க்கிறாள். யாரோ முன்பின், அறியாதவர் எதிரில் நிற்பதைக் கண்டு, ''ஐயா! இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் என் உள்ளத்திலே புகுந்த நீர் யார்? கள்ளரா?'' என்று வினவுகிறாள். அப்போது, வந்தவர் கண்ணோடு கண் கலக்கும்படி அந்தப் பெண்ணை உற்றுப் பார்க்கிறார். பார்த்து விட்டு நகை செய்கிறார். அந்த நகைப்போடு கலந்து, ''நானா கள்ளன்? கள்ளத்தனமென்பதே அறியாத வெள்ளை மனத்தவனாயிற்றே? அதற்கு அறிகுறியாக என் மேலேயும் வெண்ணீறு பூசியிருக்கிறேன், தெரியவில்லையா?'' என்கிறார். வானத்திலே விளங்கிய இளம் பிறையைத் திருடித் தம் சிரசிலே அணிந்து கொண்ட பெருமான்தான் இப்படி ஒன்றும் தெரியாதவர் போல நடித்தார்! ஆகா! அந்த இளம் பிறையின் அழகைச் சொல்வேனா? அவருடைய கள்ளத்தனத்தைச் சொல்வேனா? அல்லது கள்ளமற்றவர் போல அவர் நடித்த நடிப்பைச் சொல்வேனா?...

மேற்கூறிய இவ்வளவு உள்ளப் பாடுகளும் வெளியாகும்படியாகச் சிவகாமி தன் முகபாவங்களினாலும், அங்கங்களின் சைகைகளினாலும் கைவிரல்களின் முத்திரையினாலும் உணர்ச்சியோடு கலந்து அற்புதமாக அபிநயம் பிடித்தாள்.

பாடலும் அபிநயமும் சபையோருக்கு எல்லையற்ற குதூகலத்தை அளித்துப் பல முறை 'ஆஹா'காரத்தை வருவித்தது. ஆனாலும் சபையோர்கள் திருப்தியடைந்தவர்களாகக் காணவில்லை. அவர்களில் ஒருவர், துணிந்து எழுந்து, அரங்கமேடைக்குச் சென்று, ஆயனர் காதோடு ஏதோ சொன்னார். அது சிவகாமியின் செவியிலும் விழுந்தது. சிவகாமி சிறிது தயக்கத்துடனேயே,

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்!''

என்று பாடிக் கொண்டு அபிநயம் பிடிக்க ஆரம்பித்தாள். எவ்வளவோ திறமையுடனே, விதவிதமான உள்ளப்பாடுகள் அற்புதமாக வெளியாகும்படி அபிநயம் பிடித்தாள்.

பாட்டும் அபிநயமும் முடியும் தருவாயில் சபையிலே பலருக்கு ஆவேசமே வந்து விட்டது!

வயது சென்ற ஒரு கிழவர் எழுந்து நின்று, ''நடராஜா, நடராஜா! நர்த்தன சுந்தர நடராஜா!'' என்று பாடிக் கொண்டே ஒரு காலைத் தூக்கியவண்ணம் சபையிலே நடனமாடத் தொடங்கி விட்டார்.

''இம் மாதிரி உணர்ச்சி வாய்ந்த அபிநயத்தை இதுவரையில் யாரும் பார்த்ததில்லை; இனிமேல் பார்க்கப் போவதும் இல்லை'' என்று சபையோர் ஒருவருக்கொருவர் கூறி மகிழ்ந்தார்கள்.

ஆனால், இன்று அந்தப் பாடலுக்கு அபிநயம், காஞ்சியில் நாவுக்கரசர் பெருமான் சந்நிதியில் அமைந்தது போல் அவ்வளவு உணர்ச்சியுடன் அமையவில்லையென்று மூன்று பேருக்கு மட்டும் தெரிந்திருந்தது. அந்த மூவர் ஆயனர், மாமல்லர், சிவகாமி ஆகியவர்கள்தான்.


சிவகாமி இன்றைக்கு அபிநயத்தின் முடிவில் மூர்ச்சையடைந்து பூமியில் விழுந்து விடவும் இல்லை!

''பழக்கதோஷத்தில, செய்யக் கூடாததைச் செஞ்சிட்டேன்...''

''என்னது...?''

''அட்டெண்டன்ஸில், ஏன்யா கையெழுத்துப் போடலைன்னு மேனேஜர் கேட்டதுக்கு, 'ஏதாவது சம்திங் வையுங்கன்னு' கேட்டுட்டேன்...''

- ஆர். வசந்தகுமார்.



முப்பத்தாறாம் அத்தியாயம்

புதிய பிறப்பு

மண்டபப்பட்டுக் கிராமத்துக்கு வந்து சேர்ந்த மூன்றாம் நாள் சாயங்காலம் ஆயனர், சிவகாமி, மாமல்லர் ஆகிய மூவரும் கிராமத்துக்கு வெளியே உலாவி வரக் கிளம்பினார்கள். பாறையில் படகு மோதி, அவர்கள் நீரில் மூழ்கிய இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

வெள்ளம் இன்றைக்கு ரொம்பவும் வடிந்து போயிருந்தது. அன்று தண்ணீரில் மூழ்கியிருந்த இடங்களில் இன்று நீர் வடிந்து பாறைகள் நன்றாய்த் தெரிந்தன. கரையோரத்து மரங்கள் அன்று பாதிக்கு மேலே வெள்ளத்தில் மூழ்கியிருந்தன. இன்றைக்கு அதே மரங்களின் வேரின் மீது தண்ணீர் 'சலசல'வென்று அரித்தோடிக் கொண்டிருந்தது. பாறைப் பிரதேசமாதலால் வெள்ளத்திற்குப் பிறகு இடங்கள் வெகு சுத்தமாயிருந்தன.

அந்தப் பாறைகளைச் சுற்றி சுற்றி வந்து பார்ப்பதில் ஆயனர் அடங்காத ஆர்வம் கொண்டவராயிருந்தார். இந்திந்தப் பாறையை இன்னின்ன மாதிரி கோவிலாக அமைக்கலாம், இன்னின்ன சிற்ப வடிவங்களாகச் செய்யலாம் என்று அவர் உள்ளம் கற்பனை செய்து கொண்டிருந்தது.

சிவகாமியும் மாமல்லருமோ, மகிழ மரத்தடியில் பாறையின் மீது உட்கார்ந்து மௌனம் சாதிப்பதில் அடங்காத பிரியம் கொண்டவர்களாகத் தோன்றினார்கள்.

பகலும் இரவும் மயங்கிக் கலந்திருந்த அந்த நேரத்தில், ஆயனர் அரை மனதாக ''போகலாமா, சிவகாமி?'' என்று கேட்டார்.

''அப்பா! இன்றைக்கு இருட்டி இரண்டு நாழிகைக்குப் பிறகு, சந்திரோதயம் ஆகுமல்லவா? அதைப் பார்த்து விட்டுப் போகலாமே?'' என்றாள் சிவகாமி.

''அதற்கென்ன, அப்படியே செய்யலாம்!'' என்று கூறி ஆயனர் அவர்களுக்கு அருகில் தாமும் உட்கார்ந்தார்.

சற்று நேரம் மௌனம் குடிகொண்டிருந்தது.

''இந்த ஊரை விட்டுப் போகவே எனக்கு மனம் வராதென்று தோன்றுகிறது!'' என்றார் ஆயனர்.

''இந்த ஊர் அதிர்ஷ்டம் செய்த ஊர். கிராமவாசிகள் சொன்னார்களே, அது உண்மைதான்!'' என்றார் மாமல்லர்.

''ஏன் அப்பா, அவ்வளவு தூரம் இந்த ஊர் உங்களுக்குப் பிடித்துவிட்டதின் காரணம் என்ன?'' என்று சிவகாமி கேட்டாள்.

''இந்தப் பாறைகளைப் பார்க்கும் போது, எனக்கு ஆசையாயிருக்கிறது. திவ்வியமான கோயில்கள் அமைப்பதற்குக் கை ஊறுகிறது.''

''இன்னும் எத்தனையோ ஊர்களிலேயும் பாறைகள் இருக்கின்றன!'' என்றாள் சிவகாமி.

''இந்தக் கிராமவாசிகள் நல்ல ரஸிகர்கள். நேற்று உன் நடனத்தைப் பார்த்து எவ்வளவு ஆனந்தப்பட்டார்கள்!''

''ஐயா! காஞ்சியில் ரஸிகர்கள் இல்லையென்று கூறுகிறீர்களா?'' என்று மாமல்லர் பொய்க் கோபத்துடன் கேட்டார்.

''மகேந்திர பல்லவரும் அவருடைய திருக்குமாரரும் இருக்கும் காஞ்சியில் ரஸிகர்கள் இல்லாமற் போய் விடுவார்களா? - அந்த எண்ணத்துடன் நான் சொல்லவில்லை. எங்கேயோ போகலாமென்று யாத்திரை கிளம்பியவர்களைக் கடவுளே பார்த்து இந்த ஊரில் கொண்டு விட்டிருக்கிறார். நாங்கள் இங்கேயே இருப்பதுதான் இறைவனுடைய சித்தம் என்று தோன்றுகிறது!''

''அப்பா! நாகநந்தி பிக்ஷு வெள்ளம் வந்த இரவு போனாரே, அவர் என்ன ஆகியிருப்பார்?'' என்று சிவகாமி கேட்டாள்.

''ஐயோ! பாவம்! என்ன ஆனாரோ, தெரியவில்லை. அந்த வயோதிக பிக்ஷுவின் கதியும் என்ன ஆயிற்றோ, தெரியவில்லை!''

அப்போது மாமல்லர் தம்முடன் வந்த சைனியத்தின் கதி என்ன ஆயிற்றோ என்று நினைத்தார். குண்டோதரன் படகு சம்பாதித்துக் கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டுக் காலையிலேயே போனவன், இன்னும் ஏன் திரும்பி வரவில்லை....?

சற்று நேரத்துக்கெல்லாம் கீழ் அடிவானத்தில் ஏறக்குறைய வட்டவடிவமான சந்திரன் உதயமானான். அவனுடைய கிரணங்களினால் வெண்ணிறம் பெற்ற வெள்ளப் பரப்பு, தேவர்கள் அமுதத்திற்காகக் கடைந்த பாற்கடலைப் போல் ஜொலித்தது வெள்ளத்திலிருந்து சந்திரன் மேலே

கிளம்பியது, அந்தப் பாற்கடலிலிருந்து அமுதம் நிறைந்த தங்கக் கலசம் எழுந்தது போலிருந்தது.

சிறிது நேரம் சந்திரோதயத்தின் அழகைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு, ஆயனருக்கு இருப்புக் கொள்ள



வில்லை. ''நிலா வெளிச்சத்தில் ஒரு தடவை இந்தப் பாறைகளைச் சுற்றிப் பார்த்து விட்டு வருகிறேன்'' என்று சொல்லி விட்டுப் போனார்.

மாமல்லரும் சிவகாமியும் வெகு நேரம் மௌனமாய் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடைய இரு கைகள் மட்டும் ஒன்று சேர்ந்து அந்தரங்கம் பேசிக் கொண்டிருந்தன.

அவர்களைச் சுற்றி வெளியிலே மகிழம் பூவின் நறுமணம் நிறைந்து மூச்சுத் திணறும்படிச் செய்தது.

அவர்களுடைய உள்ளங்களிலே இன்ப உணர்ச்சி ததும்பி மூச்சுத் திணறும்படிச் செய்தது.

சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்களுக்குக் கீழேயிருந்த பூமி இலேசாக நழுவி, அவர்களை அந்தரத்தில் விட்டுச் சென்றது.

அவர்களுடைய தலைக்கு மேலே வானமானது, சந்திரமண்டலம் நட்சத்திரங்களுடன் திடீரென்று மறைந்து விட்டது!

எங்கேயோ, எங்கேயோ, எங்கேயோ எல்லையில்லாத வெள்ளத்தில் மிதந்து மிதந்து மிதந்து அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். அவ்விதம் அவர்கள் செய்த ஆனந்த யாத்திரை ஒரு கண நேரமா அல்லது

நீண்ட பல யுகங்களா என்பது தெரியாதபடி காலாதீத நிலையை அடைந்து, மேலே, இன்னும் மேலே, அதற்கும் மேலே போய்க் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று, அமுதமளாவிய குளிர்ந்த இளங்காற்று வீசி, மகிழ மரத்தின் கிளை களில் சலசலப்பை உண்டுபண்ணியது.


அந்தக் கிளைகளிலிருந்து மகிழம் பூக்கள் பொலபொலவென்று அவர்களுடைய தலைமேல் உதிர்ந்தன.

இருவரும் தடாலென்று பூலோகத்துக்கு வந்து சேர்ந்தார்கள். மண்டபப்பட்டுக் கிராமத்துப் பாறையின் மேல் மகிழ மரத்தினடியில் தாங்கள் உட்கார்ந்திருப் பதைக் கண்டார்கள்.

''சிவகாமி! என்ன சிந்தித்துக் கொண் டிருந்தாய்?'' என்று மாமல்லர் கேட்ட போது, வெகு வெகு வெகு தூரத்திலிருந்து அவருடைய குரல் கேட்பது போலிருந்தது.

''பிரபு! கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். விழுந்து விடுவேன் போலி ருக்கிறது!'' என்றாள் சிவகாமி.

''ஏன் சிவகாமி உன் உடம்பு இப்படி நடுங்குகிறது? குளிர் காற்றினாலா?'' என்று மாமல்லர் கேட்டார்.



''இல்லை, பிரபு! குளிர் இல்லை. என் உடம்பு கொதிக்கிறதைப் பாருங்கள்!'' என்று சிவகாமி சொன்ன போது அவளுடைய குரலும் நடுங்கிற்று.

''பின் ஏன் இவ்விதம் நடுங்குகிறாய்?''

''ஏதோ பயமாயிருக்கிறது. நான் உயிரோடுதானிருக்கிறேனா?''

''இது என்ன கேள்வி? உயிரோடு இல்லாவிட்டால் எப்படி என்னுடன் பேச முடியும்?''

''சற்று முன்னால் எனக்கு எங்கேயோ வான மார்க்கத்தில் பிரயாணம் போவது போல் தோன்றியது. சப்தமில்லாத ஒரு தெய்வீக சங்கீதம் எங்கிருந்தோ வந்து கொண்டிருந்தது. அதன் தாளத்துக்கிணங்க என் ஆத்மா நடனமாடிக் கொண்டு மேலுலகம் சென்றது... அதெல்லாம் பிரமை தானே? உண்மையாக நான் இறந்து போய் விடவில்லையே?''

''ஆம்; சிவகாமி! ஒருவிதத்தில் நாம் இருவருமே இறந்து விட்டோம். ஆனால், மறுபடியும் பிறந்திருக்கிறோம். இருவருக்கும் இது புனர்ஜன்மந்தான். மூன்று நாளைக்கு முன்னால் நாம் இந்தக் கிராமத்துக்கு வந்த போது தனித்தனி உயிருடனும் உள்ளத்துடனும் இருந்தோம். இன்று அந்தச் சிவகாமி இல்லை நீ; நானும் அந்த நரசிம்மவர்மன் இல்லை. என் உயிரிலும் உள்ளத்திலும் நீ கலந்திருக்கிறாய். அப்படியே உன் உயிரிலும் உள்ளத்திலும் நான் கலந்து போயிருக்கிறேன். ஆகையால், நாம் இருவரும் மரணமடைந்து மறுபிறப்பும் அடைந்து விட்டோம். எல்லாம் மூன்றே நாளில்!.....''

''நிஜமாக மூன்று நாள்தானா? என்னால் நம்ப முடியவில்லை. எத்தனையோ நீண்ட காலம் மாதிரி தோன்றுகிறது!''

''அதுவும் உண்மையே. இந்த மூன்று நாள் வெறும் மூன்று நாள் அல்ல. இதற்கு முன் எத்தனையோ ஜன்மங்களில் நாம் ஒருவரையொருவர் பார்த்திருக்கிறோம்; காதலித்திருக்கிறோம்; பிரிந்திருக்கிறோம்; சேர்ந்திருக்கிறோம். அவ்வளவு அனுபவங்களையும் இந்த மூன்று தினங்களில் திரும்ப அனுபவித்தோம்.''

''இதோடு எல்லாம் முடிந்து போய் விட்டதா?''

''எப்படி முடிந்து விடும்? பல ஜன்மங்களில் தொடர்ந்து வந்த உறவு இந்த ஜன்மத்தோடு மட்டும் எப்படி முடியும்?''

''வருகிற ஜன்மங்களைப் பற்றி நான் கேட்கவில்லை. இந்த ஜன்மத்தைப் பற்றித்தான் கேட்கிறேன். இந்த ஜன்மத்தில் எப்போதும் இப்படியே இருக்குமா?''

''எது இப்படி இருக்குமா என்று கேட்கிறாய்?''

''உங்களுடைய அன்பைத்தான் கேட்கிறேன்!''

மாமல்லர் தமக்கு அருகில் பாறையில் உதிர்ந்து கிடந்த மகிழம் பூக்களைத் திரட்டிச் சிவகாமியின் கையில் வைத்தார்.

''சிவகாமி என்னுடைய அன்பு, மல்லிகை - முல்லை மலர்களைப் போல் இன்றைக்கு மணத்தை வாரி வீசி விட்டு, நாளைக்கு வாடி வதங்கி மணமிழந்து போவதன்று. என் அன்பு, மகிழம் பூவை ஒத்தது; நாளாக ஆக அதன் மணம் அதிகமாகும். வாடினாலும் காய்ந்து உலர்ந்தாலும் அதன் மணம் வளர்ந்து கொண்டு தானிருக்கும்... அன்றைக்குத், தாமரைக்



நவக்கிரக நாயகியர்

சேலம் அருகே சுமார் 12 கி.மீ. தொலைவில் உள்ள 'கந்தாஸ்ரமம்' என்னுமிடத்தில், நவக்கிரகங்களை அவர்களுடைய மனைவியர்களுடன் வைத் திருக்கிறார்கள்.

ராகு - ஸிம்ஹி
சனி - நீலா
கேது - சித்ரலேகா
புதன் - ஞானசக்தி தேவி
குரு - தாரா
சந்திரன் - ரோகிணி
சூரியன் - உஷா, பிரத்உஷா
சுக்கிரன் - சுகீர்த்தி
அங்காரகன் - சக்திதேவி.

- ஆர். மாணிக்கம்.



அருள்வாக்கு

படிப்பு ஜாஸ்தியாக ஆக நூதன நூதனமாக ஏமாற்று வித்தைகள் செய்கிற ஸாமர்த்தியங்களும் வளர்கின்றன. தொழில்கள் நடத்துகிறவர்களும் அரசியல்வாதிகளும் செய்கிற பேற்று மாற்று. எங்கே போனாலும் ரஹஸ்யத்தில் நடக்கும் லஞ்சம் முதலான அநேகக் குற்றங்கள் இந்த ஸாமர்த்யத்தில் கோர்ட் வரை வராமலே போகின்றன. முக்கால்வாசிக் குற்றங்கள் நீதி ஸ்தலத்துக்கும் போலீஸுக்கும் வரா மலே போயிருக்கும்! படிப்பினால் புத்தி ஸாமர்த்யம் அதிகரிப்பதில் ஸிவில் குற்றங்கள் மாத்ரம்தான் அதிகரித்திருக் கின்றன என்றில்லை. பெரிதான பாங்குக் கொள்ளை, ஒரு மந்த்ரி ஸபையையே சுட்டுக் கொன்று விடுவது, கோஷ்டி கோஷ்டியாகத் தகாத கார்யத்துக்காகப் பெண்களைக் கடத்திப் போவது மாதிரி க்ரிமினல் குற்றங்களும் ராஜாங்கத்தையே வெறும் பௌதிக பலத்தால் புரட்டி விடும் ''கூப்'' முதலியனவும், படிப்பு ஸாமர்த்யத்தாலேயே நன்றாக ஜோடித்துத் திட்டம் போட்டு நடத்தப்படுகின்றன. இதெல்லாம் போக நேராகவே அடிதடி, பிஸ்டலைக் காட்டுவது, சுடுவது முதலானவையும் படிப்பாளிகள் உள்ள நாடுகளில் ஏறிக் கொண்டே போகின்றன.

அப்படியானால் கல்வி வேண்டாமா? ரொம்பப் பெரியவர்கள் கல்வி ரொம்ப அவசியம் 'எண்ணும் எழுத்தும் கண் ணெனத் தகும்' என்று கல்வியை ஏகமாக ச்லாகிக்கிறார்கள். ஏன் இப்படி முரண் பாடாக இருக்கிறது?

ஆழ்ந்து அலசிப் பார்த்தால் முரண் எதுவும் இல்லை என்று தெரியும். அந்தப் பெரியவர்கள் சொன்ன கல்வி வேறாகவும், இன்று அமலாகிற கல்வி வேறாகவும் இருக்கின்றன. இதுதான் முரண்பாட்டுக்குக் காரணம். அவர்கள் சொன்னபடி கல்வி இருந்தால் குற்றம் வளராது; குறைந்து மறைந்தே போய் விடும்.

என்ன சொன்னார்கள்? அவர்கள் புத்தி வளர்ச்சி தருகிற கல்வியை மட்டும் சொல்லவில்லை. பக்தி வளர்ச்சி அளிப்ப தாகவும் உள்ள கல்வியையே சொன் னார்கள்.

கற்றதனால் ஆயபயன் என்கொல்?
வாலறிவன்
நற்றாள் தொழா(அ)ர் எனின்

என்று திருவள்ளுவர் சொன்னதுதான் அவர்கள் எல்லாருடைய அபிப்ராயமும்.

தெய்வ ஸம்பந்தமில்லாமல், அதாவது தெய்வத்திடம் பயப்பட வேண்டும் என்று பண்ணாமல் படிப்பை மட்டும் கொடுப்ப தால்தான் விபரீதமாகப் போயிருக்கிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்க ராச்சாரிய சுவாமிகள்.

குளக்கரையில் என்னிடம் வாக்குறுதி கேட் டாயே, ஞாபகம் இருக்கிறதா?''

''இருக்கிறது!''

''அந்த வாக்குறுதியை இப்போதும் கோருகிறாயா?''

''வேண்டாம் பிரபு! வாக்குறுதி வேண் டாம்! தங்களுடைய மன்னிப்புத்தான் வேண்டும்!''

''எதற்கு மன்னிப்பு?'' என்றார் மாமல்லர்.

''தங்களைப் பற்றிச் சந்தேகம் கொண்ட தற்குத்தான். தங்களைப் பற்றி ஒரு துஷ்ட நாகம் கூறிய விஷங்கலந்த மொழிகளை நம்பியதற்காகத்தான்!'' என்றாள் சிவகாமி.

அப்போது இலேசாகச் சரசரவென்ற சப்தம் சமீபத்தில் கேட்கவே, சிவகாமி மிரண்டு போய்ச் சுற்றுமுற்றும் பார்த்தாள். மரக்கிளைகளின் நிழலும் நிலா வெளிச்சமும் மாறி மாறித் தரையில் படிந்திருந்த இடத்தில், அவர்களுக்குச் சமீபத்தில் ஒரு பாம்பு நெளிந்து நெளிந்து போய்க் கொண்டிருந்தது.

''ஐயோ! அப்பா! பாம்பு!'' என்று சிவகாமி அலறிக் கொண்டு எழுந்தாள்.

மாமல்லரும் குதித்து எழுந்து, சிவகாமியை ஆதரவுடன் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டார். ''பயப்படாதே, சிவகாமி! நானிருக்கும்போது என்ன பயம்?'' என்றார்.

(தொடரும்)

நோய்களைக் குணப்படுத்தும் ராகங்கள்!



மேடையில் இசைக் குழு. நடுநாயகமாய் அமர்ந்திருக்கிறார் ஸ்வாமிஜி. அவருக்கு முன்னால் மேற்கத்திய இசைக் கருவியான சிந்தசைஸர். 67 லட்ச ரூபாய். அதில் கல்யாணி ராகத்தில், ஸ்வாமிஜி தாம் எழுதிய தத்தாத்ரேயர் மீதான பாடலை இசைக்கிறார். பாடல் முடிந்ததும், ''நான் இப்போது இசைத்த கல்யாணி ராகத்துக்கு ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் குணம் உண்டு. அடுத்து இசைக்கப் போவது மோகனம். இது இதயம் சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்தும்'' என்கிறார். இப்படியே ஒவ்வொரு ராகத்துக்கு ஒரு நோய் என்று நிகழ்ச்சி தொடர்கிறது. கணபதி சச்சிதானந்த ஸ்வாமிகள், மைசூரைச் சேர்ந்த பீடாதிபதி.

நிருபர்: ''நீங்கள் இசையை முறைப்படி கற்றுக் கொண்டீர்களா?''

ஸ்வாமிஜி: இல்லை. பிறவியிலேயே ஸ்வாமிஜிக்கு இசை ஞானம் உண்டு. ஸ்வாமிஜியால் எந்த இசைக் கருவியையும் இசைக்க முடியும்.''

நிருபர்: ''கர்நாடக இசையை வழங்க மேற்கத்திய இசைக் கருவியான சிந்தசைஸரைப் பயன்படுத்துவதேன்?''

ஸ்வாமிஜி: ''நல்ல விஷயங்கள் எங்கிருந்தாலும் எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளுவதுதானே புத்திசாலித்தனம். கம்ப்யூட்டரால் இயங்கும் இசைக் கருவி சிந்தசைஸர். கணக்கற்ற இசைக் கருவிகளின் இசையை ஒரே நேரத்தில் ஆழமான இம்பாக்ட் ஏற்படுத்தும்படி வழங்குவது இதன் மூலம் சாத்தியம். கடலலையின் ஆர்ப்பரிப்புப் போன்ற இயற்கை ஒலிகளைக் கூட மேடைக்குக் கொண்டு வருவது சுலபம்.

நிருபர்: இசை மூலம், எல்லா வித்வான்களாலுமே நோயைக் குணப்படுத்தி விட முடியுமா?

ஸ்வாமிஜி: ஒரு வித்வான் வெறுமனே பாட்டுப் பாடுவதன் மூலமோ, அல்லது ஒரு வாத்தியத்தை இசைப்பதன் மூலமோ நோய்களைக் குணப்படுத்தி விட முடியாது.

நிருபர்: உங்களுக்கு மட்டும் எப்படி சாத்தியம்?

ஸ்வாமிஜி: தெய்வீக இசை மூலம் ஸ்வாமிஜி தனக்கும், தன்னை வணங்குபவர்களுக்கும் ஒருவித நெருக்கத்தை ஏற்படுத்துகிறார். இது நோயாளிகளிடையே தன்னம்பிக்கையை வளர்க்கிறது. நோயாளிகளுடன் ஸ்வாமிஜி தனியே பேசி, முழு விவரமும் அறிந்து கொண்டு, தேவையானால் நோயின் தன்மைக்கேற்ப மூலிகைச் சிகிச்சையும் அளிப்பார்.

நிருபர்: அப்படியெனில் ஸ்வாமிஜி வைத்திய சாஸ்திரம் கற்றவரா?

ஸ்வாமிஜி: அதுவும் சுயமாய் அறிந்ததே! யாரிடமும் ஸ்வாமிஜி போய் வைத்திய சாஸ்திரம் கற்றுக் கொள்ளவில்லை. (ஸ்வாமிஜியின் மூதாதையர்கள் சித்த வைத்தியர்கள் என்று தெரிகிறது.)

நிருபர்: "உங்கள் இசை நிகழ்ச்சியின் போது, எல்லோரையும் அரச இலையை வைத்துக் கொள்ளும்படி கூறுவது ஏன்?

ஸ்வாமிஜி: மருத்துவ ரீதியாய், அரச இலை சக்தி வாய்ந்தது. விஷம் முறித் திறன் கொண்டது.

நிருபர்: விஞ்ஞான ரீதியாய் உங்கள் செயல்பாடுகளுக்கு விளக்கமளிக்க முடியுமா?

ஸ்வாமிஜி: ஸ்வாமிஜியிடம் வருகிறவர்கள் நம்பிக்கையோடு வருகிறார்கள். அவர்களுடைய பிரச்னைகளைத் தீர்ப்பது தான் ஸ்வாமிஜியின் கடமையே தவிர, விஞ்ஞான அடிப்படையில் அவற்றை நிரூபித்துக் கொண்டிருப்பது இல்லை.

நிருபர்: எல்லா நோய்களையும் ஸ்வாமிஜியால் பூரணமாய்க் குணப்படுத்தி விட முடியுமா?

ஸ்வாமிஜி: அது நோயின் தீவிரத்தைப் பொறுத்தது. தீர்க்கக்கூடிய நிலையில் உள்ள நோய்களை மட்டுமே ஸ்வாமிஜி தீர்த்து வைப்பார். முற்றின கேஸ்கள் என்றால் குணப்படுத்த முடியாது என்பதை நோயாளிகளுக்கு விளக்கி விட்டு, நோயின் தீவிரத்தைக் கட்டுப்படுத்தி, நோயாளியின் துன்பத்தை ஸ்வாமிஜி குறைப்பார்.

சந்திப்பு : எஸ். சந்திரமௌலி.

வண்ணப்படம் : உத்ரா.



"போர் நடக்கப் போகிற சமயத்துல, அரசர் என்ன பெண் வேடம் தரிச்சிருக்கார்?"

"அண்டை நாட்டு அரசர், 'பெண்களும் குழந்தைகளும் தப்பிச்சுப் போகலாம்'னு சொல்லிட்டாரே, அதான்!"

- சீர்காழி வி. ரேவதி



- ஞா. ஞானமுத்து.

இல்லறத்தாருக்கு இரண்டு மந்திரங்கள்

உலக வாழ்வில் இருந்து கொண்டே நிறைவாக, நிம்மதியாக இருப்பது எப்படி என்று பலருக்குச் சந்தேகம் வரும். வாழ்வு வெற்றி பெற இரண்டு அம்சங்கள் தெரிந்திருந்தால் போதும்.

1. உறுதியான உடல்
2. உயர்வான உள்ளம்

இவை இரண்டும் இருந்தால் வாழ்க்கை அர்த்தமுள்ளதாகிவிடும். உயிர் உய்வு பெற்று விடும்.

உடம்பு என்பது உயர்ந்த கருவி. அதிசயமான கடவுள் கொடை. அதைச் சரியாக வைத்திருப்பது மனிதனுடைய கடமை. பள்ளிக்கூடங்களில் உடற்பயிற்சி வகுப்பு என்று ஒன்று உண்டு. ஆனால் உடற்பயிற்சி ஆசிரியர் நிலை பரிதாபம். தேர்வுக்கான பாடம் முடிக்காத மற்ற ஆசிரியர்கள் எல்லாம் இந்த வகுப்பைக் கொள்ளை அடிப்பார்கள்.

முதுகுத் தண்டின் உபயோகம், சரீரம் லேசாக இருப்பதன் அவசியம் இவை எல்லாம் இளமையில் விளக்கப்படுவது இல்லை. அதன் விளைவு பலகீனமான ஒரு வாழ்க்கை முறை நாற்பதுக்குப் பிறகு மனிதனைத் தத்து எடுத்துக் கொள்கிறது.

'உடம்பை முன்னம் இழுக்கென்றிருந்தேன்' என்ற திருமூலர், ''உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்'' என்று உடம்பின் பெருமையை உணர்த்துகிறார். விவேகானந்தர் இரும்பு உடல் இளைஞர்களை இது கருதியே உருவாக்க நினைத்தார்.

எல்லாச் சுரப்பிகளும் சரிவர இயங்குவதுதான் இளமையின் இலக்கணம். நாளமில்லாச் சுரப்பிகளைச் சரியாக இயக்கத்தில் வைத்திருப்பதுதான் யோகாசனங்களின் அடிப்படை.

இந்துக்களின் சூரிய வழிபாடு, தண்டம் சமர்ப்பித்தல், பிள்ளையாருக்கான தோப்புக்கரணம், விரத அனுஷ்டானங்கள் இவை உடல் நலம் பேணும் யுக்திகள். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உடற்பயிற்சி, யோகாசனங்கள் கட்டாயப் பாடம் ஆக வேண்டும்.

உறுதியான உடம்பில்தான் உயர்வான உள்ளம் இருக்க முடியும். உள்ளம் உயர்வாக இருந்தால்தான் உடம்பு உறுதியாக இருக்கும். இவை இரண்டும் ஒன்றை ஒன்று பாதுகாக்கும் 'வன சிம்ஹ நியாயம்'...

அதாவது, காடுதான் சிங்கத்தைப் பாதுகாக்க முடியும். சிங்கம் அங்கு மறைந்து வாழும். வெட்ட வெளியானால் வேட்டையாடப்படும். ஆனால் சிங்கம் காட்டைப் பாதுகாப்பதும் உண்மை. சிங்கம் போன்ற விலங்குகளுக்கு அஞ்சி காட்டிற்குள் வர மக்கள் தயங்குவர். காடு பாதுகாக்கப்படுகிறது. காடும் சிங்கமும் ஒன்றை ஒன்று பாதுகாப்பது போல் உறுதியான உடலும் உயர்வான உள்ளமும் ஒன்றை ஒன்று பாதுகாக்கின்றன.

வேத்திரகியம் என்ற ஊரில் பஞ்ச பாண்டவர்கள் பிராமண வடிவத்தில் தங்கி இருந்தனர். பிட்சை எடுத்து உண்ணும் நிலை... தாய் குந்திக்குப் பெருங்கவலை. ராஜ குடும்பத்துப் பிள்ளைகள் பிட்சை எடுக்கிறார்களே என்பதை விட எடுத்த பிட்சை பீமனுக்கு மட்டுமே பற்றாது என்பது பெருங்கவலை.

வருகிற பிட்சையை இரு பாதியாக்கி ஒரு பாதியைப் பீமனுக்குக் கொடுத்து விட்டு,

சுகிசிவம்

மறுபாதியைத் தாய் உட்பட ஐவர் உண்ணுவது வழக்கம். அந்த நிலையில் அவர்கள் தங்கி இருந்த வீட்டில் அழுகை ஒலி...

பகாசுரனுக்கு வண்டி நிறைய உணவு தயாரித்து, அந்த வீட்டில் இருந்து யாரே னும் ஒருவர் கொண்டு போய்க் கொடுத்து, தாங்களும் அவனுக்கே சாப்பாடாக ஆக வேண்டும். அதாவது பகாசுரனால் சாக வேண்டும். அதற்குத்தான் அழுகை.

கஷ்டத்தில் இருக்கும் குந்தி அவர்கள் கஷ்டத்தை நீக்க முன்வந்தாள். பகாசுர னுக்கு உணவாக, உணவு வண்டியில் தன் பிள்ளையை அனுப்ப ஒப்புக் கொண்டாள்.

பகாசுரனுக்கு உணவாகப் பிள்ளையை அனுப்புகிறாள் என்று பொருள் அல்ல! பீமனுடைய பலத்திலும் வீரத்திலும் ஆற்ற லிலும் அவளுக்கு அத்தனை நம்பிக்கை. ஒரு நாளாவது பீமன் வயிறார உண் ணட்டுமே என்ற சுயநலமும் காரணம்!

பீமனது பலம் ஒருபோதும் தவறாகப் பயன்பட்டது இல்லை. பிறர் துயர் தீர்க் கவே பயன்பட்டது! பகாசுரனைக் கொல்ல, கீசகன் என்ற காமுகனைக் கொல்ல, மனித மாமிசப் பிரியன் இடும்பனை வெல்ல என்று உறுதியான உடல் உலக நன் மைக்காகவே பயன்பட்டது. உறுதியான உடல் உயர்வான உள்ளத்தால் ஆளப்பட்டு வந்தது.



இனி நான் சொல்லப் போவது கதை யல்ல. வரலாறு.

எதிரியை வெற்றி கொண்டு, அவனது செல்வங்களை அள்ளி வந்து தர்பாரில் குவித்திருந்தான் தளபதி. அந்த ரத்தினக் குவியலை இரு கையாலும் அள்ளிப் பார்த்த வீர சிவாஜியின் விழிகள் பவழக் கற்க ளாய்ப் பளபளத்தன. வைர நெஞ்சத் தின் முத்துப் புன்னகை தளபதிக்குப் பரிசுப் பத்திரமாய்த் தென்பட்டது. சிவாஜி ஒரு ரத்தினப் பிரியன். செருப்புகளில் கூட ரத்தி னங்களைத் தைத்துக் கொள்வது அவனது செருக்கல்ல.. கிறுக்கு.

தளபதி வாய் திறந்தான். ''மகராஜ் இந்தப் பரிசுகளை வெல்லும் உன்னதப் பரிசு அதோ!'' திரும்பிய திசையில் ஒரு முத்துப் பல்லக்கு. ''என்ன அது?'' சிவாஜியின் சிம்ம கர்ஜனை!

''உயிருள்ள வைரம்... நடமாடும் நவ ரத்னம்.. மங்கையாய் மலர்ந்த மாணிக்கம். பருவம் கனிந்த பவளம்'' தளபதி பேசிக் கொண்டே போனான்.

பல்லக்கின் திரைச் சீலை சிவாஜியின் வாள் முனையால் வாய் பிளந்தது. உள்ளி ருந்து நடுங்கியபடி ஒரு பேரழகி வெளிப்பட்டாள். 'யார் இவள்?' கேள்வி அம்பு தளபதியைத் தாக்கியது.

''நாம் வெற்றி பெற்ற சுல்தானின் இளம் மனைவி! பேரழகி என்பதால் உங்களுக் கான உயர்ந்த பரிசாகக் கொண்டு வந் தேன்.''

''பெண்ணே நீ நிசமாகவே அழகாக இருக்கிறாய்; இப்படி ஒரு அழகியை என் வாழ்நாளில் நான் கண்டது இல்லை!''

சிவாஜியின் வார்த்தைகளால் நடுங்கி னாள் அந்த நங்கை. வார்த்தைகள் தொடர்ந்தன:

''பெண்ணே! உன் அழகைப் பார்க்கும் போது எனக்கு ஒரு ஆசை தோன்றுகிறது.'' சொல்லி விட்டு நிறுத்தினான் சிவாஜி.


சபை அந்த ஆசைக்கு அர்த்தம் தேடியது. அவனே தொடர்ந்தான்.

''நீ பேரழகி. உன்னைப் போல் என் அம்மா அழகாக இருந்திருக்கக் கூடாதா? அதுதான் இல்லை. உன் வயிற்றில் நான் பிள்ளையாகப் பிறந்திருந்தால் எவ்வளவு அழகாக இருந்திருப்பேன் தெரியுமா?''

சபை ஸ்தம்பித்தது. பால் ஊட்டும் போதே பண்பாட்டையும் ஊட்டியிருந்தாள் தாய் ஜீஜிபாய். உறுதியான உடம்பில் உயர்வான உள்ளம்!

(இன்னும் சொல்வேன்)





எதற்காக அழுதான்?

அம்மா...

எழுபது வயதிலேயும் இரண்டு கண்ணுக்கும் பார்வை வேண்டும் என்று ஆசைப்பட்ட அம்மா.

''வேண்டாம் அம்மா, வேண்டாம். இருக்கிறது போதும்'' என்று விஸ்வேஸ்வரன் எவ்வளவோ பன்னிப் பன்னிச் சொன்னதைக் காதில் வாங்காத அம்மா.

''போதாதுடா. ஒரு கண்ணிலே இருக்கிற வெளிச்சம் இப்பவே கொஞ்சம் கொஞ்சமா மங்கலாயிட்டே வர்றது. நாளைக்கு ஒரேயடியாய் இருட்டாயிடும். அப்புறம் சாமி படம் எது... சாப்பாட்டுத் தட்டு எதுன்னு தெரியாமல் தவிப்பண்டா. பாத்ரூமுக்கு நீதான் கைபிடிச்சு இழுத்துண்டு போகணும்.''

''போறேனே.''

''போவேடா. எத்தனை நாளைக்குப் போவே? ஒரு மாசம்... ரெண்டு மாசம்... ஒரு வருஷம் போவே. அப்புறம்? 'கர்மம்... கர்மம்'னு தலையிலே அடிச்சுக்குவே. லோகத்திலே நடக்கிறதைத்தான் நான் பார்த்துண்டு வர்றேனே. அக்கம் பக்கத்திலே கிழடு கட்டைகளோடு பிள்ளைங்க படற அவஸ்தை எனக்குத் தெரியாமலா இருக்கிறது.''

''நானும் அப்படி அலுத்துக்குவேன்; வெறுத்துப் பேசுவேன்னு பயப்படறீயா?''

''நீ வெறுப்பாயோ... மாட்டாயோ. அது எனக்குத் தெரியாது. ஆனால் இன்னொரு மனுஷாள் துணையோடு பாத்ரூமுக்குப் போகும் அவஸ்தை எனக்கு வேண்டாண்டா, விசு.''

''அதுக்கு?''

''கண்ணை ஆபரேஷன் பண்ணிடு. பார்வை கிடைச்சுடும்.''

''டாக்டர் வேண்டாங்கறாரே, அம்மா.''

''ஏற்கெனவே அட்டாக் வந்த கேசு. வயசாயிடுத்து. ஆபரேஷன் தாங்க முடியாதுன்னு பயப்படறார், அவர்.''

''ஆமாம்.''

''என்னுடைய சிரமம்.. இம்சை... இதெல்லாம் டாக்டருக்கு என்னடா தெரியும். அவர், டாக்டர். நோயாளியின் உயிரைத் தக்கவைக்கிறதிலேதான் குறியாய் இருப்பார். நோயாளியோட மனசு அவருக்குப் புரியாதே.''

''இப்ப என்ன பண்ணனுங்கறே.''

''உடனே கண் ஆபரேஷன் பண்ணச் சொல்றேன்.''

நாளைக்கு ஆபரேஷன்.

விஸ்வேஸ்வரனுக்கு மனசே சரியில்லை. அரசு கம்பெனி ஒன்றில், பர்சனல் ஆபீசர், அவன். பணியாளர்களின் குறை தீர்ப்பதற்கென்றே நியமிக்கப்பட்ட நலத் துறையைச் சார்ந்தவன். அப் பணியில் வெற்றியும் கண்டவன்.

ஆனால், அம்மாவின் குறையை - குறை என்று தெரிந்தும், அதை நிவர்த்திக்க வேண்டிய வசதிகள் இருந்தும், நிவர்த்திக்க முடியாத திரிசங்கு சிரமத்தில் ஊசலாடினான் அவன்.

அம்மாவை வழக்கமாய்ப் பார்க்கும் டாக்டர் சர்மா, ''ஆபரேஷன் வேண்டாம். ஹை ரிஸ்க்'' என்று ஆரம்பத்தில் இருந்தே சொல்லி வருகிறார்.

''இரண்டு முறை 'அட்டாக்' வந்திருக்கிறது. சர்க்கரை உபத்திரவம் வேறே. எந்த வகையில் பார்த்தாலும், ஆபரேஷன் தொண்ணூறு சதவிகிதம் அறிவீனமாய்த் தோணுது. இருக்கிற பார்வை, அவங்க இருக்கற காலம் வரை போதுமானது'' என்பதில் அவர் உறுதியாக இருந்தார். இன்னும் இருக்கிறார்.

ஆனால், அம்மா....

தமிழினியன்



''மணமேடையிலே நடிகைக்கு என்ன சிந்தனை?''

''விவாகரத்து செய்ய, காரணங் களை யோசிக்கிறாரோ,என்னமோ?''

- ஆர். வசந்த குமார்.

பயந்தாள்.

மரணத்துக்காகவோ அல்லது தற்போதைய பார்வையும் கொஞ்ச நாளில் அஸ்தமித்து விடுமென்றோ அவள் பயப்படவில்லை.

அடுத்தவருக்கு, தான் சிரமமாகி விடக் கூடுமோ என்பதற்காகப் பயந்தாள். தன்னால் இன்னொரு ஜீவன் அல்லலுற நேரிடுமே என்பதை எண்ணி அச்சமுற்றாள். மற்றவர்கள் தனக்குச் செய்யும் சிசுருட்சைகள் எல்லாம் அவர்களுக்கு மனக் கசப்பை உண்டாக்கும் என்பதில் தீர்க்கமாக இருந்தாள், அவள்.

''இங்கே பாருடா, விசு. உன் அப்பா சாகும் போது யாருக்காவது தொந்தரவு வைச்சாரா?''

''இல்லை.''

''அன்னிக்கு ராத்திரி பாலகணபதி கோயில் வரை வாக்கிங் போறேன்னு போனார். போயிட்டு வந்தவர், 'பாகீ... குடிக்க கொஞ்சம் ஜலம் கொடேன்'னுட்டு வாசலில் கிடந்த ஈஸிச்சேரில் அப்படியே சாய்ஞ்சுட்டார். நான் ஏதோ களைச்சுப் போயிருப்பார்னு நினைச்சேன். ஆனால்.... ஜலம் கொண்டு வர்றதுக்குள்ளே பேச்சு மூச்சு இல்லாமல் போயிட்டாரே. ஒரு ஈ எறும்புக்குக் கூட இம்சை வைக்காமல் கண்ணை மூடிட்டாரே. அதுதாண்டா விசு, ஆனந்தமான சாவு. அதே மாதிரி நானும் போகணும்பா.''

அலுவல் முடிந்து வீட்டுக்குள் நுழையும் போதெல்லாம் அம்மா கெஞ்சினாள்.

பாவமாய் இருந்தது. அவளுக்கு ஆபரேஷன் பண்ணா விட்டால், 'அம்மாவின் அந்திம காலத்து ஆசையை நிறைவேற்றாத மகன்' என்ற பழி வந்து சேருமோ?

அச்சம் அலைக்கழித்தது.

முடிவுக்கு வந்தான், விஸ்வேஸ்வரன்.

நகரில் பிரபலமான ன் டாக்டர், அம்மாவுக்கு ஆபரேஷன் செய்தார்.

ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்தது.

ஒரு வாரம் கழித்துக் கட்டவிழ்த்தார்கள்.

''விசு... இரண்டு கண்ணும் நன்னாத் தெரியறது'' , என்று குழந்தை மாதிரி குதூகலித்தாள், அம்மா.

அம்மகிழ்ச்சியைப் பார்த்த போது, 'அம்மாவின் சந்தோஷத்துக்கு இத்தனை நாள், தான் தடையாக இருந்து விட்டோமே' என்று கூட நினைத்தான், விசு.

ஆனால்...

டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு வந்தார்கள்.

''வீடே பளிச்சுன்னு இருக்கு'' என்று ஆனந்தப் பிரவாகத்துடன் தன் அறைக்குள் போய் உட்கார்ந்து கொண்டாள், அம்மா.

ஆனந்தியிடம், அம்மாவுக்கு ஜூஸ் கொடுக்கச் சொல்லி விட்டு, ''நான் கோயிலுக்குப் போயிட்டு வர்றேன்'' என்று வெளியேறினான், விசு.

அம்மா பெயரில் அர்ச்சனை பண்ணி விட்டு முப்பதே நிமிடம்....

திரும்பும் போது, வீட்டில் சந்தடியாக இருந்தது. புருவத்தை உயர்த்திக் கொண்டு ஓடினான் விசு.

ஆம்.

அம்மா அடங்கிப் போய் இருந்தாள்.

''ஜூஸ் கொண்டு வருவதற்குள் இப்படி ஆயிடுச்சே'' என்று அழுதாள், ஆனந்தி. குழந்தைகள் இருவரும் சுற்றி நின்று ''பாட்டி... பாட்டி'' என்று கூக்குரலிட்டார்கள்.

அப்பா, அன்று ஜலம் கொண்டு வருவதற்குள் -

அம்மா, இன்று ஜூஸ் கொண்டு வருவதற்குள்...

கட்டிலில் படுத்தவள்தான்.

''பார்வை தெரிகிறது'' என்று பரவசத்துடன் படுத்த அம்மா.

யாரையும் கூப்பிடவில்லை. எதையும் கேட்கவில்லை. படுக்கையிலேயே பகவானைச் சரணடைந்து விட்டாள். 'மூன்றாவது அட்டாக்' அவளை முழுமையாக்கி விட்டது.

அம்மா பிரியப்பட்டது போலவே, அவள் பிராணன் காலாவதியாகி விட்டது.

முதுமைக் காலத்தில் பிள்ளைகள் தனக்கு ஒத்தாசையாய் இருக்க மாட்டார்கள். இந்த அவநம்பிக்கைதான் அம்மாவின் ஆயுளுக்கு சத்ருவாகி விட்டது.

விஸ்வேஸ்வரனின் கண்கள் அருவியாய்ப் பொழிந்தன.

''அம்மா... உன் மறைவு கூட எனக்குச் சோகமாக இல்லை. உ ன து கண்கள் பார்வையிழக்கிற போது, நாங்கள் உன்னையொரு பாரமாகத்தான் கருதுவோம் என்கிற அச்சத்திலிருந்து உன்னை மீள வைக்க முடியவில்லையே. அந்த ஆற்றாமைக்காக நான் அழுகிறேன், அம்மா...''

வாழ்க்கைக்கு தேவையான பல வசதிகள் எங்களிடம் உள்ளன...



...ஆனால், எங்களுக்கென ஒரு சொந்த வீடு இல்லை.'

நிறைவான வேலை, நல்ல எதிர்காலத்துடன் கூடிய பணி, நல்ல சம்பளம், மகிழ்ச்சியான குடும்பம் மற்றும் வீட்டிற்கு தேவையான ரெஃப்ரிஜிரேட்டர், கலர் டிவி, விசிஆர், வாஷிங் மெஷின் மற்றும் மோட்டார் சைக்கிள் போன்ற வசதிகள். இவையெல்லாம் எங்களிடம் இருக்கின்றன.

ஆனால், எங்களுக்கென சொந்த வீடு வேண்டுமென விரும்புகிறேன். பின்னர் ஒரு நாள், ஹோம் லோன் அக்கவுண்ட் திட்டத்தைப் பற்றி ஒரு நண்பர் தெரிவித்தார். அவரது அறிவுரையின்படி, ஒரு வங்கியில் ஹோம் லோன் அக்கவுண்ட் (வீட்டுக் கடன் வசதி) தொடங்கி, பணம் சேமிக்கத் துவங்கி உள்ளேன். இப்பொழுது மற்ற தேவைகளைக் குறைத்துக்கொண்டு எச்.எல்.ஏ. திட்டத்தில் கூடுதலாக சேமித்து வருகிறேன். இதனால் நான் கடன் பெற்று எனது விருப்பத்தை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.'

இச்சிறப்பு சேமிப்புத் திட்டம், நீங்கள் வீடு வாங்க கடன் பெற வசதி செய்கிறது. உங்களுக்கு நீங்களே உதவிக்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டது. மேலும் உங்கள் வசதிக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப சேமிக்கலாம். இத்திட்டம் மாத வருவாய் பெறுவோர், தினக்கூலி பெறும் தொழிலாளிகள், தொழில் நிபுணர்கள், வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கும் பெரிதும் உதவுகிறது. மேலும், கவர்ச்சிகரமான வரிச்சலுகைகளையும் அளிக்கிறது.

ஹோம் லோன் அக்கவுண்ட் ஒரு தேசிய திட்டம். உங்கள் அருகாமையிலுள்ள அரசுடைமை வங்கிக ளை அல்லது மற்ற பல ஷெட்யூல்ட் வங்கிகள் எதனுடனாவது, நாட்டில் எங்கு வேண்டுமானாலும் தொடர்பு கொண்டு, ஹோம் லோன் அக்கவுண்ட் திட்டத்தை இன்றே துவக்குங்கள்.

எமது இலக்கு : அனைவருக்கும் வசிப்பிடம்

நேஷனல் ஹவுஸிங் பாங்க்

(இந்திய ரிசர்வ் வங்கியின் ஒரு உடைமை)
ஹிந்துஸ்தான் டைம்ஸ் ஹவுஸ் (5-வது மாடி),
18-20 கஸ்தூர்பா காந்தி மார்க்,
புது தில்லி-110 001.
பாம்பே லைஃப் பில்டிங் (3 வது மாடி)
45, வீர் நரிமன் ரோடு, ...,
பம்பாய்-400 023.

Chaitra D NHB 1690 TAM



சரண்யா

கக் காட்ட வேண்டும் என்று மேக்கப் போட்டார்கள். அந்த மேக்கப் எரிச்சலைத் தரக்கூடிய ஒன்று. போடுவதற்கும் நீண்ட நேரமாகும். இந்த நிலையில் அவர் அந்த மேக்கப்பை நள்ளிரவிலேயே போட்டுக் கொண்டு, சூரியோதயக் காட்சியில் படமெடுப்பதற்காக அதிகாலையிலேயே கடற்கரையில் காத்திருப்பார்.

''இதே போல்தான் எம். ஜி. ஆரும். வயதான நிலையிலும் இளைஞராகவே நடிக்க வேண்டிய நிலை

மின்னி மறையும் புதுமுகங்கள்!



ராதிகா

இன்றைய சினிமா யாரையும் நிரந்தரமாகத் தக்க வைத்துக் கொள்வதில்லை. இரண்டு படங்களில் தொடர்ந்து நடிக்கும் ஹீரோக்களும் ஹீரோயின்களும் மூன்றாவது படத்தில் காணாமல் போய் விடுகிறார்கள்! ஏன் இந்த நிலை?

''திறமை இருந்தால் மட்டும் போதாது; தொழிலில் ஓர் ஈடுபாடு வேண்டும். அப்பொழுதுதான் எந்தத் தொழிலிலும் பிரகாசிக்க முடியும்!'' என்கிறார் சிவகுமார்.

''சிவாஜியை எடுத்துக் கொள்ளுங்கள்... அவர் ஓர் ஈடு இணையற்ற நடிகராக வளர்ந்து நிலைத்திருக்கிறார் என்றால், திறமை மட்டுமே காரணமில்லை. ஈடுபாடும் ஒரு முக்கிய காரணம். 'திருவருட் செல்வர்' படப்பிடிப்பின் போது அவரது தோல் சுருக்கங்களையெல்லாம் தத்ரூபமா



வைஷ்ணவி

அவருக்கு. அதனால், அவர் மிகவும் புத்துணர்ச்சியோடு இருக்கும் அதிகாலை நேரங்களிலேயே தமது குளோசப் காட்சிகளைப் படமாக்கச் செய்வார். காட்சி நன்றாக அமைய வேண்டும் என்பதில் அத்தனை அக்கறை காட்டுவார்.

'''தில்லானா மோகனாம்பாள்'

படப்பிடிப்பின் போது, நாகேஷ் வழக்கொன்றில் சம்பந்தப்பட்டிருந்ததால் நடிக்க முடியாத ஒரு சூழ்நிலை. ஆனால் ஏ. பி. நாகராஜன், வழக்கு முடிந்து வரும் வரை நாகேஷுக்காகக் காத்திருந்தார். நாகேஷின் திறமை மேல் ஏ. பி. நாகராஜன் வைத்திருந்த நம்பிக்கையை இது உணர்த்துகிறது. சினிமா என்பது ஒரு டீம் ஒர்க்கே தவிர, தனிமனிதச் சாதனை அல்ல என்பதை அனைவருமே அன்று புரிந்து வைத்திருந்தார்கள். இதுதான் என்னைப் போன்ற சிலர் இன்னும் சினிமாவில் வேரூன்றியிருக்கக் காரணம்'' என்கிறார் சிவகுமார்.

''சினிமா என்பது ஒரு டீம் ஒர்க் என்று இப்போது பலர் நினைப்பதேயில்லை. தயாரிப்பாளர்களெல்லாம் பிரபலமான ஹீரோக்கள் என்ன சொல்லுகிறார்களோ - அவர்கள் யாரைச் சிபாரிசு செய்கிறார்களோ அவர்களையே ஹீரோயின்களாகப் போடுகிறார்கள். ஹீரோக்களும் தங்களுக்காகவே படம் ஓடுகிறது என்று நினைக்கிறார்கள். இந்த நிலையில் ஹீரோயின்களுக்கு நடிப்புத் தொழிலில் எப்படியொரு ஈடுபாடு வரும்?'' என்று கேட்கிறார் ராதிகா!



பிரஷாந்த்

ராதிகாவைப் போலவே சரண்யாவும் சொல்கிறார்: ''ஹீரோக்களைக் 'காக்காய்' பிடித்தாலே சினிமா சான்ஸ் கிடைக்கும் ஒரு சூழ்நிலையில் நடிப்பில் யார் அக்கறை காட்டுவார்கள்? காக்காய் பிடிப்பதில்தான் அக்கறை காட்டுவார்கள்!''

சரண்யா, இன்னும் இரண்டு விஷயங்களையும் சொல்கிறார்: ''கே. ஆர். விஜயா, சாவித்திரி போன்றவர்களெல்லாம் நடித்துக் கொண்டிருந்த போதுதான் திருமணம் செய்து கொண்டார்கள். ஆயினும் அவர்களது திருமணம், அவர்களது பட வாய்ப்புகளைக் குறைத்து விடவில்லை. ஆனால், இன்றைய நிலை மாறி விட்டது. திருமணமாகி விட்டால், அந்த நடிகையின் கிளாமர் போய்விட்டதென்று கருதி அனைவருமே ஒதுக்கி விடுகிறார்கள். இதன் காரணமாகப் புதுப்புது முகங்களைத் தேடி ஓடுகிறார்கள். இந்த ஓடலுக்கும் தேடலுக்கும் இன்னொரு காரணம் புதுமுகங்களைப் போடும் போது அவர்களுக்கு மிகக் குறைந்த ஊதியமே போதும் என்பதுதான்!''

இவர் இப்படிச் சொன்னாலும் ''கடின உழைப்புக்கும் திறமைக்கும் சினிமாவில் மதிப்பிருக்கும் என்பதே எனது அசைக்க முடியாத நம்பிக்கை!'' என்று சொல்லுகிறார் பிரஷாந்த்.

ஆனால் வைஷ்ணவியோ, ''சினிமாவில், திறமையை விட அதிர்ஷ்டம்தான் அதிமுக்கியமானது!'' என்று அடித்துச் சொல்லுகிறார். ''ஒரு படம் வெற்றியடைந்தால் பிரச்னையே இல்லை. வெற்றியை அனைவரும் பகிர்ந்து கொள்ளுவார்கள். தோல்வியடைந்து விட்டாலோ, அதற்குப் புதுமுகங்களின் 'ராசியின்மை'தான் காரணம் என்று ஓரங்கட்டி விடுவார்கள். எனவே சினிமாவில் வாய்ப்புக்கள் குவிய எப்படியாவது, 'ராசியான நடிகை இவர்' என்று பெயரெடுத்து விட்டால் போதும்!''

இதற்கு நேர்மாறாக அதிர்ஷ்டத்தை விட திறமைதான் முக்கியம் என்று வாதாடுகிறார் தியாகராஜன். ''இன்றைய ஹீரோக்களும் ஹீரோயின்களும் கல்லூரி வாசல்களிலும் பஸ் ஸ்டாப்புகளிலும்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதனால் ஓரிரு படங்களிலேயே அவர்களுடைய திறமையின்மை வெளிப்பட்டு, ஓரங்கட்டப்பட்டு விடுகிறார்கள். திறமையைப் பின்னணியாகக் கொண்டு சினிமாவுக்கு வந்தவர்களின் நிலை இப்படியல்ல. ஆரம்பத்தில் சரிவு ஏற்பட்டாலும் பிறகு தங்களது திறமையை மேலும் வளர்த்துக் கொண்டு மீண்டும் பிரகாசிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். இதற்கு கார்த்திக், பிரபு, முரளி போன்றவர்களே சிறந்த உதாரணங்கள்!''

''முன்பெல்லாம் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிலேயே படங்கள் தயாரிக்கப்பட்டன. எனவே, ஹீரோ, ஹீரோயின்களும் குறைவு. அதனாலேயே அவர்களுடைய மார்க்கெட்டும் சரிவு ஏற்படாமல் நிலைத்து நின்றது. இன்றைய நிலை அப்படியில்லை. எடுக்கப்படும் படங்களின் எண்ணிக்கை எக்கச்சக்கமாக இருப்பதால், ஏராளமான புதுமுகங்கள் தேவைப்படுகிறார்கள். அதோடு, சினிமாவில் நடிப்



சிவகுமார்



பாரதிராஜா

பதென்பது அருவருப்பான விஷயம் என்கிற பழைய எண்ணம் இப்போது முற்றிலுமாக மாறியிருப்பதால் பலரும் போட்டி போட்டுக் கொண்டு நடிக்க வருகிறார்கள். இதனாலும் புதுமுகங்களின் வாய்ப்பு குறைகிறது!'' என்கிறார் ராகசுதா.

இவர் ஒரேயொரு தமிழ்ப் படத்தில் நடித்தார். வாய்ப்பு பிரகாசமாக இல்லாமல் போக மலையாளத்திற்குச் சென்றார். பிறகு மீண்டும் 'சுவாதி' என்கிற தமது ஒரிஜினல் பெயரில் இப்போது தமிழில் பிரவேசித்திருக்கிறார்.


படத்துக்குப் படம் புதுப்புது முகங்களை அறிமுகப்படுத்தும் டைரக்டர் பாரதிராஜா என்ன சொல்கிறார்?

''முதலில் கதையை முடிவு செய்கிறேன். அதன் பிறகுதான் அந்தந்தப் பாத்திரங்களுக்குப் பொருத்தமான நபர்களைத் தேடுகிறேன். இந்த அடிப்படையில்தான் நான் புதுமுகங்களை அறிமுகப்படுத்துகிறேன்.

''இப்படி நான் அறிமுகப்படுத்தும் போது, அவர்கள் நான் தேர்ந்தெடுத்த கதாபாத்திரங்களுக்கு மட்டுமே பொருத்தமாக இருந்து, மற்ற கதாபாத்திரங்களுக்குப் பொருத்தமாக இல்லாமல் போனால், பிறகு வாய்ப்பில்லாமல் போகக் கூடும். நான் அதற்கு என்ன செய்ய முடியும்? சினிமாவில் நீடித்திருப்பதென்பது அவரவருடைய சொந்தத் திறமையைப் பொறுத்துத்தான் இருக்கிறது'' என்று ஆணித்தரமாகச் சொல்கிறார் பாரதிராஜா.

தொகுப்பு : **மௌஷ்மி**

வாசகர் யோசனை :
சா. கிருஷ்ணசாமி,
ஸ்ரீ முஷ்ணம் .





தடயம்

மாட்டு வண்டி சென்றதும்
மண்ணைப் பார்!
தடயம்!
சக்கரத் தடயம்!
குளம்பின் தடயம்!

மாட்டியிருக்கும்
சுவர்க் கடிகாரத்தை
எடுத்துப் பார்!
சுவரில் தடயம்!

அஃறிணைப் பொருட்களுக்கே
தடயம் உண்டெனில்
உயர்திணையாகிய
உனக்கு வேண்டாமா
நீ சென்ற பின் தடயம்?
உடனே
ஏதேனும் செய் மனிதா!

- பாரதி சந்திரன்.

''என்னண்ணே, பொதுக் கூட்டத்தை அரை மணி நேரத்துக்குள்ளே முடிச்சுட்டீங்க?''

''பின்னே என்னப்பா பண்றது? ஜாதியைக் காட்டி, உறவு முறையைச் சொல்லி வோட்டுக் கேட்கப்படாதாம். தனிப்பட்ட சொந்த வாழ்க்கையைப் பற்றி விமர்சிக்கக் கூடாதாம்... எப்படித்தான் கூட்டம் நடத்துறது, நீயே சொல்லு...!''

- கரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா.



22

ஆகாசத் தாமரை



மஞ்சுளாவுக்கு உறக்கம் வரவில்லை.

'போஸ்ட்-மார்ட்டம்' எவ்வளவு பெரிய அதிர்ச்சியைத் தந்திருக்கிறது!

சடகோபன் - கோமளாவின் அப்பா - அன்று எப்படிக் கூச்சல் போட்டார், அவருடைய மகளுக்கு துருவ் 'எந்த விதத்திலும்' கணவனாக இல்லை என்று!

அப்படியிருக்கும் போது, இது எவ்வாறு சாத்தியம்?

'போஸ்ட்மார்ட்டம்' பொய் சொல்லாது.

துருவ்வைக் கேட்கலாமா?

மூன்று நாட்களாக அவன் வெறி பிடித்தவன் போல் வீணை வாசித்துக் கொண்டிருந்தான்.

சடகோபன், போஸ்ட்மார்ட்டம் அறிக்கை வந்ததும், சீறினார். ''அம்மாவும் பிள்ளையுமாச் சேர்ந்துண்டு பிள்ளைத் தாச்சிப் பொண்ணை அடிச்சு விரட்டிட்டேள். இந்தப் பாவம் உங்களை விடவே விடாது....''

அவளால் இக் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ளவோ அல்லது மறுக்கவோ முடியவில்லை.

''சரி தப்புத்தான். என்ன செய்யணுங்கிறீங்க..?''

''ஒரு பொண்ணைக் கொன்ன பாவம், ஒரு வாரிசை அழிச்ச பாவம்..'' என்று அவர் அடுக்கிக் கொண்டே போனார்.

'வாரிசு' என்பதுதான் முக்கியமான வார்த்தை.

சடகோபனின் 'குற்றச்சாட்டை' அவள் புரிந்து கொண்டு விட்டாள்.

''நஷ்டஈடு தரேன், போதுமா?''

''வக்கீலை வச்சுண்டு பேசறது நல்லது'' என்றார் சடகோபனின் வீட்டுக்காரர்.

மஞ்சுளா அவரை ஏறிட்டு நோக்கினாள். கட்டை குட்டையான உருவம், அகலமான முகம். 'சட்ட நுணுக்கங்கள் அனைத்தும் என் விரலிடுக்கில்' என்ற முகபாவம்.

''வக்கீலும் வேணாம், ஒண்ணும் வேணாம், நான் உங்களை மோசம் செய்ய மாட்டேன்'' என்றாள் மஞ்சுளா....

ஃபோன் ஒலித்தது.

''மஞ்சுளா.''

''நான் மூர்த்தி பேசறேன். சந்தியாவை 'அரெஸ்ட்' பண்ணியிருக்காங்க....''

''மை காட்! எதுக்காக?''

''ஹவுஸிங் மினிஸ்டிரி'காரங்க; சாவ்லாவுக்குத் தொந்தரவு கொடுத்திருக்காங்க, அவன் திடீர்னு ரிவால்வரை எடுத்திண்டு வந்து எல்லாரையும் சுட்டுத் தள்ளப் போறேன்னு கத்தியிருக்கான். அவனை 'அரெஸ்ட்' பண்ணினதினாலே, சந்தியா 'மினிஸ்டர்' வீட்டுக்கு ஒரு கூட்டத்தை அழைச்சிண்டு போய் 'தர்ணா' பண்ணியிருக்கா... ஷி ஈஸ் அரெஸ்டட். அதோட இன்னொரு 'ஸ்கான்டல்!'' என்று கூறிவிட்டு அவர் நிறுத்தினார்.

''என்ன 'ஸ்கான்டல்'?''

''அன்னிக்கு சந்தியா பாக்கப் போனாளே, அந்த மினிஸ்டர் சொல்றான், 'சந்தியா தன்கிட்டே ஒரு 'கால் கேர்ள்' மாதிரி நடந்துக்க முயற்சி செய்ததா... பேப்பர்காரங்களுக்கு இந்த 'நியூஸ்' வெல்லம் மாதிரி இருந்திருக்கு, உடனே சந்தியாவைப் போய்ப் பார்த்து விசாரிச்சிருக்காங்க. அவ நடந்ததைச் சொல்லியிருக்கா; மினிஸ்டர் வீட்லே என்ன நடந்ததுன்னு உங்களுக்குத் தெரியுமோன்னோ?''

''தெரியும். உங்களுக்கும் நான் இப்போ எந்த நிலையிலே இருக்கேன்னு தெரிஞ்சிருக்கலாம். இந்தத் தற்கொலை ஒரு வேண்டாத 'பப்ளிஸிட்டி...' எல்லாத்தையும் விட்டுட்டுப் பேசாம...''

மூர்த்தி இடைமறித்தார். ''நோ... தட் ஈஸ் நாட் கரெக்ட்... உங்க பிள்ளையும், என் பொண்ணும், அவங்களோட 'ஈகோ ப்ராப்ள'த்தினாலே, ஒத்தரோட ஒத்தர் 'கண்ணா மூச்சி' விளையாடாம இருந்திருந்தா, இவ்வளவு பிரச்னை வந்திருக்காதுன்னு எனக்குத் தோணறது. இப்போ அதைப்

இந்திரா பார்த்தசாரதி

பத்திப் பேசிப் பிரயோஜனமில்லே... நான் எதுக்கு ஃபோன் பண்ணேன்னா, உங்க உதவி எனக்குத் தேவை.''

''என் உதவியா? நான் என்ன பண்ண முடியும்?''

''சந்தியாவை 'ஜாமின்'லே வெளியிலே கொண்டு வரணும்...''

''அது அவளுக்குப் பிடிக்குமா?''

''அவ வெளியிலே வந்தாத்தான், என்ன நடந்தது, சாவ்லா எ து க் க ா க ச் சுடப் போனார்ங்கிற காரணம், - எல்லாம் 'பப்ளிக்'குக்குத் தெரிய வரும்...''

'' 'தர்ணா' செ ஞ் ச து க் க ா க த்தானே 'அரெஸ்ட்' பண்ணியிருக்கா, 'ஜாமீன்' ஒரு பெரிய பிரச்னை இல்லையே....?''

''நோ... பேப்பர்காரங்க சந்தியாவைப் பாத்துப் பேசியிருக்காங்க, அவ நடந்ததைச் சொல்லியிருக்கா. அதனாலே அவளை வெளியிலே விடக் கூடாதுன்னு மேலிடத்து 'ப்ரஷர்' நிறையவே இருக்கும்.''

இப்பொழுது யாருடைய உதவியை நாட வேண்டியிருக்கும்? சன்னானாவா? தர்னே ஜிராவுக்கும் செல்வாக்கு உண்டு. அவனை யும் கேட்டுப் பார்க்கலாம்... அல்லது... வேறு யார்?...

''இன்னும் கொஞ்ச நேரத்திலே நான் உங்களுக்கு ஃபோன் பண்றேன்,'' என்றாள் மஞ்சுளா.

''தாங்க் யு.''

மஞ்சுளா ஃபோனைக் கீழே வைத்தாள்.

வாசல் மணி ஒலித்தது.

கதவைத் திறந்து விட்டு வந்த உத்தம்சிங் சொன்னார்: ''பத்மநாபன் சாஹேப்.''

பத்மநாபன் உள்ளே வந்தார்.

''நமஸ்காரம். என்ன சோர்ந்து போய் உட்கார்ந்திருக்கேள்?''

''ஏற்கெனவே உடம்பு சரியில்லே. இப்பொ நடந்திருக்கிற விஷயம் வேற... எனக்கு எப்படி மன நிம்மதி இருக்க முடியும், சொல்லுங்கோ? ஆழ்வார் திருநகர்க்கு நானும் உங்களோட வந்துடலாம்னு பாக்க றேன். தினசரி பெருமாளைச் சேவிச்சுண்டு நிம்மதியா....''

''பேஷா வாங்கோ. நான் போகச்சே நீங்களும் வரலாம்.''

''அப்படின்னா... இப்பொ நீங்கள் போக லியா?''

''இன்னும் கொஞ்ச நாள் தள்ளிப் போகும் போல இருக்கு... எல்லாம் பெரு மாள் திருவுள்ளம். நம்ம கையிலே என்ன இருக்கு?''

மஞ்சுளாவுக்குச் சட்டென்று ஒரு நிம்மதி பிறந்தது. ஒரு பக்கபலம்.

''என்ன சொல்றீங்க...?'' என்று ஆவ லுடன் கேட்டாள்.

''நான் ஜோஸ்யம் பாக்கறேங்கிறது பெரிய இடத்துக்கெல்லாம் எப்படியோ தெரிஞ்சுடுத்து. பாரிஸ்லே, ஜெயில்லே ஜோஸ்யம் பாத்தேன்னு சொன்னேன் இல்லையா, அது பேப்பர்லே வந்ததும் ஒரே 'பப்ளிஸிட்டி'.... இங்கே பெரிய இடத்திலே கூப்பிட்டனுப்பிச்சு, ஜோஸ்யம் சொல்லியாகணும்னு கட்டாயப்படுத் தினா... ஏதோ சொல்லி வச்சேன். அதுவும் பலிச்சுடுத்து. அவ்வளவுதான், அடுத்த தேர் தல் வரை நான் டெல்லியை விட்டுப் போகக் கூடாதுங்கிறா.. என்ன செய்ய றது?''

'' 'பெரிய இடம்'னா?'' என்று கேட் டாள் மஞ்சுளா.

''ரொம்பப் பெரிய இடம்'' என்று சொல்லி விட்டுச் சிரித்தார் பத்மநாபன்.

''பெருமாளை விடவா?''

''அப்படின்னா?''

''இனிமே பெருமாளைச் சேவிச்சுண்டு இருக்கப் போ ற தா ச் சொன்னேள்... இப்பொ அந்த முடிவை மாத்திக்கணும்னா, பெருமாளை விடப் பெரிய இடமாத் தானிருக்கணும், இல்லையா?''

பத்மநாபன் புன்னகை செய்தார். சில விநாடிகளுக்குப் பிறகு, அவளைப் பார்க் காமல், மேலே பார்த்துக் கொண்டு சொன்னார்: ''முதல்லே முடியா துன்னுதான் சொன்னேன். அவா கேக்கலை. பழைய ஃபைலையெல்லாம் புரட்டிப் பார்க்கப் போறோம்ங்கிற மாதிரி ஒரு பயத்தை உண்டாக்கிட்டா. அதிகாரம் அவா கையிலே இருக்கு. என்ன செய்ய முடியும்?''

''எனக்கு நீங்க ஒரு காரியம் செஞ்சாக ணும்'' என்றாள் மஞ்சுளா.

பத்மநாபன் சிரித்துக் கொண்டே சொன் னார்: ''ஜெயிலுக்குப் போக அவசிய மில்லாத காரியமா எதைச் சொன்னாலும் செய்யறேன்!''

''ஜெயில்லே இருக்கிறவாளை வெளி யிலே கொண்டு வரணும், அவ்வளவு தான்,'' என்றாள் மஞ்சுளா.

''யாரை?''

மஞ்சுளா சொன்னாள். பத்மநாபன் மோவாயைத் தடவிக் கொண்டே கவன மாகக் கேட்டார்.

பிறகு சொன்னார்: ''சந்தியாகிட்டே அடி வாங்கின அந்த மந்திரிக்கு இன்னிக்கோ நாளைக்கோ சீட்டுக் கிழியப் போறது. அவன் பெரிய இடத்துக்கு வேண்டிய வேற ஒரு இடத்திலேயும் விளையாடப் பார்த்து, மாட்டிண்டு முழிக்கிறான். இன்னிக்குப் 'பேப்பர்'லே வந்திருக்கிற சந்தியா 'ஸ்டேட்மென்ட்' எல்லாம் சேர்ந்துண்டு, அவனை வீட்டுக்கு அனுப்பப் போறது, கவலைப்படாதீங்கோ... ஆனா, சந்தியா

தொடர்ந்து 'தர்ணா' பண்ணிண்டிருந்தான்னா, அவளை யாராலே காப்பாத்த முடியும் சொல்லுங்கோ...''

''இது அவனிடம் பேசி முடிக்க வேண்டிய விவகாரம். அந்த இடத்திலே 'கெமிக்கல் ஃபாக்டரி' கொண்டு வரணும்னு ஒத்தக் கால்லே நின்ன மந்திரி போயிட்டார்னா, இந்தத் திட்டத்தையே கைவிடும்படி உங்களாலே பெரிய இடத்திலே சொல்ல முடியாதா?''

''அதெப்படி முடியும்? நிறையப் பணம் விளையாடியிருக்கு. யார் யார் வாங்கியிருக்கான்னு எப்படித் தெரியும்?''

''அந்த இடத்துக்கு பூமி தோஷமிருக்குன்னு உங்களாலே சொல்ல முடியாதா?''

பத்மநாபன் உரக்கச் சிரித்தார்.

பத்மநாபனுடன் பேசுவது மஞ்சுளாவின் மனத்துக்கு இதமாக இருந்தது. கடந்த சில நாட்களாக ஏற்பட்ட சம்பவங்களின் காரணமாகச் சோர்வடைந்திருந்த மனத்துக்குச் சற்று உற்சாகம் கூட உண்டாயிற்று.

பத்மநாபன் சொன்னார்: ''இது அவ்வளவு சுலபமில்லே. இதிலே 'ரியல் - எஸ்டேட்'காரங்க, கன்ட்ராக்டர்கள், சில 'இன்டஸ்டிரியலிஸ்ட்ஸ்' எல்லாரும் சம்பந்தப்பட்டிருக்காங்க. அவங்க எப்படி 'ரியாக்ட்' பண்ணுவாங்கன்னு தெரியலே...''

''தோஷப்பட்ட பூமியிலே ஒரு 'ப்ராஜெக்ட்' வந்ததுன்னா, பதவிக்கே ஆபத்துன்னு பெரிய இடத்திலே சொன்னேன்னா, அதுக்கப்புறம் ஏது 'அப்பீல்'?'' என்றாள் மஞ்சுளா.



'' 'இட தோஷம்'னு ஒண்ணு நிச்சயமா உண்டு. அக்பர் கட்டின 'பதேப்பூர் சிக்ரி' அவனுக்கப்புறம் ஏன் வனாந்திரமாச்சு? அதே மாதிரி 'கங்கை கொண்ட சோழபுரம்'. இந்த மாதிரி நிறைய அடுக்கிண்டே போக லாம்'' என்றார் பத்மநாபன்.

''இந்த இடத்தைச் சந்தியாவுக்குக் காப் பாத்தித் தந்தேள்னா, அந்த இடத்துக்கே 'பத்மநாபபுரம்'னு பேர் வைக்கச் சொல்றேன்.''

''ஐயய்யோ... அதெல்லாம் வேணாம். அங்கே ஒரு சின்னப் பெருமாள் கோயில் கட்டச் சொல்லுங்கோ, அது போறும்.''

''இதுக்கு அவ சம்மதிக்கிறது சந்தேகம்'' என்றாள் மஞ்சுளா.

''நான் வற்புறுத்தலை; கண்டிஷனும் போடலை. பெருமாளுக்கென்ன, குடியி ருக்க இடமா இல்லை? சரி, நான் வரட்டுமா...?''

பத்மநாபன் போன பிறகு, மஞ்சுளா மூர்த்திக்குப் ஃபோன் செய்தாள்: ''மஞ்சுளா பேசறேன். நான் ஒத்தர்கிட்டே சொல்லியிருக்கேன். சந்தியா ஜாமீன்லே வெளியே வரது மட்டுமில்லே; அவ எடுத் துண்ட பிரச்னையே தீர்ந்துடும்னுதான் தோணறது...''

''அப்படியா? வாட் அபௌட் சாவ்லா?''

''அவர் சுடப் போறேன்னு பயமுறுத்தி யிருக்கார். அதனாலே அவரைப் பத்தி என்னாலே ஒண்ணும் சொல்ல முடியாது.''

''தாங்க்யு... ஹௌ ஈஸ் துருவ்?''

''ஃபைன்... சரி, நான் ஃபோனை வச்ச டட்டுமா?'' என்று சொல்லிக் கொண்டே 'ரிஸீவரை'க் கீழே வைத்தாள் மஞ்சுளா.

மாடியில் இசை நின்றிருந்தது.

அவள் மாடிக்குச் சென்று, துருவ் அறைக் கதவைத் தட்டினாள்.

துருவ் கதவைத் திறந்தான்.

அவன் தலை கலைந்திருந்தது. முகத்தில் அசாதாரணமான பிரகாசம். கண்கள் மின் னின. அவன் தோற்றத்தில் தெரிந்த இந்தத் திடீர் மாற்றத்துக்கு அவளுக்குக் காரணம் தெரியவில்லை.

''உன் முகத்தில் அதீதப் பிரகாசம் தெரி கிறது,'' என்றாள் மஞ்சுளா ஆங்கிலத்தில்.

''யோகம்.''

''யோகமா?''

''ஆமாம்... மூணு நாள் யோகம். எனக்குத் தெரிஞ்ச யோகம் இதுதான்... நான் பண்ண தப்புக்குப் பிராயச்சித்தம்... கோமளா செத்துப் போயிருக்கலாம். அது 'பிஸிகல் டெத்'... ஆனா அவ மானசிகமா என் பக்கத்திலே உட்கார்ந்துண்டு என் சங்கி தத்தை ரஸிச்சுண்டிருக்கா... ஐ கில்ட் ஹர் ஃபிஸிகலி டு மேக் ஹர் ஸ்பிரிச்சுவலி அலைவ்! எஸ்... எஸ்... கோமளா இங்கேதான் இருக்கா...''

மஞ்சுளா அவனையே சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். இவ னுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? நினைக்கும்போதே, அவள் இருதயம் நின்று விடும் போலிருந்தது.

''கோமளாவை நீ கொல்லலே. அவதான் தற்கொலை செஞ்சுண்டா...''

''நோ. நோ.. நோ... நான்தான் கொன்னேன். ஆனா அது முக்கியமில்லே, இப்போ அவ உயிரோடிருக்கா...''

''உனக்கு இன்னொன்னு தெரியுமா?''

''என்ன?''

''அவ செத்துப் போற போது 'உண்டா' யிருந்தா. இது போஸ்ட்மார்ட்டம் ரிப் போர்ட்.''

துருவ் முகத்தில் எந்தவிதச் சலனமு மில்லை. கைகளைக் கட்டிக் கொண்டு ஆடாமல் அசையாமல் நின்றான்.

இது அவனுக்குத் தெரிந்ததுதானா? மஞ்சுளாவால் ஊகிக்க முடியவில்லை. தான் இதை அவனிடம் இப்பொழுது சொல்லியிருக்க வேண்டாமோ... இச் செய்தி அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்குமோ?

''குற்ற மனப்பான்மைதான் அந்தப் பெண்ணைத் தற்கொலைக்குத் தூண்டி யிருக்க வேண்டும்'' என்றாள் மஞ்சுளா.

''என்ன குற்றமனப்பான்மை?'' என் றான் துருவ்.

''இப்பொழுது நான் சொன்ன செய்தி.''

''சடகோபனைப் போல் நீயும் என்னை ஆண்மை இல்லாதவனென்று நினைக்கி றாயா?'' என்றான் துருவ்.

(தொடரும்)

* * * * * * *

குவிஸ்
விடைகள் :

1. நேருஜிதான்
2. குல்சாரிலால் நந்தா
3. சரண் சிங்
4. நாற்பது
5. ராஜீவ் காந்தி
6. இந்திரா காந்தி
7. நேரு, சாஸ்திரி, இந்திரா காந்தி

தொகுப்பு : மௌஷ்மி

வட்டமேஜை

தலைப்பை நிஜமாக்கி விட்டீர்கள்!

✦ இந்த வாரம் உங்களின் தலையங்கம் பார்த்தேன். சென்ற தேர்தலில் பாரதிய ஜனதா பெற்ற வோட்டுக்கள் வி. பி. சிங்கின் தலைமையி லான ஜனதா தளத்தின் ஆதரவால் கிடைக்கப் பெற்றது. இன்றைய நிலையில் நீங்கள் எழுதுவது போல காங்கிரஸ் Vs பாரதிய ஜனதா என்பது ஒரு சில வக்ரபுத்திகளின் கணிப்புத்தான். தேர்தல் முடிவு கள் வரட்டும். பாருங்கள். ஜனதா தளத்திற்கு அரு கில் நெருங்க முடியாத அளவுக்குக் குறைச்சலான எம். பி.க்களே பாரதிய ஜனதாவில் இருப்பார்கள்!

திருப்பரங்குன்றம், ஏ. பிள்ளை ராஜா.

✦ கறுப்பாக இருக்கும் ஒரு பொருளைக் கம்பளி என்று ஆசைப்பட்டு எடுக்க, அது கரடியாக எழுந்து நின்றால் எப்படி இருக்கும்? உங்கள் தலை யங்கத்தில் குறிப்பிட்டது போல் தான் இந்தத் தேர்தலில் வாக்காளரின் நிலை இருக்கும்.

கோவை - 45, போத்தனூர் புலிச்சோழன்.

✦ இந்த இதழ் எங்களிடம் வரும் போது தேர்தல் கிட்டத்தட்ட முடிந்திருக்கும் என்று தலையங்கம் எழுதி இருந்தீர்கள். ஆனால், தேர்தல் முடிய வில்லை. தேர்தலுக்கு நின்றிருந்த ராஜீவ் காந்தியின் வாழ்க்கைதான் முடிந்தது. 'நிலையான ஆட்சி தருவேன்' என்ற நாயகனின், வாழ்வு கூட நிலை யாமல் போய் விட்ட அவ லத்தைக் கண்டு கலங்கி நிற்கிறோம்!

பெங்களூர், என். கே. ஈசுவரி.

✦ 'வயித்துலே வளர்ற அவர் குழந்தைக்கு அப்பா யார்னு கேட்டா, காட்டறதுக்கு அவரோட நிழலாவது வேணுமே!' என்ற வசுமதியின் வார்த்தைகளை 'நம்பிக்கை' சிறுகதையின் இறுதி வரியாக்கி இதயத்தை உருக்கி விட்டார் திரு வையாறு பாலுசாமி!

சென்னை - 14, அய்யாறு. எஸ். வாசுதேவன்.

✦ பெண் இனத்திற்கே பெருமை சேர்க்கும் 'சிவகளை' கிராமத்தைப் பற்றிப் படித்த போது மகிழ்ச்சியால் மனம் பூரித்தது. நம் தமிழ் நாட்டில் இப்படியொரு கிராமம் இருப்பது தமிழ்ச் சமு தாயத்திற்கே பெருமைதான். தமி ழகம் முழுமையும் 'சிவகளை'யாவது எப் போது?

கும்பகோணம், எஸ். மங்களம்.

✦ மருத்துவம், அந்திய மோகம், ஆசிரியப் பணி... பற்றிய மாணவ மணிகளின் முத்தான மூன்று கட்டுரைகளும் அருமை! ஒவ்வொரு இந்திய மாணவனும் இவ்வாறு எண்ணிச் செயல் பட ஆரம்பித்து விட்டால், பாரதம் உன்னத நிலைக்கு உயருவது நிச்சயம்.

கும்பகோணம், பால. கிருஷ்ணமூர்த்தி.

✦ சிஷபனின் ''இருப்பிடம்'' அருமை. சிக்கல் ஏற்பட்ட நூலை அறுபடாமல் மிகக் கவனமாகப் பிரித்தெடுப்பது போலக் கணவன் - மனைவிக்குள் ஏற்படும் ஊடல் எவ்வாறு எவ்வித பாதிப்புமின்றித் தீர்க்கப்படவேண்டும் என்பதை மிக அற்புதமாய்ச் சித்திரித்திருந்தார்.

திருச்சி - 16,

ஜானகி மைந்தன் எஸ். ராஜகோபால்.

✦ தன்னம்பிக்கையற்று, விரக்தியுடன் வாழ்ந்து வரும் இன்றைய இளைஞர் சமுதாயத்திற்குத் தக்கதோர் ''கலங்கரை விளக்கமாகும்'' தண்டபாணியின் வாழ்க்கை!

கும்பகோணம், கே. என். பாலகிருஷ்ணன்.

✦ ''தோல்வியின் விளிம்பிலிருந்து 'வெற்றி மகுடம்' வரை...'' கட்டுரை அருமை. இது போன்ற கட்டுரை என்போன்ற இளைஞர்கள் 'முயன்றால் முடியாதது ஏதுமில்லை' என்ற தாரக மந்திரத்தைக் கொண்டு மேன்மேலும் முயன்று வெற்றி பெறு வதற்கு ஊக்கமாக இருக்கும். நன்றி.

தி. வெ. நல்லூர், எஸ். தமிழன்பன்.

✦ தேர்தலில் போட்டியிட விரும்புபவர்கள் இனி பல விஷயங்களைத் தேடி அலைய வேண்டிய அவசியமே இல்லை! தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி எம். ரகுபதியின் இரண்டு பக்க ஆலோசனைகளைப் பத்திரப்படுத்தி விட்டாலே, போதுமானது!

கும்பகோணம், புலவர். எஸ். கே. மூர்த்தி.

✦ விகவின் அட்டைப் படத்தைப் போட்டு, உள்ளே 'டிரெயிலர்' என்ற பெயரில் எங்களை ஏமாற்றி அவருடைய தொடரின் 'தலைப்பை' நிஜ மாக்கி விட்டீர்கள்!

சிங்கிலிப்பட்டி, சா. விஜயன்.

✦ அபர்ணா நாயுடுவின் 'உள் மனிதர்கள்' சிறுகதையினைப் படித்த போது தீவிரவாதிகள் என்னும் கொடூரர்களால் நம் தேசத்தில் நிகழ்த்தப்பட்ட அக்கிரமச் செயல்களே நினைவில் எழுந்தன. சம்பவம் (ராஜீவ் கொலை) நடந்த அதே வாரத்தில் இக் கதையும் பிரசுரமானது வியப்பே!

காட்டூர், எஸ். அருள்மொழி.

● 'மத்யமர்' சிறுகதை களுக்குக் கல்கியில் விமர்சனம் எழுதிய கல்கி வாசகர்கள், குமரிப் பதிப்பகம், 8, நீலா தெற்கு வீதி, நாகப் பட்டினம் - 611 001 - இவர்களுக்கு முகவரியுடன் எழுதினால் புத்தகத்தின் பிரதி அனுப்பப் படும்.



- சுஜாதா.



இளமைப் பருவம் என்பது ஓர் இனிமையான பருவம்! எத்தனை விஷயங்களைத் திணித்தாலும் ஏற்றுக் கொள்ளும் பகாசுரப் பருவம்! அதை வீணடித்தவர்களில் நானும் ஒருவன் என்பதே போன வாரம் நான் சொன்ன சிதம்பர ரகசியம்.

வெறும் எஸ். எஸ். எல். ஸி. பதினொரு வருடங்களை வீணாக்கி விட்டேன். வாழ்க்கையின் மூன்றில் ஒரு பகுதி கரைந்து விட்டது. ஆம். இருபது வயதில் நான் ஒரு மண்டுவாக என் கண்களுக்கே தெரிந்தேன். 1963 ம் வருடம் முதன் முதலாக மாதச் சம்பளமாக ரூ. 50/- பெற்றேன்.

கால்கள் துறுதுறுத்தன! கைகள் படபடத்தன! இதயம் துடித்தது! அடுத்த பதினைந்து வருடங்கள் அசுர ஓட்டம் ஓடியாக வேண்டும். இருபது வரை விட்டதையும் சேர்த்து முப்பத்தைந்துக்குள் பிடித்தாக வேண்டும்.

1981 ல் 'மணல்கயிறு' படத்தில் பார்த்த 'விசு' வெறும் நிழல்தான். அதற்கான நிஜம் 1963 ல் புறப்பட்டு விட்டது. நீநீநீநீண்ட பயணம்.

எத்தனை புத்தகங்கள்! எத்தனை முயற்சிகள்! எத்தனை வெற்றிகள்! எத்தனை தோல்விகள்!

மனித முயற்சிக்கு ஈடு இணையே கிடையாது என்பதை உணர்ந்தேன். எனக்குள் ஒரு பொறுப்புள்ள மனிதன் விஸ்வரூபம் எடுப்பதைக் கண்கூடாகக் கண்டேன். தூங்கிய இரவுகளை விரல் விட்டு எண்ணிவிடலாம். டிராவல் ஏஜன்ஸியில் எக்ஸிகியூடிவ் பதவி வரை சென்று, பல வெளிநாடுகளைச் சுற்றினேன். தமிழக மேடைகளில் கதாசிரியனாக, இயக்குனனாக, நடிகனாக வலம் வந்தேன். தொழில் கல்வியிலும் தேர்ச்சி பெற்றேன். ஜெர்மனி நாட்டில் டிப்ளமா பட்டம் பெற்றேன். ''முயற்சி'' என்பது தான் நிஜம். 'வெற்றி' என்பது அதன் நிழல்தான் என்பதை உணர்ந்தேன்.

இன்று நான் ஒரு திரைக்கதை ஆசிரியர், நடிகர், இயக்குனர். ''இயக்குனர்'' என்பதால் யூனிட்டில் பெருமை. ''நடிகன்'' என்பதால் மக்களிடம் பெருமை. 'கதாசிரியன்'' என்பதுதான் எனக்குப் பெருமை. ஆத்ம திருப்தி.

அன்று முதல் இன்று வரை கதையில் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய ஏதாவது ஒரு நல்ல கருத்தைச் சொல்லியாக வேண்டும் என்பதை விடாப்பிடியாக, உடும்புப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். ஆதலால்தான் தாய்க்குலத்திற்கு என்னைக் கொஞ்சம் கூடவே பிடிக்கிறது.

விசு

மெட்டியுடன் போனவள் பெட்டியுடன் திரும்பிய கதை!

நாடகம் போட்ட நாட்களில் நடந்த ஒரு சுவாரஸ்யமான நிகழ்ச்சியைச் சொல்கிறேன். ''அவர்களுக்கு வயது வந்து விட்டது'' என்ற நாடகம். நூறு முறைக்கு மேல் மேடையேறிய நாடகம்.

கதைப்படி கதாநாயகன் ஒரு கன்சல்டன்ட். நொடிப் பொழுதில் அடுத்தவர் பிரச்னையை அலசித் தீர்வு காண்பவன். அந்த இளைஞனுக்கே ஒரு பிரச்னை! அவனது புது மனைவிக்கு ஒரு பயம். தன் தாய் பிரசவத்தில் இறந்ததைக் கண்கூடாகப் பார்த்தவள். ஆகவே தன் வாழ்வில் பிரசவத்தையே சந்திக்கப் பயப்படுகிறாள். உடல் உறவையே வெறுத்து ஒதுக்குகிறாள். விஷயம் விவாகரத்து வரை போகிறது. யாருக்கும் ஒன்றும் புலப்படவில்லை. அடுத்தவரிடம் சொல்ல அந்த ''தான்'' என்ற கர்வம் படைத்த (Egoistic) இளைஞனுக்கு வெட்கம், லஜ்ஜை. கடைசியில் அவன் பட்டிக்காடு, பஞ்சாங்கம், பேசத்தெரியாதவன், என்று வெறுத்து ஒதுக்கிய அண்ணி விஷயத்தை மோப்பம் பிடித்து விடை காண்கிறாள்! இந்த உலகத்தில் யாரையும் கேவலமாக நினைக்கக் கூடாது என்று கதாநாயகன் புரிந்து கொள்கிறான். அவனுக்கு நான் வைத்த பெயர் ''நாகேஷ்.'' மறுபடியும் சொல்கிறேன், அந்தப் பாத்திரத்தின் பெயர் ''நாகேஷ்''.

அந்த நாடகம் நடந்து முடிந்து அடுத்த வருடம் வேறொரு நாடகத்துக்காகக் குழுவினருடன் கோவை செல்ல சென்டிரலில் வண்டி ஏறினோம். கார்டு துணியை ஆட்டுவதற்கு முன்னே துணியை விரித்து விடும் எங்கள் குழு. சீட்டாட்டத்துக் குத்தான். இறங்க வேண்டிய இடத்தில் போர்ட்டர் பெட்டியையெல்லாம் இறக்கி வைத்து, வண்டி மூவ் ஆகும் போது கூட கடைசி ரவுண்டு ரம்மி போகும். சீட்டைக் கையில் பிடித்துக் கொண்டே இறங்கி ஸ்டேஷனில் ஆட்டத்தை முடித்த வரலாறும் உண்டு. எல்லாம் ஒரு ஜாலி தானே!

அன்று ஸ்டேஷனில் ஓர் இளைஞரும் எங்கள் பெட்டியில் ஏறினார். எங்களுக்கு முன்பின் அறிமுகம் இல்லாதவர். ''சாரி சார். இது ரிசர்வ்ட் கம்பார்ட்மென்ட்'' என்றேன்.

''தெரியும் மிஸ்டர் விசு! ஒரு ஆத்ம திருப்திக்காக இந்த கம்பார்ட்மென்டில் ஏறினேன். ஜோலார்ப்பேட்டையில் இறங்கி என் கம்பார்ட்மென்டுக்குப் போய் விடுகிறேன். பிளீஸ் பர்மிட் மீ'' என்றார்.

பெரம்பூர்... கொரட்டூர்... அம்பத்தூர்... ஆவடி... வண்டி பறந்து கொண்டிருந்தது. என் மனம் சீட்டாட்டத்தில் லயிக்கவில்லை. அந்த இளைஞரையே நோட்டம் விட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் அவரோ சீட்டாட்டத்தையும் பார்க்காமல், எங்கள் குழுவின் லேடி ஆர்ட்டிஸ்ட்களையும் பார்க்காமல், (அவர்கள் சற்று பார்க்கும்படி இருப்பார்கள்) வைத்த கண் வாங்காமல், இமை மூடாமல் சற்று கலங்கிய விழிகளுடன் என் தம்பி 'கிஷ்மூ'வையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

எனக்குப் பொறுக்கவில்லை. அந்த இளைஞரிடம் சென்றேன். ''சாரி சார் நீங்கள் எனக்கு வித்தியாசமாகத் தென்படுகிறீர்கள். நீங்கள் யார், எதற்காக எங்கள் கம்பார்ட்மென்டில் ஏறினீர்கள் என்று தெரிந்து கொள்ளலாமா?'' என்றேன்.

அவர் ஜோலார்ப்பேட்டை வரை என்னிடம் பேசினார். அதன் கருத்தை எழுதுகிறேன்:

பெற்றோரை இழந்த அவர், தன்னை விட மூன்று வயது இளையவளான தன் தங்கைக்குப் பொறுப்புடன் திருமணம்



செய்து வைத்திருக்கிறார். மெட்டியுடன் போன பெண் மூன்றாவது மாதத்தில் பெட்டியுடன் திரும்பி இருக்கிறாள். காரணத்தை அ வ ளு ம் சொல்லவில்லை; மைத்துனனிடமிருந்தும் அ றி ய முடியவில்லை. மூன்று மாதங்கள் வருத்தம் தாங்காமல் தவித்திருக்கிறார். பிறகு, தன் நண்பர் ஒருவர் வற்புறுத்தியதின் பேரில் ஒரு மன மாறுதலுக்காக என்னுடைய ''அவர்களுக்கு வயது வந்துவிட்டது'' நாடகத்தை மியூசிக் அகாடமி ஹாலில் பார்த்திருக்கிறார்.

நாடகம் அவரைத் திடுக்கிடச் செய்து விட்டது. ஒரு வேளை தன் தங்கைக்கும் தன் மைத்துனருக்கும் தாம்பத்ய வாழ்க்கையில் சிக்கல் இருக்குமோ? வயது வந்த பெண்ணிடம் எப்படி இதை விசாரிப்பது?

மறுநாள் பார்த்தசாரதி சாமி சபாவில் நாடகம். தன் தங்கையை நாடகம் பார்க்க வற்புறுத்தி அழைத்து வந்திருக்கிறார். நாடகம் முடிந்த பின்பு தங்கை ஏதாவது பேசுவாள் என்று எதிர் பார்த்தவருக்கு ஏமாற்றம்தான். மறுநாள் காலையிலும் பேசவில்லை. ''என்னம்மா உனக்கு நாடகம் பிடிச்சிருந்துதா?'' - மெதுவாகப் பேச்சை ஆரம்பித்து இருக்கிறார். அவள் வாயைத் திறக்கவேயில்லை!

மனிதர் ஓரிரு தினங்கள் யோசித்துவிட்டு மதுரைக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார். அங்குதான் மைத்துனர் வீடு. அவரையும் இந்த நாடகத்தைப் பார்க்கச்செய்து விட வேண்டும் என்று திட்டம்.

அவருடைய அதிர்ஷ்டம் அன்று எங்கள் ''அவர்களுக்கு வயது வந்து விட்டது'' நாடகம் மதுரையில் நடக்கிறது! போஸ்டரைப் பார்த்ததும் மனிதருக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

மைத்துனர் வீட்டில் அவருக்கு வரவேற்பு அவ்வளவு சரியாக இல்லை. எனினும் கௌரவம் பாராமல் அவருடன் ஏதேதோ பேசி, எப்படியோ அவரை நாடகத்துக்கு அழைத்து வந்திருக்கிறார். நாடகம் முடிந்ததும் மைத்துனர் வீட்டுக்குச் செல்லாமல், தான் தங்கியிருந்த அறைக்கு அவரை அழைத்துப் போயிருக்கிறார். அங்கு சென்றதுதான் தாமதம், ''ஓ'' என்று புலம்பி இருக்கிறார் மைத்துனர்! ''அதில்'' தான் ஏதோ சிக்கல் போலும்!

ஊரிலிருந்து பெரியவர்கள் வரவழைக்கப்பட்டு, விஷயம் விளக்கப்பட்டு, இன்று புருஷனும் மனைவியும் சந்தோஷமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு குழந்தை கூடப் பிறந்து இருக்கிறது.

''அந்த நாடகத்தில் கதாநாயகன் வேஷம் போட்ட 'கிஷ்மூ'தான் என் தங்கையின் வாழ்க்கைப் பிரச்னை எனக்குப் புரியக் காரணமாக இருந்தார். அதனால் தான் அவரை நன்றியுடன் ரசித்துக் கொண்டிருந்தேன் மிஸ்டர் விசு'' என்று கதையை முடித்தார் அந்த நபர்.

ஜோலார்ப்பேட்டை ஸ் டே ஷ னி ல் இறங்கி, தம் கம்பார்ட்மெண்டுக்குப் போகத் தயாராக இருந்தவரிடம், நான் கேட்டேன்: ''குழந்தை பொறந்திருக்குன்னு சொன்னீங்களே ஆணா? பெண்ணா?''

''ஆண்தான் மிஸ்டர் விசு. குழந்தைக்கு நான்தான் பெயர் வைத்தேன். என்ன பெயர் தெரியுமா? ''நாகேஷ்''!

மனிதர் இறங்கிச் சென்று விட்டார். ''யோவ் நாகேஷ் என்பது ஒரு கதாபாத்திரம் தான்யா. அது வெறும் 'நிழல்' தான். அதை உருவாக்கிய 'நிஜம்' விசு. 'விசு' என்ற பெயரை வைக்காமல், 'நாகேஷ்' என்ற பெயரை வைச்சிருக்கியே! நிஜத்தை ரசிக்காமல் நிழலை ரசிக்க இருக்கியே! நிஜத்துக்கு நன்றி சொல்லாமல் நிழலுக்கு நன்றி சொல்லி இருக்கியே!'' என்று நான் மனக்குள் புலம்பியது அவருக்கு எப்படிக் கேட்கும்?

(நிழல்கள் தொடரும்)



''இந்த வருஷம் பாஸ் பண்ணி விட்டாயா?''
''போன வருஷம் மாதிரிதான்.''
''போன வருஷம் பாசா?''
''அதுக்கு முந்தின வருஷம் போலத்தான்.''
''அந்த வருஷம் எப்படி?''
''இந்த வருஷம் போலத்தான்!''

- நல்லாலம் காசிதாசன்



சினிமாவில் பாட்டுக்கள் குறைந்தது ஏன்?

50



''என்ன ஓட்டலப்பா, இது... இட்லி ஒரே அரிசி மயமாக இருக்கு! ஒழுங்கா அரைச்சிருக்கக் கூடாதா?''

'' 'உங்களை மாதிரி சாப்பிட' வர்றவங்க அரைச்சதுதானே, சார்? அட்ஜஸ்ட் பண்ணிக்குங்க!''

- ஏ. ஆர் . சலீமா, பள் ளப் பட் டி.

★ ★ ★ ★ ★

O மெடிக்கல் ரெப்ரசென்டேடிவ்வாக வேலை பார்க்கும் என் நண்பன், சமீபத்தில் ஒரு டாக்டரைப் பார்க்கச் சென்றான். நோயாளிகள் யாரும் இல்லாமல் ஈ ஓட்டிக் கொண்டிருந்த டாக்டர், இவன் கொடுத்த கார்டைக் கண்ட பின்பும் நீண்ட நேரம் கூப்பிடவில்லை.

எரிச்சல் அடைந்த என் நண்பன், டாக்டரின் உதவியாளரைக் கூப்பிட்டு, ''எங்கள் கம்பெனி ஒரு கார்டுக்கு இருபத்தைந்து பைசா செலவு செய்கிறது! இஷ்டம் இருந்தால் கூப்பிடச் சொல்லு. இல்லாட்டி கார்டைத் திருப்பிக் கொண்டு வா'' என்றான்.

டாக்டர் கோபமடைந்து, உதவியாள ரிடம் ஒரு ரூபாய் கொடுத்து, என் நண்ப னிடம் கொடுக்கச் சொன்னார்.

பணத்தைப் பெற்றுக் கொண்ட என் நண்பன் மேலும் மூன்று கார்டுகளைக் கொடுத்து, ''சில்லறை என்னிடம் இல்லை. கார்டுகளை டாக்டரிடம் கொடு'' என்றான்.

டாக்டர் இதைக் கேட்டுச் சிரித்து விட்டு நேரில் வந்து என் நண்பனை உள்ளே அழைத்துச் சென்றார்!

- ஆர் . ராமரத் தினம் , சாளபுரம் .

★ ★ ★ ★ ★

இன்ஸ்பெக்டர்: என்னது! வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி இந்த ஐந்நூறு ரூபாயைச் சம்பாதிச்சயா? அதெப்படி?

திருடன்: திருடப் போன இடத்தில் கூச்சல் போடாமல் இருக்கிறதுக்காகச் சில பேர் வாயைக் கட்ட வேண்டியிருந்தது; சிலரைத் தூணோடு சேர்த்துக் கட்டும் போது அவங்க வயிற்றைச் சுற்றிக் கட்ட வேண்டியிருந்தது.

- எஸ் . நீலா ஈஸ் வரி, பந் தல் குடி.

★ ★ ★ ★ ★

O ஆசிரியர் ''பெண் சுதந்திரம்'' என் னும் தலைப்பில் விளக்கிக் கொண்டி ருக்கும் போது, ''பெண்கள் நெருப்புப் போன்றவர்கள்'' என்று குறிப்பிட்டார்.



உடனே ஒரு மாணவன், ''அதனாலதான் ஆண்கள் அடிக்கடி 'அணை'க்கிறார்கள் போலிருக்கிறது!'' என்றதும், சிரிப்பு மத்தாப்பு வகுப்பறை எங்கும் மின்னியது!

- கணேசன் , கடையநல் லூர் .

★ ★ ★ ★ ★

''அந்தக் கால சினிமாக்களில் 30, 35 பாட்டுகள் இருக்கும். இந்தக் கால சினிமாவிலோ ஐந்தாறு பாட்டுகள் மட்டுமே இருக்கின்றன. இதிலிருந்து என்ன தெரியுது?''

''அந்தக் காலத்தில் சினிமா ரசிகர்கள் நிறையப் புகை பிடிப்பார்கள் என்று தெரியுது!''

- ரா. ரகோத் தமன் , சென் னை - 33.

அம்மா சம்மதிப்பாளா?

மாதவன் அன்று மாலை ஐந்து மணிக்கெல்லாம் ஆபீஸிலிருந்து திரும்பி விட்டான். எப்போதும் அவன் தன் நண்பர்களுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்து விட்டு, ஏதாவது ஆங்கிலப் படத்தைப் பார்த்து விட்டு, வீடு திரும்பும் போது, மணி ஒன்பதைத் தொட்டு விடும்.

''என்னடா இத்தனை சீக்கிரம்? உடம்புக்கு ஒன்றும் இல்லையே!'' - என அக்கறையுடன் விசாரித்தார் அவன் அப்பா கேதாரி.

''இல்லையப்பா... இன்னைக்கு வெள்ளிக்கிழமை இல்லையா? மீனாட்சி கோவிலுக்குப் போகலாம்னு கொஞ்சம் சீக்கிரமா...''

கேதாரி அசந்து போனார்.

''நீயா? கோவிலுக்கா? விசாலம், மாடியில் ஏதாவது காயப் போட்டிருந்தால் உள்ளே எடுத்து வை. உன் பிள்ளை கோவிலுக்குப் போகப் போகிறானாம்... நிச்சயம் மழை கொட்டோகொட்டென்று கொட்டப் போகிறது'' எனக் கேலி செய்தார்.

''அப்படியா? ஏண்டா, நிஜமா கோவிலுக்குத்தான் போகப் போறியா?'' எனக் கேட்டாள் விசாலம்.

மாதவனுக்குத் தெய்வ நம்பிக்கை உண்டு. எங்கே போனாலும் விபூதிக் கீற்று இட்டுக் கொண்டு, விநாயகனை வணங்காமல் வெளியில் கால் வைக்க மாட்டான்.

அவனுக்குக் கூட்டம், நெரிசல் என்பது பிடிக்காத விஷயம். ஒருவர் மேல் ஒருவர் மோதிக் கொண்டு வியர்வையில் குளித்து, எம்பி எம்பிப் பார்த்துத் தெரிந்தும் தெரியாமலும் கன்னத்தில் போட்டுக் கொள்வது எல்லாம் கட்டோடு பிடிக்காதவை.

''ஆமாம்.. நீ என்ன பெரிய பண்டார சந்நிதியோ! உன்னைப் பார்த்ததும் அத்தனை பேரும் விலகி வழி விடுவார்களோ'' எனக் கேலி செய்வார்.

மாதவன் தன் அப்பாவின் கிண்டலை லட்சியம் செய்யவில்லை.

''ஆமாம் அம்மா! எனக்கு என்னமோ இன்னிக்குக் கோவிலுக்குப் போகலாமேன்னு மனசிலே பட்டுது. ஆமாம்.. அப்பா! நீங்களும்தான் என்னுடன் வாருங்களேன்'' என அவரையும் கூப்பிட்டான் மாதவன்.

''விசாலம்! என்னாலே இன்னும் நம்ப முடியவில்லை. இவன் நம்ம பையன் தானா? என்னவெல்லாமோ பேசுகிறானே!'' எனப் பயந்த மாதிரி நடித்தார்.

''சின்னப் பிள்ளை மாதிரி என்ன விளையாட்டு? அவன் தான் கூப்பிடுகிறானே.. போய் விட்டுத்தான் வாருங்களேன்!'' என்றாள் விசாலம் தனக்கே உரிய கண்டிப்புடன்.

இருவரும் கோவிலுக்குப் புறப்பட்டுப் போனார்கள். மீனாட்சி மரகதப் பச்சையில் பளபளத்தாள். துர்க்கையை நேரே பார்ப்பது போல, அத்தனை நேர்த்தியாகச் சந்தனக் காப்புச் சார்த்தப்பட்டிருந்தது.

மாதவன் எல்லாச் சந்நிதிகளிலும் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து நமஸ்கரித்தான். தரிசனம் முடிந்தது.

''இங்கே நல்ல காற்று வருகிறது. கொஞ்ச நேரம் உட்கார்ந்திருக்கலாமா, அப்பா?'' எனக் கேட்டான் மாதவன்.

கேதாரிக்குப் புரிந்தது. பையன் ஏதோ பெரிய திட்டத்துடன்தான் அவரை இங்கே கூட்டி வந்திருக்கிறான்.

அவனுக்கு அவரிடம் எப்போதுமே சலுகை உண்டு. அம்மா விசாலம் ரொம்பக் கண்டிப்பு. பள்ளிக்கூடத்திற்குத் தலைமை ஆசிரியையாக இருந்து எல்லோரையும் அதட்டி அதட்டி - அந்தத் துளைத்தெடுக்கும் பார்வையும், கடுகடுத்த முகமும் நிலைத்து விட்டன.

''அப்பா! உங்களிடம் தனியாக ஒரு விஷயம்'' எனத் தயங்கியபடி ஆரம்பித்தான் மாதவன்.

''புரிகிறதுடா மகனே! அந்தப் பெண் யார்?'' எனக் கேட்டார் கேதாரி.

மாதவன் அசந்து போனான். ''எப்படி அப்பா நீங்கள்... நான் ஏதும் சொல்லாமலேயே...?''

''இந்த அறுபதும் ஒரு நாள் இருபத்தைந்தைக் கடந்துதானே வந்திருக்கிறதுடா மடையா!''

மாதவன் எல்லா விவரங்களும் சொன்னான்.

ஒரு வருஷம் முன் அவன் வேலைக்குச்

ஜனனி

சேர்ந்தாள். பெயர் சாந்தா. பாவம், கல்யாணமான ஒரு வருடத்திற்குள் தன் கணவனை ஒரு விபத்தில் பறிகொடுத்து விட்டாள். அவள் கணவன் பார்த்த வேலை, சலுகை அடிப்படையில் அவளுக்குக் கிடைத்தது.

சொந்த ஊரான தஞ்சாவூரில் இருந்தால் தன் மன வேதனை அதிகமாகும் என மதுரைக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு, தன் பெற்றோருடன் வந்து விட்டாள். வயது இருபத்தைந்து. பட்டதாரி. பார்க்க நன்றாக இருப்பாள்.

ஆரம்பத்தில் அவனுக்கு அவள் மேல் ஏற்பட்டது வெறும் அனுதாபம் மட்டுமே. எதிர் எதிர் இருக்கைகளில் அமர்ந்து வேலை செய்ய நேர்ந்த சமயம், ஒரு நட்பு தொடங்கியது. சமீபத்தில் தேக்கடிக்குச் சுற்றுப்பயணம் செய்த போது, அவளோடு தன் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளும் எண்ணம் உதித்தது. இப்போது கொஞ்ச நாட்களாக...

கேதாரி இடைமறித்தார்.

''அவள் இல்லாவிட்டால் வாழ்க்கையே சூன்யமாகத் தெரியுமே. மணந்தால் சாந்தா! இல்லாவிட்டால்...''

''விளையாடாதீர்கள் அப்பா... உங்கள் சம்மதம் கிடைத்த பிறகுதான் அவளிடம் இது பற்றிப் பேச வேண்டும் என்றுதான் இருந்தேன். ஆனால், ஒரு நாள் என் மனத்தை அடக்க முடியாமல் எல்லா வற்றையும் அவளிடம் கொட்டி விட்டேன். அவளும் இப்படி ஓர் எண்ணத்தை வளர்த்துக் கொண்டு இருப்பாள் என எனக்குத் தெரிய வந்தது. அவர்கள் வீட்டில் ரொம்பவும் திருப்தி. தன் மகள் வாழ்க்கையில் மீண்டும் வசந்தம் ஏற்படாதா என ஏங்கிக் கொண்டு இருக்கிறார்கள்.''

கேதாரி அவனை இடைமறித்தார்.

''இவ்வளவுதானே. நேராகப் போய் உன் அம்மாவிடம் போய்ச் சொல்ல வேண்டியது தானே... அவள் சொன்னால் சரிதான். நேராக என்னிடம் வந்தால் எப்படி?'' எனக் கேட்டார் கேதாரி.

''ப்ளீஸ் அப்பா. எனக்கு ரொம்பத் தயக்கமாக இருக்கிறது. அம்மா ரொம்பப் பழைய காலத்து மனுஷி. இந்த முற்போக்கான திருமணத்தைச் சரியான கோணத்தில் பார்ப்பாளோ எனச் சந்தேகமாக இருக்கிறது. முடியாது எனச் சொல்லி விட்டால் அப்புறம் என்னால் ஒன்றும் செய்ய முடியாது.''

''அது சரி... நான் சொன்னால் உன் அம்மா கேட்பாள் என்பது மட்டும் என்ன நிச்சயம்?''

''ஒரு நம்பிக்கைதான். அம்மா உங்க பேச்சுக்குக் கொடுக்கிற மரியாதை எனக்குத் தெரியாதா?''

''பயப்படாதே. சாந்தா உனக்குத்தான். உன் அம்மா மனம் பஞ்சு மாதிரி. நீ அவளிடம் நீயாகச் சொல்லவில்லை என்றால் நொறுங்கிப் போவாள். அவள் மறுத்தால் அப்புறம் நான் பார்த்துக் கொள்கிறேன்!''

''ரொம்ப தாங்க்ஸ் அப்பா!'' என்றான்





"இண்டர்வியூ நடத்தினவங்க அசந்து போகிற மாதிரி பதில் சொன்னியாமே...?"

"லஞ்சம் கேட்டாங்க; மாசா மாசம் கொஞ்ச நாளைக்குச் சம்பளத்துல பிடிச்சுக்குங்கன்னு சொன்னேன்!"

- சீர்காழி வி. ரேவதி

மாதவன்.

அன்றிரவு.

சாப்பாடு முடிந்த பிறகு, விசாலம் பரீட்சை பேப்பர்களைத் திருத்திக் கொண்டிருந்தாள்.

''அம்மா'' என மெதுவாக அழைத்தான் மாதவன்.

''என்ன?'' எனக் கேட்டாள் விசாலம்.

மாதவன் தன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, கடகடவென்று வாய்ப்பாடு ஒப்பிப்பது போல் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லி முடித்தான்.

''நல்ல பெண் அம்மா! நீ பார்த்தால் நிச்சயம் உனக்கும் பிடித்துப் போகும்!''

விசாலம் சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு கேட்டாள்.

''ஆமாம் மாதவா.. நீ என்னிடம் என்ன பதிலை எதிர்பார்க்கிறாய்?''

''மறுக்க மாட்டாய் என்ற நம்பிக்கை தான் அம்மா.''

''நான் எப்படி முடிவு எடுக்க முடியும்? உன் அப்பாவிடம் சொன்னாயா?''

''சொன்னேன். உன்னிடம் முதலில் சொல்லச் சொன்னார்.''

விசாலம் கண்களில் நீர் துளித்தது. தன் அம்மா கலங்கி இதுவரை பார்த்திராத மாதவன் பதறிப் போனான்.

''அம்மா... நான் சொன்னது...''

''எனக்கு இது புதிது இல்லை மாதவா. உன் அப்பா என்னைப் பெண் கேட்ட போது நான் ஒரு விதவைதான்!'' என்றாள்.

மாதவன் அதிர்ந்து போனான்.

''என்ன அம்மா சொல்கிறீர்கள்?''

''ஆமாம். எங்கள் கல்யாணத்திற்கு எத்தனையோ எதிர்ப்புகள். பல லட்சம் ரூபாய்ச் சொத்தை உதறி விட்டு, தன் உத்தியோகத்தை மட்டும் நம்பி, என்னைக் கைப்பிடித்தார்.''

''இதெல்லாம் ஏன் என்னிடம் இதுவரை சொல்லவில்லை?''

''சொல்லக் கூடாதுன்னு அவர் கட்டளை. ஆனால் சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது. நீ ஒரு விதவையை மட்டும்தான் வீட்டுக்கு கூட்டி வருவதாகச் சொல்கிறாய். அவர் ஒரு குழந்தையையும் சேர்த்துக் கூட்டி வந்தார்.''

''அம்மா!''

''ஆமாம் அப்பா! அந்தக் குழந்தை நீதான்! உனக்கு ஒரு வயது அப்போது!'' என்றாள் விசாலம்.

மாதவன் மனத்தில் அதிர்ச்சி, ஆச்சரியம். கேதாரி அவன் அப்பா இல்லையா? அப்படியானால்... அப்பா என்ன பெரிய அப்பா! எந்த அப்பா கேதாரியைப் போல் இத்தனை உயர்ந்த உள்ளம் படைத்திருக்க முடியும்!

கேதாரி அவன் மனத்தில் விசுவரூபமெடுத்து நின்றார்.

ஃபிரிஜ் பரிசு: கூப்பன் நெ. 8

''நேற்று வரை நந்தவனம்'' தொடர்கதையில் இந்த வாரம் வேண்டுமென்றே செய்யப்பட்டுள்ள தவறு என்ன? கவனமாகப் படித்துக் கண்டுபிடித்து இந்தக் கூப்பனில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். இவ்வாறே வாரா வாரம் கூப்பன்களைப் பூர்த்தி செய்து சேகரியுங்கள். கதை முடியும் கடைசி வாரம் 5 - 10 வரி விமர்சனத்துடன் நீங்கள் சேகரித்துள்ள எல்லாக் கூப்பன்களையும் எங்களுக்கு அனுப்புங்கள். மிக அதிகமான அளவில் தவறுகளைக் கண்டுபிடித்துத் திருத்தியிருப்பவருக்கு ஃபிரிஜ் பரிசு! ஆறுதல் பரிசுகளும் உண்டு!

தவறு : ______________________ திருத்தம் : ______________________

கரெண்ட் கட் ஆகி முழுசாக முப்பது நிமிஷம் ஆயிற்று.

எங்கள் வீட்டில் யாரிடமிருந்தும் ஒரு சின்ன முணுமுணுப்புக் கூட வரவில்லை. 'இந்த நாசமாப் போற கரெண்ட் இப்படிப் பழிகொட்டறதே.' என்று பெரியம்மா சாபம் தராமல் வாசல் பக்கம் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தாள்!

மிக்ஸி இயங்காததால் என் மனைவி அம்மிக் கல்லில் 'டர்ர் டர்ர்' என்று இழுத்து எதையோ அரைத்தவாறிருந்தாள். யாருக்குமே மின்சார வாரியத்தின் மீது துளிக்கூடக் கோபம் வராதது ஏன்? வியர்த்துக் கொட்டினாலும் கூட எனக்கும் கோபம் வரவில்லை!

ஏன், உங்களுக்குக் கூடக் கோபம் வராது! என்ன காரணம்? மின்வாரியத்தினர் ஒரு சின்ன வே லை செய்தார்கள். அதனால் நமக்குக் கோ பமே வராமல் போய் விட்டது! அது என்ன வேலை?

பத்திரிகைகளில், ஒரு அறிவிப்புத் தந்து விட்டார்கள். 'இன்னின்ன நேரத்துக்கு,



முன்கூட்டி அறிவிப்பதில் முந்நூறு நன்மைகள்!

இன்னின்ன பகுதிகளில் மின்சாரம் இவ்வளவு நேரத்துக்கு, வராது' என்பதுதான் அந்த அறிவிப்பு!

''எப்பப் பாரு பவர் கட், சே! அக்கிரமம்'' என்று என் மனைவி கத்தவில்லையென்றால் காரணம் இந்த அறிவிப்புத்தான். ''அவர்கள்தான் சொல்லி விட்டார்களே'' என்று சமாதானப்படுத்திக் கொண்டாள்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? எந்த இடைஞ்சல் வேணுமானாலும் ஏற்படுத்தலாம். ஆனால் அதை முன்கூட்டியே சொல்லி விடவேண்டும்!

பால் சப்ளையை எடுத்துக் கொள்ளுங்கள். ''நாளைக்குப் பால் வராது; வருந்துகிறோம்'' என்று ரேடியோ மூலமோ டீ.வி. மூலமோ அறிவித்து விட்டால் பொது மக்கள் மறுநாள் பால் வராததற்குத் திட்டுவதில்லை. ''அதுதான் நேற்றே சொல்லி விட்டானே?'' என்று கூறியபடி செம்பைத் தூக்கிக் கொண்டு தெருத் தெருவாகப் பால்காரனைத் தேடி அலைவார்கள்.

'புதன் கிழமை கடை அடைப்பு' என்றால் திங்கட் கிழமை சொல்லி விடுகிறார்கள். எல்லாரும் புதன் கிழமையன்று சந்தோஷமாக இருக்கிறார்கள்.

'ஆட்டோ நாளை ஓடாது' என்று தார் ரோடுகளில் முதல் நாளே எழுதி விட்டால் மறுநாள் பொது மக்கள் ஆட்டோ ஓடாத இடையூறை இடையூறாக நினைப்பதில்லை. (பிரசவத்துக்குப் போகிற பெண் கூட நடந்தே போய் விடுகிறாள் ஆஸ்பத்திரிக்கு!)

ஆக, தத்துவம் என்னவென்றால், 'முன்கூட்டியே மனிதனைத் துன்பத்துக்குத் தயார்ப்படுத்தி விடு; துன்பம் வரும் போது அவன் சந்தோஷப்படுவான்!'

இந்த முன்கூட்டியே சொல்லி விடும் உத்தியை அரசு ஏன் எல்லாத் துறைகளிலும் பயன்படுத்தக் கூடாது?

உதாரணமாக - விலைவாசி.

அரிசி அடுத்த மாதம் 7ஆம் தேதியிலிருந்து கிலோ 10 ரூபாய்க்கு விற்கும் என்று இந்த மாதமே சொல்லி விடலாம். விலை உயரும் போது ஒரு முணுமுணுப்பு இராது. ''தெரிந்த கதைதானே'' என்பார்கள்.

''பாமாயில் அடுத்த மாதம் தட்டுப்பாடு ஏற்படும்.சப்ளை இராது.''

''கல்லூரியில் அட்மிஷன் இந்த ஆண்டு மகாக் கடினமாக இருக்கும். பி. காம்., ஸீட்டை நினைத்துக் கூடப் பாராதீர்கள்...'' இப்படியெல்லாம் முன்கூட்டியே அறிவித்து விட்டால் அப்புறம் யாரும் எரிச்சல் படவே முடியாது. ''எத்தனை கரெக்டா நிலைமையை அளந்து சொல்லிட்டான் பார்த்தீங்களா!'' என்று பாராட்டுவார்கள்!

என் மூன்றாவது வீட்டில் ஒரு முரட்டுப் பேர்வழி இருக்கிறார். அவர், ''சார், நான் முன்கோபக்காரன். கன்னாபின்னாவென்று பேசிடுவேன்,'' என்று அடிக்கடி சொல்லிக் கொள்வார்.

அதனால் அவர் கோபப்படும்போதெல்லாம் 'சே! இந்த ஆசாமி அநாகரிகமாக அப்படிப் பேசி விட்டாரே' என்று யாரும் அங்கலாய்க்க மாட்டார்கள். தப்பித் தவறி இவ்வாறு யாராவது முணுமுணுத்தாலும் உடனே அவர் மனைவி, ''என் வீட்டுக்காரர்தான் வெளிப்படையாச் சொல்லியிருக்கிறாரே, 'நான் முன்கோபக்காரன்' என்று! அப்புறம் எதுக்கு முணுமுணுக்கணும்?'' என்பாள்.

இப்போதெல்லாம் குழாயில் தண்ணீர் வரவில்லையென்றால் யாரும் கவலைப் படுவதே இல்லை. ''அதுதான் முன்னாலேயே சொல்லி விட்டார்களே, ஒருநாள் விட்டு ஒருநாள்தான் தண்ணீர் என்று!'' - இப்படி எண்ணிச் சமாதானமடைந்து விடுகிறோம்.

மருந்துகளில் கூட, ''இது சில பேருக்கு அலர்ஜியாகி ஆபத்து ஏற்படும்'' என்று முன்கூட்டியே எழுதி வைத்து விடுகிறார்கள்! மருந்தைச் சாப்பிட்டு யாராவது மண்டையைப் போட்டால் கூட ''முன்கூட்டியே தெரிவித்திருக்கிறோமே'' என்று சொல்லித் தப்பித்துக் கொள்வார்கள்.

இப்படி முன்கூட்டியே எல்லாம் தெரிவிப்பது பற்றி எனக்கிருக்கும் ஒரே ஒரு ஆசையை முன்கூட்டியே சொல்லி இந்தக் கட்டுரையை முடிக்கிறேன்! அதாவது, டீ.வி.யில் சில நாடகங்கள் ஆரம்பமாகு முன்னர் ''இந்த நாடகம் கொஞ்சம் கழுத்தறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது'' என்பதாக ஓர் அறிவிப்புப் போட்டு விட வேண்டும். இந்த அறிவிப்பின் பலனாக, டீ.வி. பார்ப்பவர்கள், 'எதிர்பார்த்த அளவுக்கு போர் இல்லை' 'பயந்த அளவுக்கு மோசமில்லை' என்றெல்லாம் பேசத் தொடங்க, டீ.வி. நாடகங்களுக்கு நல்ல பெயரே கிடைத்து விடும்!

கோர்டன், கோவிந்தன் ஆனால்...!

கென்னடி - ஜான்ஸன் காலத்தில் அமெரிக்காவில் பட்ஜெட் இயக்குனராகச் செயல்பட்டவர் கெர்மிட் கோர்டன். இவரைப் பற்றி ஒரு வேடிக்கையான உண்மைக் கதை:

பட்ஜெட்டில் எந்த எந்தத் துறைகளில் சிக்கனம் பிடித்து ஒதுக்கீட்டைக் குறைக்கலாம் என்று அவர் ஆராய்ந்து கொண்டிருந்த தருணம் அது. ஒரு விருந்தின் போது பல்வேறு இலாக்காக்களின் தலைவர்களும் அவரைச் சூழ்ந்து கொண்டு, ''இப்படி என் பங்கை வெட்டினால் என்ன செய்வது? என் துறையில் கத்தி விழுந்தால் எப்படிப் பிழைப்பது?'' என்றெல்லாம் புலம்பிக் கொண்டிருந்தார்கள். கோர்டன், எல்லோரிடமும் சமாதானமாக, ''கவலைப்படாதீர்கள், எப்படியாவது வெட்டு இல்லாமல் பார்த்துக் கொள்ள முயற்சி செய்கிறேன்'' என்று ஒரே மாதிரி கூறி வந்தார்.

இந்தச் சமயத்தில் கோர்டனின் மனைவி அவசரம் அவசரமாக வந்து, ''குறுக்கிடுவதற்கு மன்னிக்கணும்'' என்று கேட்டுக் கொண்டு கணவரிடம், ''முக்கியமான விஷயம்'' என்று ஆரம்பித்தாள். ''நமது கார் ஷெட் ஒழுகுகிறது; ரிப்பேர் பார்க்க வேண்டும் என்று எஸ்டிமேட் கேட்டிருந்தோமில்லையா? பன்னிரண்டாயிரம் டாலர் ஆகும் என்கிறான்!''

''என்னது!'' என்று பாதிச் சாப்பாட்டில் எழுந்து விட்டார் கோர்டன். ''பன்னிரண்டாயிரம் டாலரா? நான் எங்கே போவேன் பன்னிரண்டாயிரம் டாலருக்கு? அந்தக் கொள்ளைக்காரனிடம் ரிப்பேர் பார்க்கவே வேண்டாம் என்று சொல்லி விடு!'' என்று அலறினார்.

கோடி கோடியாக பட்ஜெட் தயாரித்துக் கொண்டிருந்தவர், 'வெட்டு வேண்டாம்; நிதி ஒதுக்கி விடலாம்' என்று தம்மைச் சுற்றி இருந்த பல்வேறு அரசு இலாக்காவினருக்கும் ஆறுதல் அளித்துக் கொண்டிருந்தவர், தமக்கு என்று வந்த போது, பைசா கணக்குப் பார்க்க ஆரம்பித்தார் என்பது, திரை உலகப் பாணியில் சொல்வதானால் கதையில் உள்ள மெஸ்ஸேஜ்!

கோர்டன் நம் நாட்டில் பிறந்த கோவிந்தனாக இருந்திருந்தால் இப்படி பயந்து அலறியிருக்க மாட்டார்! நிதானமாகப் பெண்டாட்டியிடம், ''நீ வீட்டுக்குப் போ; நான் கவனிச்சுக்கறேன்'' என்று கூறி விட்டுத் தனித்திருக்கும் போது ஒரு பிரபல காண்டிராக்ட் நிறுவனத்தை ஃபோனில் அழைத்துப் பேசியிருப்பார். ''நிதி அமைச்சகத்திலிருந்து கோவிந்தன் பேசறேன்'' என்று ஆரம்பித்திருப்பார். ஓரிரு மாதங்களுக்குள் அவர் வீட்டு கார் ஷெட், மாடியுடன் கூடிய ஒரு சொகுசு அவுட்ஹவுஸாகவே மாறியிருக்கும்! அடுத்தாற்போல் அந்த காண்டிராக்ட் நிறுவனம் ஏற்கும் ஒரு பொதுப் பணியின் எஸ்டிமேட்டில் இந்தச் செலவும் மாறு வேடத்தில் உட்புகுந்திருக்கும்!

என் நண்பர் ஒரு மத்திய அமைச்சரைப் பார்க்கப் போயிருந்த போது அவர் மனம் விட்டுப் பேசினார்: ''சம்பளத்தைத் தவிர ஒரு பைசா கண்ணால் பார்க்கிறதில்லை'' என்று உருக்கமாகச் சொன்னார். அது உண்மையாகக் கூட இருக்கலாம்! அப்போது சீருடை அணிந்த ஒரு 'பேரர்' ஆப்பிள் ஜூஸும் நெய்யில் வறுத்த பாதாம் பருப்பும் கொண்டு வந்து வைத்தார். சாப்பிடுமாறு உபசாரம் செய்தார் அமைச்சர். சகல வசதிகளுடன் மாளிகை போன்ற வீடு; ஃபோன்; மின்சாரம்; கார்; பெட்ரோல்; வேலைக்காரர்கள்; உணவு; உடை போன்ற எதற்கும் அமைச்சர்களோ அவர்கள் குடும்பத்தினரோ செலவழிப்ப தில்லை. அரசுத் துறை அல்லது கூட்டுறவுத் துறையில், பட்டுப் புடைவையோ வெண்ணெய்யோ எது தயாரானாலும் சரி, மந்திரி வீடுகளுக்கு அவ்வப்போது சப்ளை ஆகும். ஜஸ்டிஸ் ராமசாமி தமக்கு ஒதுக்கப்பட்ட தொகைக்கும் அதிகமாகக் கட்டில், மேஜை, சோபா முதலியன வாங்கச் செலவிட்டார் என்பது தான் இப்போது அவர் மீது - விசாரணையில் உள்ள - குற்றச்சாட்டு. மந்திரி வீட்டுக் கல்யாணம் என்றால் செலவைத் தனியார் துறை பங்கு போட்டுக் கொள்ளும். சாப்பாடு, பந்தல், கச்சேரி, ஜவுளி என்று ஒவ்வொரு ஐட்டத்தை ஒவ்வொருவர் கவனித்துக் கொண்டு விடுவார். டில்லியிலிருந்து ஓர் உயர் அதிகாரி சென்னை வந்தால் அவர் உபயோகத்துக்காக இங்குள்ள தனியார் நிறுவனங்களின் கார்கள் கியூவில் நிற்கும். தேர்தலில் எந்தக் கட்சிக்கு வெற்றி வாய்ப்பு என்று கணிக்கப்படுகிறதோ அந்தப் பக்கம் பெருந் தொழிலதிபர்கள் ஒட்டுமொத்தமாய்ச் சரிந்து பணத்தை அள்ளி விடுவார்கள்.

எல்லாவற்றையும் கடைசியில் விலை உயர்வாகவும், நேர்முக, மறைமுக வரிகளாகவும் கொடுத்து அழுவது நாம்தான். இதை மக்கள் புரிந்து கொள்ளாத வரை, அரசியல்வாதிக்கும் அதிகாரிக்கும் கொண்டாட்டம்தான்.

இனி, காங்கிரஸை வழி நடத்திச் செல்வது யார்?

✱ எஸ். மனோகரன், சங்கமங்கலம்.

? காந்தி, இந்திரா, ராஜீவ் என்று தலைவர்களை அழித்து விட்டால் காங்கிரஸ் கட்சியையே அழித்து விட்டதாகி விடுமா?

! காங்கிரஸ்காரர்களே காங்கிரஸை அழித்து விடாமலிருந்தால் காங்கிரஸை யாராலும் அழிக்க முடியாது. ஆனால் அந்த நம்பிக்கை நமக்கு ஏற்படவேண்டுமானால் பழங்காலம் போல் காங்கிரஸுக்குள் உட்கட்சி ஜனநாயகம் மலர வேண்டும்.

✱ எல். ராம்பிரபு, கும்பகோணம்.

? சினிமாவால் நாடகம் அழிய ஆரம்பித்த போது, நாடகக்காரர்கள் போராட்டம் நடத்தவில்லை. ஆனால் வீடியோவினால் சினிமா தடுமாறும் போது மட்டும் சினிமாக்காரர்கள் போராடுகிறார்களே, ஏன்?

! சினிமாவினால் நாடகம் அழிந்ததாகச் சொல்ல முடியாது. டீவியினால்தான் நாடகம் பயங்கரமாகப் பாதிக்கப்பட்டது. இப்போது சினிமாவும் பாதிக்கப்படவிருக்கிறது.

✱ ம. செந்தில்நாதன், மதுரை.

? 'ஜெயலலிதா கேட்டால் ஜனதா ஆதரவு தரும்' என்று சு. சுவாமி கூறுகிறாரே?

! யானை எறும்பிடம் போயா கரும்பு கேட்கும்? ராஜீவ் இல்லாத நிலையில் அம்மையார் ஆதரவு பி. ஜே. பி. பக்கம் திரும்பலாம் என்று கேள்வி!

✱ ஜி. ஜி. கிருஷ்ணன், விசலூர்.

? இனிகாங்கிரஸை வழிநடத்திச்செல்வது யார்?

! காங்கிரஸின் உயர் மட்டத் தேர்தல் குழு, அண்மையில் கூடிய போது, மேஜை முன் தலைமை இடத்தில் அமர்ந்திருந்தவர் ஆர். கே. தவான். மூத்த தலைவர் நரசிம்மராவ் உள்பட மற்ற பலரும் பக்கவாட்டில் தான் அமர்ந்திருக்கிறார்கள். ஆக, அதிகாரம் எங்கே, எதனால், யாரிடம் குவிந்திருக்கிறது என்பது புரிகிறது. சோனியா வோட்டுக்களைப் பெறுவதற்கான டம்மி தலைவராகத்தான் கருதப்பட்டார். அதைப் புரிந்து கொண்டு ஒதுங்கி விட்ட புத்திசாலி சோனியா நம் மதிப்பில் உயர்கிறார். கடமை உணர்வுடன் தலைமைப் பொறுப்பேற்கக் கூடிய நரசிம்மராவ், தேர்தல் முடிந்ததும் கருவேப்பிலை மாதிரி தூக்கி எறியப்படுவார். 'இப்போது காங்கிரஸ் தலைவரைத்தான் தேர்ந்தெடுக்கிறோம்; பிரதமரை அல்ல' என்று காங்கிரஸார் கூறுவதிலிருந்து, காங்கிரஸ் ஒருவேளை அனுதாப அலைகாரணமாகப் பெரும் பான்மை பெற்றால், பிரதமர் பதவிக்குப் பலப்பரீட்சை கடுமையாக இருக்கும் என்று புரிகிறது.


✱ அ. ராமச்சந்திரன், சென்னை.

? எஸ். ஏ. டாங்கே பற்றிச் சில வரிகள்?

! வாழ்நாள் முழுக்கத் தொழிற்சங்க



பி. ஜே. பி. பக்கம்...?



தலைமை இடத்தில்...

உரிமைகளுக்காகப் போராடியபோதிலும் பொறுப்புணர்ச்சி மிக்கவர். அன்று காவல் துறையினரிடம் அடிபட்டவர், இன்று காவல் துறை மரியாதை செலுத்த, இறுதி யாத்திரை கண்டார். இறுதிச் சடங்குக்காக அவர் வீட்டில் எல்லோரும் போயிருந்த போது அவர் வீடு கொள்ளையடிக்கப் பட்டது, துயருக்கு மேல் துயர் என்றாலும் கொள்ளையருக்குப் பிரமாதமாக ஒன்றும் அகப்பட்டு விடவில்லை என்பது கவனிக்கத்தக்கது. பொது வாழ்வு என்றாலே பணம் சேர்ப்பது என்றாகி விட்ட இன்றைய நிலையில் இதைப் புரிந்து கொள்வது கூடக் கஷ்டம்தான்!

✱ அ. பரக்கத் அலி, மாப்பிள்ளை குப்பம்.

? நடிகர்எஸ்.எஸ்.சந்திரன்டாக்டர்பட்டம் பெற்றது பற்றி...?

! தப்பாகப் புரிந்து கொண்டு விட்டார் போலிருக்கிறது; அதனால்தான் கத்தியால் குத்திப் பார்த்திருக்கிறார்!

✱ ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.

? 'காந்தியைச் சுட்டுக் கொன்றது நியாயம்தான்' என்று தீர்ப்புக் கூறுகிறாரே, பால்தாக்கரே?


! அரசியல் நிர்ப்பந்தங்கள் இப்படித்தான் சில சமயம் அசட்டுத்தனமாகப் பேச வைத்து விடும். அதற்காக வருத்தப்படும் நாளும் சீக்கிரமே வரும்.

✱ ஈ. டி. விஜயகுமார், ஈரோடு.

? பர்கூர் தொகுதியில் அனல் பறக்கும்

நீங்கள் கேட்டவை - தராசு


கருவேப்பிலை...?





சத்தியாய சுத்தி...

பொறுப்புணர்ச்சி





ஏற்றது சரியா?

பிரசாரத்தில் டி. ராஜேந்தர் ஈடுபட்டுள்ளது பற்றி...?

! அவர் போட்டுள்ள ரயில் செட் (ஆட்டோவுக்கு) கூட நீராவி இஞ்சின்தான் போலிருக்கே! அனல் பறக்கத்தான் செய்யும்!

❋ போத்தனூர் புலிச்சோழன், கோவை. ❋

? தேசிய அரசு அமைப்பது சாத்தியமா? அதன் அனுகூலம் என்ன?

! சுயநலமற்ற, பரந்த மனப்பான்மையுள்ள தலைவர்கள் இருந்தால் சாத்தியமே. அதாவது, 'அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா' என்பது போல! அனுகூலம் 1. எல்லாக் கட்சிகளிலிருந்தும் அறிவாற்றல் மிக்கவர்கள் அமைச்சரவைக்குக் கிடைப்பார்கள், 2. நிலையான ஆட்சி அமையும், 3. நல்லது கெட்டது கண்ணியமான முறையில் அமைச்சரவையிலும் நாடாளுமன்றத்திலும் விவாதிக்கப்பட்டுச் சரியான முடிவுகள் எடுக்கப்படும், 4. அயல்நாடுகளிடையே நமது மதிப்பு உயரும், 5. எந்தக் கட்சியும் பெரும்பான்மை பெறாமல் 'தொங்கு' நாடாளுமன்றம் ஏற்பட்டாலும் அடிக்கடி தேர்தல் வராது. அதே சமயம் ஜனநாயகமும் நிலைக்கும். 6. ஊழல் இராது.

❋ எஸ். வெங்கடேசன், கும்பகோணம்.

? பாகிஸ்தான் அளித்த விருதை மொரார்ஜி தேசாய் ஏற்றுக் கொண்டது சரியா?

! போஃபோர்ஸ் புகழ் ஸ்வீடன் நாட்டில் தான் நோபெல் பரிசு வழங்கப்படு கிறது. மார்க்கோஸ் - இமெல்டா மார் கோஸ் அரசாண்ட பிலிபைன்ஸ் நாட்டில் தான் மக்ஸைஸாய் பரிசு வழங்கப்படு கிறது. இந்தியாவும் நேரு விருது, இந்திரா விருது என்று பல உயர் பரிசுகளை அயல் நாட்டவருக்கு வழங்குகிறது. இங்குள்ள தலைவர்கள் எல்லாரும் சத்தியசீலர்களா? பாகிஸ்தானிடம் நமக்குள்ள விரோதத்தைப் பரிசின் மேல் ஏற்றிப் பார்க்கக் கூடாது.

❋ சி. சிவகாமசுந்தரி, குடந்தை.

? புதிய திருப்பமாக நீங்கள் எதைக் கருது'கிறீர்கள்?

! ராஜீவின் மறைவுக்குப் பிறகு தொழில் - வர்த்தகப் பெரும் புள்ளிகள் பி. ஜே. பி. பக்கம் சரிவதை.

❋ சங்கை மனோ, பழையனூர்.

? ராஜீவின் மரணம் காங்கிரஸ் கட்சிக்குக் கேள்விக்குறியைத் தோற்றுவிக்குமா?

! ராஜீவுக்கு இணையான அடுத்த தலைவர் கட்சியால் உருவாக்கப்படாத நிலையில், கேள்விக்குறி ஏற்கெனவே தோன்றி விட்டது. இதனை ஆச்சர்யக் குறியாக மாற்ற ஒரே வழி, கட்சிக்கு வெளியே இருந்து ஒருவரை–உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் அனைவரும் பெருமதிப்பு வைக்கக்கூடிய ஒருவரை - தலைவராக ஏற்பது மட்டுமின்றி, அடுத்த பிரதமராகவும் அறிமுகம் செய்வதுதான். அப்படிப்பட்ட சகலவிதத்திலும் தகுதி பெற்ற அறிஞர்கள் நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள் (உம்: அலெக்ஸாண்டர்). இப்படிச் செய்தால் வோட்டும் விழும்; நிலையான நல்லாட்சியும் கிடைக்கும். நாடும் உயரும். ஆனால் அதற்கு உரிய பரந்த மனம் இன்று காங்கிரஸில் யாருக்கும் இல்லையே!

❋ ஏ. எம். பழனிசாமி, கோவை.

? இ. காங்கிரஸ் அனுதாப அலையால் வெற்றியைச் சந்திக்க முடியுமா?

! அனுதாப அலையை வைத்து வெற்றி பெற்று விடலாம் என்று எண்ணும் போது, திடுமென்று பண அலை வற்றி விட்டது தான் இன்று காங்கிரஸ் வேட்பாளர்களுக்குப் பெருங்கவலை அளிப்பது! ராஜீவ் இல்லாத நிலையில் வேட்பாளர்களுக்கு வந்து சேர வேண்டிய பணத்தை யார் கொடுப்பார்கள் என்று புரியாமல் தவிக்கிறார்கள்!

❋ ரூ. 20 பரிசு பெறுபவர்:
போத்தனூர் புலிச்சோழன்,
''புலி இல்லம்''
140, அங்கண்ணன் தேவர் பூமி,
கோவை - 45.



சேரன்-பாண்டியன்

சரித்திரக் கதையோ என்கிற சந்தேகத்தைத் தூண்டும் சம்பந்தமில்லாத தலைப்பு. உண்மையில், கிராமியப் பின்னணி கொண்ட வழக்கமான தமிழ் சினிமாக் கதை. பணக்காரார், அவரைக் கண்டு அஞ்சி ஒதுங்கும் ஊர் மக்கள், மேல் ஜாதி - கீழ் ஜாதி விவகாரம், கோயில், திருவிழா, ஜல்லிக்கட்டு எட்செட்ரா, காதல் பிரச்னை மற்றும் கவுண்டமணி, செந்தில் ஜோடி. என்றாலும், எங்கிருந்தோ அந்தக் கிராமத்துக்கு வந்து சேரும் அனாதை இளைஞர் ஆனந்த் பாபுவின் பார்வையில், கதையை விவரிக்கும் அணுகுமுறை, ஒரு வித்தியாசத்தையும் விறு விறுப்பையும் கொண்டு தருகிறது.

பெரிய கவுண்டர் - விஜயகுமார். சின்னக் கவுண்டர் - சரத்குமார். செருக்கிலும், முன் கோபத்திலும், எதிராளியை அடக்கியாளும் திமிர்த்தனமான போக்கிலும் இருவருமே துலாக்கோலில் சமமாக எடையிடுகிறார்கள். எல்லாக் கல்யாண குணங்களிலும் பெரிய கவுண்டருக்குச் சற்றும் சளைக்காத சின்னக் கவுண்டருக்கு, முன்னவரைவிட நடிப்பில் ஒரு நூலிழை உயர்ந்து விளங்குவதற்கான வாய்ப்பு, அத்தனை விரோதத்திலும் அண்ணன் என்கிற வகையில் பெரியவரிடம் சின்னவர் வைத்திருக்கும் அந்த மரியாதை. முரட்டுக்காளையை அடக்கும் மூக்கணாங்கயிறாக அது இயங்கி, சரத்குமாரின் நடிப்பில் மெருகு சேர்க்கிறது.

குனிந்து குனிந்து கும்பிட்டுக் கும்பிட்டே குழிபறிப்பதில் நாகேஷிடம் ஒரு நாசூக்கு தென்படுகிறது என்றால், வெகுளித்தனமும் விளையாட்டுத்தனமும் நிரம்பி வழியும் ஆனந்த் பாபுவிடம் அவ்வப்போது வெளிப்படும் வெட்க உணர்வும் வேதனைப் பார்வையும் கவை கூட்டுகின்றன.

பாசமும் பரிவும் அடக்கமும் அரவணைப்பும் நிரம்பிய பதவிசான பாத்திரப் படைப்பு சித்ராவினுடையது. அவருடைய உயிர்த் தியாகத்தின் விளைவாக அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையே கட்டப்பட்டிருந்த மதில் சுவர் உடைந்து சிதறுகிறது.

வசனம்: ஒரே கோயம்புத்தூர் நெடி.


பாடல்கள், இசை: சௌந்தர்யன். இனிமைதான் என்றாலும் ஏழு பாடல்கள்! 'அளவுக்கு மிஞ்சினால்' என்கிற அந்தப் பிராசீனப் பழமொழியை நினைவுக்குக் கொண்டு வந்து விடுகிறது.

திரைக்கதை, இயக்கம்: கே. எஸ். ரவிக்குமார். ஒரே வார்த்தையில் - பேஷ்.

- சி. ஆர். கே.

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர்: சீதா ரவி.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்க்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் — சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/-; விமானத் தபால்: ரூ. 350/-.

Registered as Newspaper in Srilanka



சிறிய திரை + தொடர்ந்து பார்த்த காட்சிகள் + எதிரில் பளிச்சிடும் வெளிச்சம் = களைப்புற்ற கண்கள். அவற்றை தேய்த்து விட்டுக் கொள்வதினால் பயன் ஒன்றும் இல்லை. களைப்புற்ற கண்களுக்குத் தேவை பாதுகாப்பான, மென்மையான, அக்கறை மிக்க ஆப்ட்ரெக்ஸ் ஐ-பாத். இதை ஐ-கப்பில் ஊற்றி கண்களை சுழற்றிக் கழுவுங்கள். ஆப்ட்ரெக்ஸ் கண்களின் களைப்புணர்ச்சியை அகற்றி இதமளிக்கிறது. மேலும், அவற்றை மெல்லமைதிப்படுத்துகிறது. இமைப் பொழுதில் கண்களுக்கு புத்துணர்ச்சியை அளிக்கும் ஆப்ட்ரெக்ஸ் ஐ-பாத் உலகெங்கும் பயன்படுத்தப்படுகிறது.



இமைப் பொழுதில் புத்துணர்ச்சி பெற்ற கண்கள்

ஆப்ட்ரெக்ஸ் ஐ லோஷன்